# பெரியார் பல்கலைக்கழகம்

NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)

State University - NIRF Rank 56 - State Public University Rank 25

Salem-636011, Tamilnadu, India

## தொலைநிலை மற்றும் இணையவழி கல்வி மையம்

## இளங்கலைப் பட்ட படிப்புகள் (BA. B.Sc., B. Com., BCA, BBA)

முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

# பொதுத்தமிழ் - 2

# 24DUFTA02

## 2024 – ஆம் கல்வியாண்டு முதல் பயிலும் மாணவர்களுக்குரிய பாடநூல்

**Prepared By:**

**Centre for Distance and Online Education (CDOE)**
**Periyar University, Salem – 11.**

| அலகு | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | **பக்தி இலக்கியங்கள்**<br>அ. திருநாவுக்கரசர் - தேவாரம் - “ நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்” எனத் தொடங்கும் பதிகம் (பத்து பாடல்கள்)<br>ஆ. ஆண்டாள் - திருப்பாவை (முதல் பத்து பாசுரம்) | 1 - 18 |
| 2 | **பக்தி இலக்கியங்கள்**<br>அ. வள்ளலார் - திருவருட்பா - அருள் விளக்க மாலை - (முதல் பத்து பாடல்கள்)<br>ஆ. எச். ஏ கிருட்டிணப்பிள்ளை - இரட்சணிய மனோகரம் - பால்ய பிரார்த்தனை<br>இ. குணங்குடி மஸ்தான் சாகிபு - பராபரக் கண்ணி (முதல் பத்து கண்ணிகள்) | 19 - 43 |
| 3 | **சிற்றிலக்கியங்கள்**<br>அ. தமிழ்விடு தூது (முதல் இருபது கண்ணிகள்)<br>ஆ. திருக்குற்றாலக் குறவஞ்சி – திரிகூடராசப்பக்கவிராயர் - குறத்தி மலை வளம் கூறுதல்<br>இ. முக்கூடற்பள்ளு - நாட்டு வளம் | 44 - 65 |
| 4 | **பாடம் தழுவிய இலக்கிய வரலாறு (பல்லவர் காலம், நாயக்கர் காலம்)**<br>1. பன்னிரு திருமுறைகள்<br>2. நாலாயிர திவ்யப் பிரபந்தம்<br>3. திருமடங்களின் தமிழ்ப்பணி<br>4. சிற்றிலக்கியங்கள்<br>5. சைவ சித்தாந்த சாத்திரங்கள் | 66 - 87 |
| 5 | **மொழித்திறன்: போட்டித் தேர்வுத்திறன்**<br>1. தொடர் வகைகள்<br>2. மரபுத்தொடர், பழமொழிகள்<br>3. பிறமொழிச் சொற்களைக் களைதல்<br>4. வழுச்சொற்கள் நீக்குதல்<br>5. இலக்கணக்குறிப்பு அறிதல் | 88 - 131 |

# அலகு – 1 பக்தி இலக்கியம்

## அ.திருநாவுக்கரசர் - தேவாரம்

**திருநாவுக்கரசர்**

திருநாவுக்கரசர் **திருமுனைப்பாடி நாட்டுத் திருவாமூரில்** வேளாளர் குலத்தில் **புகழனார், மாதினியார்** ஆகியோருக்குப் புதல்வனாகவும் **திலகவதியாருக்குச்** சகோதரனாகவும் பிறந்தவர். இவரின் இயற்பெயர் **மருள்நீக்கியார்**. சிறிய வயதிலேயே பெற்றோரை இழந்து, சகோதரி திலகவதியாரால் வளர்க்கப்பெற்ற இவர், சமண சமயத்தைச் சேர்ந்து **தருமசேனர்** என்னும் பட்டத்தினைப் பெற்றார்.

தமக்கை திலகவதியாரின் வேண்டுகோளுக்கிணங்கி இறையருளால் நாவுக்கரசருக்குச் சூலை நோய் உண்டானது. அந்நோயினைச் சமணர்களால் தீர்க்க இயலாதபோது, தன்னுடைய தமக்கையார் கொடுத்த திருநீற்றாலும் ஐந்தெழுத்து போதனையாலும் நோய் நீங்கப்பெற்றார். மீண்டும் சைவ சமயத்தில் சேர்ந்தார். ‘‘**என் கடன் பணி செய்து கிடப்பதே**’’ என்றுகூறி உழவாரத்தொண்டு ஆற்றிய இவர் பாடியது தேவாரப் பாடல்கள் ஆகும்.

**தேவாரம்**

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகப் போற்றப்பெறுபவர் சிவபெருமான். இவரைப் போற்றிப்பாடும் பாடல்கள் **பன்னிருதிருமுறைகள்** ஆகும். அவற்றுள் முதல் **ஏழு திருமுறைகள் தேவாரம்** என்றழைக்கப்படுகின்றன. தே – தெய்வம். ஆரம் - மாலை. தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை என்பதால் தேவாரம் என்று அழைக்கப்பெற்றது. திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும் திருநாவுக்கரசர் பாடிய பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகவும் சுந்தரர் பாடிய பாடல்கள் ஏழாம் திருமுறையாகவும் தொகுக்கப்பெற்றுள்ளன.

**திருநாவுக்கரசர் தேவாரம்**

பன்னிருதிருமுறைகளில் திருநாவுக்கரசர் தேவாரம் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாக அமைந்துள்ளது. இதில் திருநாவுக்கரசரின் **ஆறாம்** திருமுறையில் இடம்பெற்றுள்ளது **மறுமாற்றத் திருத்தாண்டகம்.**

திருநாவுக்கரசர் சைவ சமயம் சேர்ந்தார் என்பதையறிந்தால் பல்லவ அரசனும் சைவ சமயத்தைச் சேர்ந்துவிடுவான் என்று அஞ்சினார்கள் சமணர்கள். அதனால் அரசனிடம் சென்று திருநாவுக்கரசர் பொய்யுரைத்து, தமக்கை திலகவதியாருடன் சேர்ந்து, சைவ சமயத்தில் சேர்ந்து கொண்டார் என்று புகார் கூறினர். இதனைக் கேட்ட பல்லவ மன்னன் அதிகைப்பதி என்னும் அமைச்சரை நோக்கி, திருநாவுக்கரசரைக் கொண்டு வரும்படிக் கூறினார். அமைச்சரும் வீரர்களும் சென்று அரசனின் கட்டளையைத் தெரிவித்து, அரண்மனைக்கு வரும்படி திருநாவுக்கரசரைப் பணித்தனர்.

அரண்மனை வர இயலாது என்று மறுப்புத் தெரிவித்து திருநாவுக்கரசர் பாடியதே இப்பதிகமாகும். அரசனின் கட்டளைக்கு மறுப்புத் தெரிவித்துப் பாடியதால் இது மறுமாற்றத் திருத்தாண்டகம் என்னும் பெயர் பெற்றது.

**நாமார்க்கும் குடியல்லோம்**

**"நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்**
**நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்**
**ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்**
**இன்பமே எந்நாளுந் துன்பம் இல்லை**
**தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான**
**சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்**
**கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்**
**கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே!."** 1

'எவருக்கும் ஆட்படாத தன்மையுடையவராய், சங்கரன் என்னும் பெயரினையும் சங்கினால் செய்யப்பெற்ற வெண்குழையை காதில் அணிந்தவனுமாகிய இறைவனுக்கே நாங்கள் அடிமையாவோம். மலர் போன்ற சிவந்த அடிகளை உடைய இறைவனை நாங்கள் அடைந்தோம். ஆதலால் இவ்வுலகில் எவ்வளவு உயர்ந்து நிற்கும் பெரியராக இருந்தாலும், நாங்கள் யாருக்கும் அடிமை இல்லை. எமனுக்கும் அஞ்சமாட்டோம். நரகத்திற்குச் சென்றாலும் வேதனையை அடையமாட்டோம். பொய் பேசமாட்டோம். எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருப்போம். நோயானது இது என்று அறியமாட்டோம். யாரிடத்தும் சென்று ஏதேனும் ஒன்றை வேண்டிநின்று, கூனிக்குறுகிப் பணிந்து நிற்கமாட்டோம். எந்நாளும் எங்களுக்குள்ளது இன்பமேயன்றித் துன்பமில்லை.

**சொற்பொருள் விளக்கம்**

1. நமனை – எமன்
2. நடலை – வேதனை
3. பிணி – நோய்
3. குடியல்லா – ஆட்படாத

**இடர்கள் தீர்ந்தோம்**

**"அகலிடமே இடமாக ஊர்கள் தோறும்**
**அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்**
**புகலிடமாம் அம்பலங்கள் பூமி தேவி**
**உடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்று மெய்யே**
**இகலுடைய விடையுடையான் ஏன்று கொண்டான்**
**இனியேதுங் குறைவிலோம் இடர்கள் தீர்ந்தோந்**
**துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லுஞ்**
**சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே!."** 2

அகன்ற இடத்தினையுடைய இவ்வுலகில் ஊர்கள்தோறும் வாழும் மக்கள் தங்களுக்காகச் சமைத்து உண்ணும்பொழுது, அதனைச் சிவனடியார்களுக்கும் தந்து உண்ணச் செய்வார்கள். அதனால் சிவனடியார்கள் உணவுவேண்டி எங்கும் கேட்க வேண்டியதில்லை.

அவர்கள் தங்குவதற்கு அம்பலங்கள் உள்ளன. பூமாதேவி அவர்களைத் தாங்கி இருத்தலால், அவர்களுக்கு எந்தவிதமான இடையூறுகளும் இல்லை. இது பொய்யில்லை. போரிடும் வலிமை வாய்க்கப்பெற்ற விடையேற்றினை வாகனமாகக் கொண்டுள்ள சிவபெருமான் எங்களை ஏற்றுக் கொண்டான். இனி எங்களுக்கு எவ்விதக் குறையும் இல்லை. இடர்களும் இல்லை. ஆதலால் பொன்னால் ஆகிய அணிகலன்களை அணிந்த அரசர்களின் சொற்களை ஏற்று நாங்கள் இனி வாழமாட்டோம். அதனால் எங்களுக்கு எவ்விதமான குற்றங்களும் நேராது.

**சொற்பொருள் விளக்கம்**

1. அட்டுஉண்பார் - இல்லத்தில் சமைத்து உண்பவர்
2. ஐயம் - பிச்சை
3. புரட்டாள் - காப்பாற்றுவாள்
4. இகல் - போர்
5. ஏன்று – ஏற்று
6. துகில் - ஆடை
7. பொன்பூண்டு திரிவோர் – அரசர்கள்
8. துரிசு – குற்றம்.

**மனையிற்சேரோம்**

**“வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம்**
**மாதேவா மாதேவா என்று வாழ்த்தி**
**நீராண்ட புரோதாயம் ஆடப் பெற்றோம்**
**நீறணியுங் கோலமே நிகழப் பெற்றோம்**
**காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்**
**கன்மனமே நன்மனமாக் கரையப் பெற்றோம்**
**பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்**
**பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே.” 3**

கச்சணிந்த மாதருடன் சேர்ந்து வாழும் இல்லறத்திலிருந்து நீங்கி, தனியே சிவனடியாராய் வாழ்கின்றோம். சமணரிடம் பழகிய நிலையில் பெற்ற தீய பழக்கங்கள் ஒழியப் பெற்றோம்.

மகாதேவா! மகாதேவா! என்று இறைவனை வாழ்த்தி, அதிகாலையில் எழுந்து நீராடி, திருநீறணியும் நற்பழக்கத்தினைச் சைவ சமயம் சார்ந்த பின் பெற்றோம். கரிய மேகம் பொழியும் மழையைப்போலக் கண்களில் கண்ணீர் பொழிய, கல்லாய் இருந்த

மனம் இன்று நன்மனமாய் மாறப் பெற்றோம். ஆதலால் யானைமேல் அமர்ந்து உலகினை ஆளும் வல்லமை படைத்த மன்னர்களின் ஆணைக்கு நாங்கள் கட்டுப்படமாட்டோம். மன்னரின் ஆணைக்கு இல்லறத்தாரே கட்டுப்படுவர். நாங்கள் பற்றற்ற துறவி. ஆதலால் அவருடைய ஆணை எங்களை ஒன்றும் செய்யாது.

**சொற்பொருள் விளக்கம்**

1. புரோதயம் - சூரியன் தோன்றுவதற்கு முன்
2. பகடு – யானை
3. மனை – வீடு
4. மாதேவா – மகாதேவன்
5. நீறணி – திருநீர் இட்டுக்கொள்ளுதல்
6. கல்மனம் - திடமான மனம்

**பிறப்பிற் செல்லோம்**

**"உறவாவார் உருத்திரபல் கணத்தி னோர்கள்**
**உடுப்பனகோ வணத்தொடுகீ ளுளவா மன்றே**
**செறுவாருஞ் செறமாட்டார் தீமை தானும்**
**நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்**
**நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்**
**நமச்சிவா யஞ்சொல்ல வல்லோம் நாவாற்**
**சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட**
**சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே." 4**

சிவனடியார்களுக்கு உறவினராக இருப்பவர்கள் சிவகணங்கள். சிவனடியார்கள் கோவண ஆடையை உடுத்துபவர்கள். ஆதலால் அவர்கள் பகைவர்களின் சீற்றத்தினால் தாக்கப்படமாட்டார்கள். அவர்களுக்குத் தீமையும் நன்மையாகவே விளங்கும். பிறப்பற்றவர்கள். தேன்நிறைந்து பொன்போல் திகழும் கொன்றை மாலையை அணிந்த சிவபெருமானின் திருப்பெயராகிய 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்தினைக் கூறும் அவர்கள் வலிமையுடையவர்கள். மீனைக் கொடியாகக் கொண்ட மன்மதனை எரித்துச் சாம்பலாக்கிய நெற்றிக்கண் கொண்ட இறைவனைத் தொடர்பவர்கள். ஆதலால் நாங்கள் எதற்கும் அஞ்சாமாட்டோம்.

**சொற்பொருள் விளக்கம்**

1. நறவார் – பிறப்பற்றவர்கள்
2. நறுந்தார் – மணமுடைய பாலை
3. சுறவாருங்கொடி – மீன்கொடி
4. சுயர்நயன – எரித்தல்
5. சோதி – ஒளி

**சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்**

**"என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்**
**இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை**
**சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோஞ்**
**சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்**
**ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே**
**உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்**
**பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்**
**புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே." 5**

இறந்த பிரம்மவிட்டுணுக்களின் தலையினை மாலையாக அணிந்துள்ள சிவபெருமானின் திருவடியினை அடைந்து நாங்கள் புண்ணிய பலனைப் பெற்றவர்களானோம். அதனால் நாங்கள் எந்தவிதமான குறையும் இல்லாதவராக உள்ளோம். சமணரைவிட்டுப் பிரிந்த அன்றே மிக்க நோய் போன்றவர்கள் எங்களைவிட்டுப் பிரிந்து சென்றார்கள். நாங்கள் யாருக்காகவும், எப்பொழுதும், எந்தச் சூழ்நிலையிலும் கொண்ட கொள்கையிலிருந்து பின்வாங்கமாட்டோம். இந்தப்பெரிய நிலவுலகில் எங்களுக்கு எதிரானவர்கள் என்று எவருமில்லை. சிறுதெய்வங்களைச் சேரமாட்டோம். இதனை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

**சொற்பொருள் விளக்கம்**

1. இடைதல் - பின்வாங்கல்
2. எதிராவர் - இணையாவார்
3. அன்றே – சமணரைப்பிரிந்த அன்றே
4. உறுபிணி – கொடிய நோய்
5. செறல் - வருந்துததல்
6. பொன்றினார் - இறந்த பிரம்மவிட்டுணுக்கள்

**கடுமையொடு களவற்றோமே!**

**"மூவுருவின் முதலுருவாய் இருநான் கான**
**மூர்த்தியே யென்றுமுப் பத்து மூவர்**
**தேவர்களும் மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்**
**செம்பவளத் திருமேனிச் சிவனே யென்னும்**

**நாவுடையார் நமையாள வுடையா ரன்றே**
**நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான**
**காவலரே யேவி விடுத்தா ரேனுங்**
**கடவமலோங் கடுமையொடு களவற் றோமே." 6**

மும்மூர்த்திகளாகிய பிரம்மன், திருமால், உருத்திரன் ஆகியோர்களுக்கும் மூவுலகிற்கும் முதல் உருவானவன். அட்டமூர்த்தியாய் விளங்குபவன். முப்பத்துமூன்று வகையான தேவர்களுக்கும் அவர்களுக்கு மேலானவர்களுக்கும் (இருடிகளுக்கும்)

தலைவனாக விளங்குபவன். இத்தகு பெருமானை திருவடியார்கள் ‘சிவன்’ என்ற பெயரிட்டு, ‘எம்மை ஆளும் தன்மையுடையவரே!’ என்று அழைப்பர். எம்மை அழைத்துச் செல்ல வந்துள்ள நீங்கள், இந்தச்சிறு நிலப்பகுதியை ஆளும் பல்லவ மன்னனின் ஏவலாளர்கள். நீங்களன்றி நாவலந்தீவு முழுவதையும் ஆட்சி செய்யும் மன்னன் எம்மை அழைத்து வருமாறு ஆணையிட்டிருந்தாலும் நாங்கள் அதை ஏற்கமாட்டோம். பிறருக்குத் துன்பம் தரும் கடுமையான செயலையோ, களவோ செய்யமாட்டோம். இந்தக் கீழ்க்குணங்கள் எதனையும் நாங்கள் பெறாததினால் உங்கள் அரசரின் இந்த ஆணையை நாங்கள் ஏற்கமாட்டோம்.

**சொற்பொருள் விளக்கம்**

1. மூவுருவின் முதலுரு - மூவுலகுக்கும் முதலாவன்
2. இருநான்கு – எட்டு உருவான சிவன்

**பேசுவது பிழையற்றோமே!**

**“நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும்**
**நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி**
**அற்பமொடு பெருமையுமாய் அருமை யாகி**
**அன்புடையார்க் கெளிமையதாய் அளக்க லாகாத்**
**தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும்**
**ஆகின்ற தன்மையனை நன்மை யோடும்**
**பொற்புடைய பேசக் கடவோம் பேயர்**
**பேசுவன பேசுதுமே பிழையற் றோமே.” 7**

நிற்பவனாய், நடப்பனவாய், நிலம், நீர், தீ, காற்று, வானமுமாய், மிக நுண்ணிய அணு போன்ற சிறுபொருளிடத்தும், அளவிடமுடியாத பெரிய பொருளிடத்தும், அருமையுடன் அன்போடு போற்றப்படுபவர்க்கு எளியவனாகவும், அளவிட்டுக் கூற இயலாத தன்மையுள்ள உயிர்க்கு மேற்பட்ட சதாசிவமாகவும், தானும், யானுமாய் ஆகின்ற தன்மை கொண்ட சிவபெருமானைக் குறித்து நன்மையால் மிகப் பேசுவோம். மனம் வேறுபட்ட பேய்க்குணம் கொண்டார் எது பேசினாலும் பேசட்டும். அதுபற்றி நாங்கள் கவலைப்படப் போவதில்லை. நாங்கள் பிழையற்றவர்களாக இருக்கின்றோம்.

**சொற்பொருள் விளக்கம்**

1. தத்பரம் - உயிர்க்கு மேம்பட

**நித்தலும் நினையப் பெற்றோம்**

**“ஈசனையெவ் வுலகினுக்கும் இறைவன் றன்னை**
**இமையவர்தம் பெருமானை எரியாய் மிக்க**
**தேசனைச் செம்மேனி வெண்ணீற் றானைச்**
**சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய் கின்ற**
**நேசனை நித்தலும் நினையப் பெற்றோம்**
**நின்றுண்பா ரெம்மை நினையச் சொன்ன**
**வாசக மெல்லாம் மறந்தோ மன்றே**
**வந்தீரார் மன்னவனா வான்றா னாரே.” 8**

சிவபெருமானே எவ்வுலகினுக்கும் இறைவன். விண்ணவர்களுக்குத் தலைவன். தீப்பிழம்பு போன்று ஒளிரும் மேனியில் திருவெண்ணீறு பூசியவன். மலையரசனின் மகளாகிய உமையம்மையை விரும்பும் நேசன். அவனை நாங்கள் நாள்தோறும் போற்றி வணங்கும் பேறுபெற்றோம். நின்று உண்பவர்களான சமணர்கள் கூறிய சொற்கள் அனைத்தையும் அவர்களைவிட்டு வந்தபொழுதே நான் மறந்துவிட்டேன். உம்முடைய அரசர் கூறும் பணியினைச் சமணர்கள் கேட்பார்கள். சிவனடியார்கள் அதனைச் செவிமடுக்கமாட்டார்கள். ஆதலால் நீங்கள் இங்கு வந்தது ஏன்? உங்களின் மன்னர்தான் யார்? மன்னரால் குறிப்பிடப்பட்டவர்தாம் யாவர்? இங்கு வந்த உங்களுக்கும் எங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆதலால் நாங்கள் யார்க்கும் அடிபணியமாட்டோம். நீங்கள் செல்லுங்கள்.

**சொற்பொருள் விளக்கம்**

1. எரி – தீப்பிழம்பு
2. வெண்ணீற்றிணை, வெண்ணீற்றினை
3. நீருடன் - குழைத்துப்பூசிய திருமேனி
4. சிலம்பரையன் - மலையரசன்
5. வாசகம் - சொல்.

**படியோம் நாமே!**

**“சடையுடையான் சங்கக் குழையோர் காதன்**
**சாம்பலும் பாம்பு மணிந்த மேனி**
**விடையுடையான் வேங்கை யதள்மே லாடை**
**வெள்ளிபோற் புள்ளியுழை மான்றோல் சார்ந்த**
**உடையுடையான் நம்மை யுடையான் கண்டீர்**
**உம்மோடு மற்று முளராய் நின்ற**
**படையுடையான் பணிகேட்கும் பணியோ மல்லோம்**
**பாசமற வீசும் படியோம் நாமே.” 9**

ஈசன் சடைமுடியை உடையவர். திருச்செவியில் சங்கினால் செய்யப்பெற்ற குழையை அணிந்தவர். சாம்பலைத் திருமேனியில் பூசியுள்ளவர். பாம்பினை ஆபரணமாக அணிந்த மேனியை உடையவர். விடை வாகனத்தை உடையவர். இடையில் புலித்தோலினை உடுத்தியவர். மான்தோலினை மேலாடையாக உடையவர். நம்மை அடிமையாகக் கொண்டு நம்மை ஆள்பவர் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களோடு மற்றவர்களும் வந்து உள்ளார்கள். படைவீரர், அலுவலர், மற்றும் ஏனையோரையும் சேர்த்து அனுப்பியுள்ள மன்னனின் கட்டளையினை நாங்கள் கேட்டுப் பணியோம். ஏனென்றால் நாங்கள் பற்றற்ற அடியவர்கள் ஆவோம்.

**சொற்பொருள் விளக்கம்**

1. உழை – மானில் ஓரினம்
2. விடை – காளை
3. குழை – காதணி

**தேவாதி தேவன்**

**"நாவார நம்பனையே பாடப் பெற்றோம்**
**நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்**
**ஆவாவென் றெமையாள்வான் அமரர் நாதன்**
**அயனொடுமாற் கறிவரிய அனலாய் நீண்ட**
**தேவாதி தேவன் சிவனென் சிந்தை**
**சேர்ந்திருந்தான் தென்றிசைக்கோன் றானே வந்து**
**கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங்**
**குணமாகக் கொள்ளோமெண் குணத்து ளோமே." 10**

நாவின் ஆசை தீர நாங்கள் சிவபெருமானைப் போற்றிப் பாடினோம். நாணமற்றவராகிய உடையணியாத சமணர் எம்மை விரும்பாதவாறு அவர்களிடமிருந்து விலகினோம். 'வா' என்று எம்மை அழைத்து, எங்களை ஆள்பவர் தேவர்களின் தலைவனான சிவபெருமானே ஆவார். அவர் பிரம்மனும் திருமாலும் அடிமுடியைக் காண இயலாத தீப்பிழம்பாகி நின்ற தேவாதி தேவர். எங்களின் சிந்தையில் சேர்ந்திருப்பவர். தென்திசைத் தலைவனான எமனே வந்து எம்மைக் குற்றேவல் செய்யும்படி பணித்தாலும், அதனை ஒருபொருட்டாகக் கூட நாங்கள் கருதமாட்டோம். ஏனெனில் எம்பெருமானுக்குரிய எண்குணங்கள் எங்களுக்கும் உண்டு. எனவே அரசனின் கட்டளையைக் கூறிக்கொண்டு நீங்கள் இங்கு நிற்க வேண்டாம்' என்று தம்மை அழைத்துச்செல்ல வந்தவர்களிடம் கூறுகிறார் திருநாவுக்கரசர். இதன்மூலம் சிவபெருமானின் தன்மையினையும் திருநாவுக்கரசரின் பக்தித்திறத்தினையும் அறியலாம்.

**சொற்பொருள் விளக்கம்**

1. நாவார – நாவின் ஆசை தீர
2. நாணற்றார் - நாணற்ற சமணர்கள்
3. அமரர் நாதன் - தேவர் தலைவன்
4. அயன் - பிரம்மன்.

---

**அலகு – 1 பக்தி இலக்கியம்**

**ஆ. ஆண்டாள் - திருப்பாவை**

**ஆண்டாள்**

பெரியாழ்வாரால் நந்தவனத்தில் துளசிச்செடியின் அடியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு, கோதை என்று பெயர் சூட்டப்பெற்று வளர்க்கப் பெற்றவர் ஆண்டாள். திருமாலுக்குக் கட்டிவைத்த மலர்மாலையைத் தான் சூடிப் பின் திருமாலுக்குச் சூட்டியதால், 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்று அழைக்கப்பெற்றவர். "மானிடர்க்கென்று பேச்சுப்படில்

வாழ்கில்லேன்'' என்று கூறிய ஆண்டாள், திருமாலையெண்ணி திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய இரு நூல்களை இயற்றியுள்ளார்.

**திருப்பாவை**

திருப்பாவைக்கு ஆண்டாள் வைத்த பெயர் 'சங்கத் தமிழ் மாலை முப்பது' என்பதாகும். பாவை நோன்பு மேற்கொள்ளும் விதத்தையும் அதற்குக் கிடைக்கும் பலன்களையும் இந்நூலுள் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார் ஆண்டாள்.

**நீராட அழைத்தல்**

ஆண்டாள் மார்கழி மாதத்தில் நீராடி பாவை நோன்பு மேற்கொள்ள ஆயர்பாடிப் பெண்களைத் தன்னுடைய பாடல் மூலம் அழைக்கின்றார்.

**''மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!**
**சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீகாள்!**
**கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்**
**ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்**
**கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்**
**நாரா யணனே நமக்கே பறைதருவான்**
**பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்''** 1

'அழகிய அணிகலன்களை அணிந்த, செல்வச் சிறப்புடைய ஆயர்பாடியில் வாழும் கன்னிப்பெண்களே! இது மாதங்களில் சிறந்ததான மார்கழி மாதம். முழுநிலவு காணப்படும் பௌர்ணமி நாள்.

இந்நாளிலே கூரிய வேலினையும் கொடூரமான போர்த்தொழிலினையும் உடைய நந்தகோபாலரின் மகனும் அழகு நிறைந்த கண்களை உடையவளாகிய யசோதையின் இளஞ்சிங்கம் போன்ற செல்வ மகனுமாகியவன் கண்ணன்.

கார்மேகம் போன்ற நிறத்தையுடையவனும் சிவந்த தாமரை மலரைப் போன்ற கண்களையும் கதிரவனையும் நிலவினையும் ஒத்த முகத்தையுடையவனுமாகிய நாராயணனைப் போற்றிப் பாடி வேண்டினால், நாம் வேண்டும் வரம் எல்லாவற்றையும் நமக்குத் தந்தருள்வான். ஆதலால் மார்கழி நீராடி பாவை நோன்பு மேற்கொள்ள வாருங்கள்! பெண்களே!

**சொற்பொருள் விளக்கம்**

1. திங்கள் - மாதம்
2. மதி – நிலவு
3. ஏரார்ந்த – வேல் போன்ற
4. பாரோர் – உலகத்தார்
5. படிந்தேலோர் – நீராடுவோம்

**நோன்பு முறை**

**"வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்**
**செய்யும் கிரிசைகள் கேளீரோ? பாற்கடலுள்**
**பையத் துயின்ற பரமன் அடிபாடி**
**நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி**
**மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம்முடியோம்**
**செய்யா தனசெய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்**
**ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி**
**உய்யுமா றெண்ணி உகந்தேலோ எம்பாவாய்" 2**

திருமாலின் அவதாரமாகிய கண்ணன் தோன்றிய இந்தப் பூமியிலே வாழும் பெண்களே! இறைவனின் அருளைப் பெறுவதன்பொருட்டுப் பாவை நோன்பு மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் குறித்துக் கூறுகின்றேன். கேளுங்கள்!

திருப்பாற்கடலில் யோக நித்திரை செய்கின்ற இறைவனின் திருவடிகளைப் பாடிக் கொண்டே அதிகாலையில் எழுந்து நீராட வேண்டும். நெய்யும் பாலும் உண்ணாமல், நாம் விரும்புகின்ற மை பூசாமல், மலர்களைக் கூந்தலில் சூடிக் கொள்ளாமல் இருத்தல் வேண்டும். பெரியோர் செய்யத்தகாதது என்று தவிர்த்த தீய செயல்களைச் செய்யாதவர்களாய், பொய் பேசாதவர்களாய், புறங்கூறாதவர்களாய் இருத்தல் வேண்டும். மேலும் நம்மால் இயன்ற அளவு இரப்போர் அனைவருக்கும் மனம் நிறையும்படி தான தர்மம் செய்தல் வேண்டும். இவ்விதம் பாவை நோன்பு மேற்கொள்ள வாருங்கள் பெண்களே!

**சொற்பொருள் விளக்கம்**

1. வையம் - உலகம்
2. பாவைக்கு – பாவை நோன்பிற்கு
3. கிரிசைகள் - விதிமுறைகள்
4. நாட்காலே – விடியற்காலையில்

**செல்வம் பெருகும்**

**"ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி**
**நாங்கள்நம் பாவைக்குச் சாற்றி நீ ராடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும் மாரிபெய்து**
**ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள**
**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி**
**வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்" 3**

வாமன அவதாரத்தில், மாவலிச் சக்கரவர்த்தியிடம் தானம் பெற்ற அளவில் உயரமாய் வளர்ந்து நின்று, மூன்று அடிகளால் உலகனைத்தையும் அளந்த இறைவனின் புகழைப் பாடிக் கொண்டே நாம் நீராடுதல் வேண்டும்.

அவ்வாறு நீராடினால் நாடு முழுவதும் எந்தவொரு தீங்கும் இல்லாமல் மாதம் மூன்று முறை மழை பெய்யும். அதனால் உயர்ந்து வளரும் செந்நெற் கதிர்கள் உள்ள வயலிடத்தே கெண்டை மீன்கள் மகிழ்ச்சியில் துள்ளி விளையாடும். அழகிய குவளை மலர்களில் உடல்களில் பொறிகளைக் கொண்டுள்ள வண்டுகள் இனிதே உறங்கும். எப்போதும் செல்வம் குறையாமல் நிலைத்திருக்குமாறு வள்ளல் தன்மை மிகுந்த பசுக்களானது சிறிதளவும் தேக்கி வைத்துக் கொள்ளாமல் மடியைப் பிடித்துக் கரக்கத் தொடங்கியதுமே குடம் குடமாகப் பாலைத் தரும். ஆதலால் இறைவனை வழிபட வாருங்கள்!.

**சொற்பொருள் விளக்கம்**

1. ஓங்கி – நெடிதாக வளர்ந்து
2. மாரி – மழை
3. குவளை – மலர்
4. கண்படுப்ப – உறங்க
5. தேங்காதே – தேக்கிக் கொள்ளாமல்

**மழை பொழிவாய்**

**“ ”ஆழி மழைக்கண்ணா! ஒன்றும் நீ கைகரவேல்**
**ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி**

**ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து**
**பாழியந் தோளுடையப் பற்பநா பன்கையில்**
**ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து**
**தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்**
**வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்**
**மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பவாய்” 4**

மழை பொழிதற்குக் காரணமாகிய மழைத்தெய்வமே! நீ உன்னுடைய மழை என்ற கொடையில் சிறிதளவும் ஒளித்தல் கூடாது. கடலுக்குள்ளே புகுந்து, அதிக நீரை முகந்து கொண்டு, பேரொலியோடு மேலே ஏறி, திருமாலின் உருவம்போல் கருத்தும் வலிமையுடைய தோள்களையுடைய அவன் கைகளில் உள்ள சக்கரத்தைப் போல மின்னல் மின்னியும் பாஞ்ச சன்னியம் என்னும் வலம்புரிச் சங்கினைப் போல இடி முழங்கவும் சாரங்கம் என்னும் திருமாலினுடைய வில்லிலிருந்து சரசரவெனப் பொழியும் அம்புகள் போல உலகமெல்லாம் மழை பெய்ய வேண்டும். நாங்களும் மார்கழி நோன்பை மகிழ்ச்சியோடு கொண்டாடுவோம்.

**சொற்பொருள் விளக்கம்**

1. கைகரவேல் - ஒளித்தல்
2. ஆழி – கடல்

3. ஆர்த்தேறி – ஓசையுடன் எழுந்து
4. ஊழி முதல்வன் - திருமால்
5. ஆழி – சக்கரம்
6. வலம்புரி – சங்கு
7. சார்ங்கம் - வில்
8. சரம் - அம்பு

**பாவம் நீங்கும்**

**"மாயனை மன்னு வடமதுரை மைந்தனை**
**தூய பெருநீர் யமுனைத் துறைவனை**
**ஆயர் குலத்தினில் தோன்றும் மணிவிளக்கை**
**தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனைத்**
**தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது**
**வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்**
**போய பிழையும் புகுதருவான் நின்றனவும்**
**தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்" 5**

கண்ணன் வியத்தகு செய்கைகளை உடையவன். நிலைத்த புகழுடைய வடமதுரையில் தோன்றியவன். தூய்மையான நீரினைக் கொண்ட யமுனை ஆற்றின் துறையில் வாழ்பவன். ஆயர்குலத்திற்குப் பெருமை சேர்க்கும் மங்கல விளக்கு போன்றவன். தாய்க்குப் புகழைச் சேர்ப்பவனான தாமோதரன். அவனை எண்ணி நாம் அகமும் புறமும் தூய்மை உடையவர்களாய் வந்து, வாயினால் புகழ்ந்து பாடி, மனத்தினால் இடைவிடாமல் நினைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் இதுவரை எத்தனையோ பிறவிகளில் நாம் செய்த பாவங்களும் தற்பொழுது அறியாமையால் நாம் செய்கின்ற பாவங்களும் தீயில் விழுந்த தூசினைப் போல பொசுங்கிப் போகும். ஆதலால் கண்ணனைப் போற்றி மார்கழி நோன்பு மேற்கொள்ள வாருங்கள் பெண்களே!

**சொற்பொருள் விளக்கம்**

1. தூயோமாய் - மனத்தூய்மையுடன்
2. போய பிழையும் - செய்த பாவங்கள்
3. புகுதருவான் நின்றனவும் - செய்யும் பாவங்கள்

**அரியென்னும் பேரரவம்**

**"புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்**
**வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?**
**பிள்ளை! எழுந்திராய்! பேய்முலை நஞ்சுண்டு**
**கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி**
**வெள்ளத்து அரவில் துயிலமர்ந்த வித்தினை**
**உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்**
**மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்**
**உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்" 6**

இரை தேடும் பறவைகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. பறவைகளுக்குத் தலைவனாகிய கருடாழ்வாரின் இறைவனாகிய திருமாலின் திருக்கோயிலில் வெண்மை நிறமுடைய சங்கு ஒலித்துக் கொண்டிருக்கின்றது. நச்சுப்பால் கொடுத்துத் தன்னைக் கொல்ல வந்த பூதனை என்ற அரக்கியின் உயிரை எடுத்தவனும் சக்கர வடிவில் தன்னைக் கொல்ல வந்த அரக்கனை எட்டி உதைத்துக் கொன்றவனும் பாற்கடலில் பாம்பணையில் யோக நித்திரை கொண்டுள்ளவனுமாகிய திருமாலை, முனிவர்களும் யோகிகளும் தங்கள் உள்ளத்தில் கொண்டு, மெல்ல எழுந்து ‘அரியே! அரியே!’ என்று முழங்கும் ஓசை உன்னுடைய காதுகளில் கேட்கவில்லையா? ஆண்டவன்மீது அன்பு கொண்டு இன்பம் அடையும் வழி தெரியாத பெண்ணே! நீ எழுந்திரு! நாம் நீராடி பாவை நோன்பை மேற்கொள்வோம்.

**சொற்பொருள் விளக்கம்**

1. புள்ளும் - பறவைகள்
2. சிலம்பின – ஒலி எழுப்பின
3. சகடம் - சக்கரம்
4. அரவில் - பாம்பு
5.

**கதவினைத் திறப்பாய்!**

**“கீசுகீ சென்றெங்கும் ஆனைசாத்தன் கலந்து!**
**பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே**
**காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து**
**வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்**
**ஓசை படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ?**
**நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன்மூர்த்தி**
**கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?**
**தேசம் உடையாய்! திறவேலோர் எம்பாவாய்” 7**

பெண்களுக்கெல்லாம் தலைமைப் பண்பு வாய்க்கப்பெற்றவளே! வலியன் என்னும் பறவைகள் கூடி எழுப்பும் ‘கீசு கீசு’ என்னும் ஓசை கேட்கின்றது. மணம் கமழ்கின்ற அழகிய கூந்தலையுடைய ஆய்ச்சியர் அவர்களின் அச்சுத்தாலியும் ஆமைத்தாலியும் முளைத்தாலியும் கலகலவென்று ஒலிக்கும்படியாக, மத்தாலே தயிரைக் கடைகிற ஓசையும் உனக்குக் கேட்கவில்லையோ? நாராயணனுடைய அவதாரமான கண்ணபிரானைக் குறித்து நாங்கள் பாட, அதனைக் கேட்டும் இன்னும் நீ உறங்குகிறாயா? பக்தி நிறைந்தவளே! உடனடியாக வந்து கதவினைத் திறப்பாயாக!.

**சொற்பொருள் விளக்கம்**

1. ஆனைசாத்தன் - பறவை
2. ஆய்ச்சியர் – ஆயர்குலப் பெண்கள்
3. தேசம் - பக்தி

**குறைகளை நீக்குவான்**

**"கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு**
**மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்**
**போவான்போ கின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்**
**கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய**
**பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு**
**மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய**
**தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்**
**ஆஆஎன்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்" 8**

கண்ணனால் விரும்பப்பட்ட அழகிய பதுமை போன்றவளே! கிழக்கில் ஆகாயமானது வெளுத்துவிட்டது. எருமைகள் அனைத்தும் பனிப்புல்களை மேய்வதற்காகச் சென்றுவிட்டன.

உன்னைத்தவிர மற்ற அனைத்துப் பெண்களும் பாவை நோன்பு மேற்கொள்ளச் செல்கின்றனர். அவர்கள் யாவரையும் தடுத்து, உன்னுடைய வருகைக்காக வாசலில் வந்து காத்துக்கொண்டிருக்கின்றோம்.

கண்ணனின் குணங்களைப் பாடி, கேசி என்னும் அரக்கனின் வாயினைப் பிளந்து கொன்றவனை, சாணூர முட்டிகரென்னும் மல்லர்களை அழித்தவனுமாகிய தேவாதிதேவனை அடிபணிந்தால், அவன் நம்மீது இரக்கம் மிகக்கொண்டு நம்முடைய அனைத்துக் குறைகளையும் விசாரித்து நன்மை செய்வான். ஆதலால் பெண்ணே! எங்களோடு சேர்ந்துகொள்ள எழுந்திருப்பாயாக!.

**சொற்பொருள் விளக்கம்**

1. வெள்ளென்று – வெளுத்துவிட்டது
2. சிறுவீடு – வீட்டின் அருகில் மேய்தல்
3. போவான் - போகின்றார்கள்
4. மாவாய் பிளந்தான் - கேசி என்ற அரக்கனின் வாயைப் பிளந்தவன்
5. மல்லர் – மல்யுத்தம் செய்பவர்

**வாயாரப்புகழ்வோம்**

**"தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய**
**தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்**
**மாமன் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்**
**மாமீர்! அவளை யெழுப்பீரோ? உன்மகள் தான்**
**ஊமையோ அன்றிச் செவிடோ, அனந்தலோ?**
**ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?**
**மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று**
**நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்" 9**

குற்றமற்ற தூய்மையான மணிகள் பதித்துக் கட்டப்பட்ட மாளிகைகளில் உள்ள விளக்குகள் நான்கு திசைகளில் எரியவும் நறுமணப்புகை எங்கும் மணக்கவும் அன்னப்பறவையின் இறகினால் செய்யப்பெற்ற மென்மையான மெத்தையின்மீது உறங்குகின்ற பெண்ணே! கதவினைத் திறப்பாயாக!

மாமியே! உறங்குகின்ற உங்களுடைய மகளை எழுப்புவீராக! நாங்கள் இவ்வளவு அழைத்தும் உங்கள் மகளுக்குக் கேட்கவில்லையே! அவள் ஊமையா? அன்றிச் செவிடா? இல்லை பேருறக்கம் கொண்டவளா? அல்லது எழுந்து வெளியில் வராத வண்ணம் காவலில் வைக்கப்பட்டுள்ளாளா? அல்லது நீண்ட நேரம் உறங்கும்படி மந்திரத்தால் கட்டப்பட்டாளா? அளவிட்டுக் கூற இயலாத வியத்தகு குணங்களையும் செயல்களையும் உடையவனான திருமகளின் கணவனை ஸ்ரீவைகுண்டத்தில் இருப்பவனை வாயாரப் புகழ்கின்றோம். தயைகூர்ந்து அவளை உறக்கத்திலிருந்து எழுப்புங்கள்.

**சொற்பொருள் விளக்கம்**

1. தூமணி – தூய்மையான மாணிக்க மணி
2. தூபம் - நறுமணப்புகை
3. கண் வளரும் - துயில்கொள்ளும்
4. அனந்தலோ – பேருறக்கம்

**அணி போன்றவளே!**

**“நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மானாய்!**
**மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்**
**நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்**
**போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்**
**கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கருணனும்**
**தோற்றும் உனக்கே பெருந்துயில் தந்தானோ?**
**ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!**
**தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்”** 10

நோன்பு மேற்கொண்டு இன்பத்தை அடையும் தன்மை கொண்ட பெண்ணே! வாசற்கதவைத் திறந்து வந்து ஒரு வாய்ச்சொல்லாவது கூறு. முற்காலத்தில் திருமாலினால் எமனின் வாயினில் சென்று விழுந்து இறந்த கும்பகர்ணன் உனக்குப் பேருறக்கத்தைத் தந்துவிட்டானா? பெண்ணே! எழுந்திரு!

மணம் கமழ்கின்ற துளசி மாலையை அணிந்தவனும் உலக உயிர்கள் அனைத்தையும் காக்கின்ற தன்மை உடையவனுமான திருமாலின் அடியவர்களாகிய நமக்கு, அனைத்து நலன்களையும் இறைவன் அருள்வான். பெருந்தூக்கத்தைக் கொண்டவளே! பெண்களுக்கு அணி போன்றவளே! தடுமாற்றமன்றி தெளிவாக எழுந்து

வந்து கதவினைத் திறப்பாயாக!' என்று பெண்கள் அனைவரையும் புகழ்ந்துபாடி பாவை நோன்பிருக்க அழைக்கின்றாள் ஆண்டாள்.

**சொற்பொருள் விளக்கம்**

1. நோற்று – நோன்பு மேற்கொண்டு
2. மாற்றம் - பதில்
3. நாற்றம் - நறுமணம்
4. துழாய் - துளசி
5. கூற்றம் - எமன்
6. தேற்றமாய் - தெளிவாய்

**தொகுப்புரை**

அலகு ஒன்றில் பக்தி இலக்கியங்களில் முன்னோடிகளாக விளங்கியவரான திருநாவுக்கரசரின் தேவராத்திலிருந்து நாமார்க்கும் குடியல்லாம் நமனை அஞ்சோம் எனத் தொடங்கும் பதிகத்தின் பத்துப்பாடல்களான இடர்கள் தீர்ந்தோம், மனையிற்சேறோம், பிறப்பிற் செல்லோம், சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம், கடுமையொடு கலவற்றோமே, பேசுவது பிழையற்றறோமே, நித்தலும் நினையப் பெற்றோம், படியோம் நாமே மற்றும் தேவாதி தேவன் ஆகியவற்றைத் தெளிவுறக் கற்றோம். மேலும் பக்தி இலக்கியத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் ஆண்டாள் திருப்பாவையில் முதல் பத்துப் பாசுரங்களான நீராட அழைத்தல், நோன்பு முறை, செல்வம் பெருகும், மழை பொழிவாய் பாவம் நீங்கும், அரியென்னும் பேரரவம், கதவினைத் திறப்பாய், குறைகளை நீக்குவான், வாயாறப் புகழ்வோம் மற்றும் அணி போன்றவளே ஆகிய பாசுரங்கள் திருமாலின் புகழை எடுத்துரைத்து திருமாலின் அடியார்களாகிய நமக்கு நோன்பிருக்கும் முறைகளை அறிவிக்கிறார் ஆண்டாள்

## பயிற்சி வினாக்கள்

### பகுதி – அ

**சரியான விடையளிக்கவும்**

1.திருநாவுக்கரசரின் இயற்பெயர் யாது?

அ.நாவுக்கரசர் **ஆ.மருள்நீக்கியார்** இ.தருமசேனர் ஈ.வாகீசர்

2.திருநாவுக்கரசரின் தமக்கையார் யார்?

**அ.திலகவதியார்** ஆ.புனிதவதியார் இ.மாதினியார் ஈ.இசைஞானியார்

3.திருநாவுக்கரசரின் தேவாரம் பன்னிருதிருமுறைகளுள் பெற்றுள்ள இடம் யாது?

அ.1,2,3 **ஆ.4,5,6** இ.7 ஈ.8

4.மறுமாற்றத் திருத்தாண்டகம் நாவுக்கரசரின் எந்தத் திருமுறையில் இடம் பெற்றுள்ளது?

அ.4 ஆ.5 **இ.6** ஈ.இவற்றில் எதுவும் இல்லை

5. ‘‘நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்’’ என்னும் பாடல்வரி இடம் பெற்றுள்ள நூல் எது?

**அ.திருநாவுக்கரசர் தேவாரம்** ஆ.ஆண்டாள் திருப்பாவை

இ.முக்கூடற்பள்ளு ஈ.திருக்குற்றாலக்குறவஞ்சி

6.சிவபெருமான் அணிந்துள்ள மலர்மாலை எம்மலரினால் ஆனது?

அ.எருக்கமலர் ஆ.விருச்சிமலர் இ.தாழம்பூ **ஈ.கொன்றைமலர்**

7.மன்மதனை எரித்துக் கொன்றவர் யார்?

**அ.சிவன்** ஆ.திருமால் இ.பிரம்மா ஈ.அம்பிகை

8.மன்மதனின் கொடியாக திருநாவுக்கரசர் எதனைக் குறிப்பிடுகிறார்?

அ.வில் ஆ.புலி **இ.மீன்** ஈ.பன்றி

9.திருநாவுக்கரசரைக் கைது செய்ய வந்தவர்கள் எம்மன்னனின் கட்டளையை ஏற்று வந்தனர்?

அ.சேரன் ஆ.சோழன் இ.பாண்டியன் **ஈ.பல்லவன்**

10.சிவபெருமான் எந்த ஆடையினை இடையில் உடுத்தியுள்ளார் எனத் திருநாவுக்கரசர் குறிப்பிடுகிறார்?

அ.மான்தோலாடை **ஆ.புலித்தோலாடை** இ.சிங்கத்தோலாடை

ஈ.யானைத்தோலாடை

11. திருப்பாவையைப் பாடியவர் யார்?

அ) திருஞானசம்பந்தர் ஆ) மாணிக்கவாசகர் **இ) ஆண்டாள்** ஈ) வள்ளலார்

12. ஆண்டாள் பாடிய மற்றொரு நூல் எது?

அ) பெரிய திருமொழி ஆ) சிறிய திருமொழி

இ) திருமொழி **ஈ) நாச்சியார் திருமொழி**

13. ஆண்டாளுக்கு பெரியாழ்வார் இட்ட பெயர் என்ன?

**அ) கோதை** ஆ) நாச்சியார் இ) ஆண்டாள் ஈ) இலட்சுமி

14. பாவை நோன்பு மேற்கொள்ளப்படும் மாதம் எது?

அ) தை ஆ) மாசி **இ) மார்கழி** ஈ) புரட்டாசி

15. ‘‘நாராயணனே நமக்கே பறைதருவான்’’ - இதில் பறை என்பது எதனைக் குறிக்கிறது?

அ) முரசு ஆ) உலகம் **இ) விரும்பியது** ஈ) அருள்

16. ஓங்கி உலகை அளந்த உத்தமன் யார்?

அ) நரசிம்மன் ஆ) பலராமன் **இ) வாமனன்** ஈ) பரசுராமன்

17. சாரங்கம் என்பது எது?

**அ) வில்** ஆ) அம்பு இ) சங்கு ஈ) சக்கரம்

## பகுதி – ஆ

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்**

1. திருநாவுக்கரசர் குறிப்பு வரைக.
2. மறுமாற்றத் திருத்தாண்டகம் - விளக்குக.

3. 'எங்களுக்கு இன்பமன்றி துன்பமில்லை' என்று கூறும் நாவுக்கரசரின் பாடலை விளக்குக.

4. ஆண்டாள் குறிப்பு வரைக.

5. திருப்பாவை குறித்து விளக்குக.

6. திருமாலின் இயல்புகளை திருப்பாவைவழி விளக்குக.

7. தனது மாமன் மகளை ஆண்டாள் துயில் எழுப்பும் விதத்தை விவரி?

## பகுதி - இ

**எட்டு மதிப்பெண் வினாக்கள்**

1.தேவாரப் பாடல்கள்வழி அறியலாகும் திருநாவுக்கரசரின் பக்தித் திறத்தினைப் புலப்படுத்துக.

2.'நாங்கள் யாருக்கும் பணிய வேண்டியது இல்லை' என்று கூறும் நாவுக்கரசரின் பாடல்களை விளக்குக.

3.நாவுக்கரசர் பாடிய மறுமாற்றத் திருத்தாண்டகம் பாடற்கருத்துக்களை விளக்குக.

4. ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்கள்வழி பெண்கள் பாவை நோன்பு மேற்கொள்ளும்விதம் குறித்து எழுதுக.

5. ஆண்டாளின் பக்தித் திறத்தினை திருப்பாவை பாடல்கள்வழி விளக்குக.

# அலகு-2 பக்தி இலக்கியம்

## அ. வள்ளலார் - திருவருட்பா – அருள்விளக்கமாலை

**வள்ளலார் – குறிப்பு வரைக. (இராமலிங்க அடிகள்)**

- காலம் - 1823-1874
- ஊர் - மருதூர் (சிதம்பரம் அருகே)
- பெற்றோர் - இராமையா பிள்ளை, சின்னம்மாள்
- தமையனார் - சபாபதிபிள்ளை
- இயற்பெயர் - இராமலிங்கர்
- சிறப்புப்பெயர் - அருட்பிரகாச வள்ளலார்
- சித்தர். இளமையிலேயே ஓதாது உணர்ந்தவர்.
- 1865இல் சன்மார்க்க சங்கத்தையும் 1867இல் சத்தியதரும சாலையையும் 1876இல் சித்திவளாகத்தையும் 1872இல் சத்திய ஞானசபையையும் நிறுவினார்.
- இவர் பின்பற்றிய நூல்- திருவாசகம்
- இவரது மந்திரம் - அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை
- கோட்பாடு - ஆன்மநேய ஒருமைப்பாடு
- கொள்கை - ஜீவகாருண்ய ஒழுக்கம்
- சமயமறுமலர்ச்சியாளர், சீர்திருத்தவாதி
- இவர் பாடியது திருவருட்பாவாகும். இவற்றின் தொகை ஏறத்தாழ 6,200. இவை ஆறுதிருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.
- இயற்றிய நூல்கள் - மனுமுறைகண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம், சிவநேச வெண்பா, நெஞ்சறிவுறுத்தல், மகாதேவமாலை, இங்கிதமாலை.
-

**திருவருட்பா**

இராமலிங்கஅடிகளார் இயற்றியது திருவருட்பாவாகும். இதில் ஆறாம் திருமுறையில் அருள்விளக்கமாலை என்னும் பகுதி இடம்பெற்றுள்ளது. திருவருள் ஞான விளக்கம் எய்திய வடலூர் வள்ளல், ஆற்றாமை மிகுந்து உள்ளத்தில் பொங்கியெழுந்த இன்ப உணர்ச்சிகளைச் சொல்மாலையாகத் தொடுத்ததாகும். இப்பாடல்களில் இறைவன் தன்னுடைய சொல்மாலையை ஏற்று அருள்புரிய வேண்டுகிறார் இராமலிங்கஅடிகளார்.

**அருள்ஒளி விளக்கே!**

**“அருள்விளக்கே! அருட்சுடரே! அருட்சோதிச் சிவமே!**
**அருள்அமுதே! அருள்நிறைவே! அருள்வடிவப் பொருளே!**
**இருள்கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே!**
**என்அறிவே! என்உயிரே! எனக்கினிய உறவே!**
**மருள்கடிந்த மாமணியே! மாற்றறியாப் பொன்னே!**

**மன்றில்நடம் புரிகின்ற மணவாளா! எனக்கே**
**தெருள்அளித்த திருவாளா! ஞானஉரு வாளா!**
**தெய்வநடத் தரசே!நான் செய்மொழிஏற் றருளே!." 1**

'அருள்விளக்கே! அருட்சுடரே! அருட்சோதியாகிய சிவ பரம்பொருளே! ஞான அருள் அமுதமே! அருளே நிறைந்த அருள் வடிவப்பொருளே! மனதில் பாயும் அறியாமை இருளைப்போக்கி, என் உள்ளம் முழுதும் ஆட்கொண்ட தலைவனே! என் அறிவும் உயிரும் இனிய உறவுமாகிய பெருமானே! மயக்கத்தை நீக்கியருளிய மாணிக்கமணியே! மாற்றில்லாத பொன் போன்றவனே! அம்பலத்தில் நடனம் ஆடும் ஞானமணவாளனே! எனக்கு ஞான விளக்கம் தந்த திருவருளை ஆள்பவனே! ஞானத்திருவுரு உடையவனே! தெய்வ நடம் செய்பவனுமாகிய பெருமானே! நான் தொடுக்கின்ற சொல்மாலையை ஏற்றுக்கொண்டு எனக்கு அருள்வாயாக!

**சொற்பொருள் விளக்கம்**

1. கடிந்து – நீக்கி
2. மருள் - மயக்கம்
3. மன்றில் - அம்பலத்தில்
4. தெருள் - ஞானவிளக்கம்

**குளிர்தருவே!**

**"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த**
**குளிர்தருவே! தருநிழலே! நிழல்கனிந்த கனியே!**
**ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே!**
**உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே!**
**மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே!**
**மென்காற்றில் விளைசுகமே! சுகத்தில்உறும் பயனே!**
**ஆடையிலே எனைமணந்த மணவாளா! பொதுவில்**
**ஆடுகின்ற அரசே!என் அலங்கல்அணிந் தருளே!." 2**

கோடை வெயிலில் வாடுவோர் இளைப்பாறுவதற்காக கிடைத்த குளிர்ச்சியுடைய மரம் போன்றவனே! அம்மரம் தருகின்ற குளிர்ந்த நிழல் போன்றவனே! அந்நிழலில் இருப்போர்க்குக் கிடைக்கும் பழுத்த கனி போன்றவனே! அம்மரத்தின் அருகில் ஓடும் ஓடையில் உள்ள தீஞ்சுவையுடைய தண்ணீர் போன்றவனே! அத்தண்ணீரில் மலர்ந்து தோன்றும் நறுமணமுடைய மலர் போன்றவனே! ஓடையருகே உள்ள மேடையில் வீசுகின்ற மென்மையான காற்றினால் தேகத்தில் உண்டாகும் சுகம் பொன்றவனே! அந்தச் சுகானுபவத்தில் பிறக்கும் இன்பப் பயனாகியவனே! விளையாடும் பருவத்தில் என்னை மணந்து ஆட்கொண்ட மணவாளனே! அம்பலத்தில் ஆடுகின்ற அருளரசனே! என்னுடைய சொல்மாலையை ஏற்றுக்கொண்டு எனக்கு அருள்புரிவாயாக!

**சொற்பொருள் விளக்கம்**

1. குளிர்தரு – குளிர்ச்சியுடைய மரம்
2. சுகந்த – நறுமணமுடைய
3. ஆடையிலே – விளையாடும் பருவத்தில்

**ஆட்கொண்ட குருவே!**

**“இன்புறநான் எய்ப்பிடத்தே பெற்றபெரு வைப்பே**
**ஏங்கியபோ தென்றன்னைத் தாங்கியநல் துணையே**
**அன்புறஎன் உட்கலந்தே அண்ணிக்கும் அமுதே**
**அச்சமெலாம் தவிர்த்தென்னை ஆட்கொண்ட குருவே**
**என்பருவம் குறியாதே எனைமணந்த பதியே**
**இச்சையுற்ற படிஎல்லாம் எனக்கருளும் துரையே**
**துன்பறமெய் அன்பருக்கே பொதுநடஞ்செய் அரசே**
**தூயதிரு அடிகளுக்கென் சொல்லும் அணிந் தருளே.”** 3

தளர்ச்சியுற்று நான் வருந்தும் காலத்தில் இன்பம் அடையுமாறு பெறப்பட்ட பெரிய செல்வம் போன்றவனே! துணைக்கு எவருமின்றி வருந்தும்போது, என்னைத் தாங்கியருளிய நல்ல துணைவனே! என்னுள் கலந்து உன்மீது எனக்கு அன்பு அதிகமாகும்படி இனிமை செய்யும் அமுதம் போன்றவனே! என்னை அலைக்கழிக்கும் அச்சத்தினைப்போக்கி, என்னை ஆட்கொண்டு அருளிய ஞான ஆசிரியனே! என்னுடைய மனப்பக்குவத்தை எண்ணாமல் என்னை மணந்து ஆட்கொண்ட தலைவனே! நான் விரும்பியபடி எனக்கு அருள்புரிந்தவனே! மெய்யன்புடைய பெருமக்களுக்கு ஏற்படும் துன்பங்களைப் போக்குவதற்காக அம்பலத்தில் நடனம் புரிகின்ற அருளரசே! உன்னுடைய தூய திருவடிகளில் என்னுடைய இந்த சொல்மாலையை அணிந்துகொண்டு எனக்கு அருள்புரிவாயாக!

**சொற்பொருள் விளக்கம்**

1. எய்ப்பு – தளர்ச்சி
2. வைப்பு – செல்வம்
3. பருவம் - மனப்பக்குவம்
4. இச்சை – விருப்பம்

நல்கிய மா மருந்தே!

**“ஓசித்தகொடி அனையேற்குக் கிடைத்தபெரும் பற்றே**
**உள்மயங்கும் போதுமயக் கொழித்தருளும் தெளிவே**
**பசித்தபொழு தெதிர்கிடைத்த பால்சோற்றுத் திரளே**
**பயந்தபொழு தெல்லாம்என் பயந்தவிர்த்த துரையே**
**நசித்தவரை எழுப்பிஅருள் நல்கியமா மருந்தே**
**நான்புணர நானாகி நண்ணியமெய்ச் சிவமே**

**கசித்தமனத் தன்பர்தொழப் பொதுநடஞ்செய் அரசே**
**களித்தெனது சொன்மாலை கழலில் அணிந் தருளே.**" 4

தளர்ந்த கொடி போன்ற எனக்குக் கிடைத்த பற்றுக்கோடாக விளங்குபவனே! என் உள்ளம் மயங்கித் தடுமாறும்பொழுது மயக்கத்தைப் போக்கி தெளிவினைத் தரும் பரம்பொருளே! பசித்தபோது எதிர்பாராத வகையில் எனக்குக் கிடைத்த பால்சோற்றுத்திரள் போன்றவனே! நான் அஞ்சியபோது என்னுடைய அச்சத்தை நீக்கியருளிய பெருமானே! இறந்தவரை உயிர்பெற்றெழச்செய்யும் அருள்புரியும் தெய்வாமிருதம் போன்றவனே! நான் கலந்துகொள்ளுமாறு நானாகி என்னையடைந்த மெய்ப்பொருளாகிய சிவமே!

உருகிய மனதினையுடைய அன்பர்கள் கண்டு தொழும்படி அம்பலத்தில் நடனம் புரிகின்ற அருளரசே! திருவுள்ளம் உவந்து என் சொல்மாலையைத் திருவடியில் அணிந்து அருள்வாயாக!.

**சொற்பொருள் விளக்கம்**

1. ஒசித்த – தளர்ந்த
2. துரையே – பெருமானே
3. நசித்தவர் - இறந்தவர்
4. புணர – கலந்து கொள்ள
5. கசித்த – உருகிய

**வாழ்வளித்த நிதியே!**

"**மனம்இளைத்து வாடியபோ தென்எதிரே கிடைத்து**
**வாட்டம்எலாம் தவிர்த்தெனக்கு வாழ்வளித்த நிதியே**
**சினமுகத்தார் தமைக்கண்டு திகைத்தபொழு தவரைச்**
**சிரித்தமுகத் தவராக்கி எனக்களித்த சிவமே**
**அனம்உகைத்தான் அரிமுதலோர் துருவிநிற்க எனக்கே**
**அடிமுடிகள் காட்டுவித்தே அடிமைகொண்ட பதியே**
**இனம்எனப்பேர் அன்பர்தொழப் பொதுநடஞ்செய் அரசே**
**என்னுடைய சொன்மாலை யாவும்அணிந் தருளே.**" 5

மனம் சோர்ந்து வாடியபொழுது என் எதிரே தோன்றி, என்னுடைய வாட்டத்தினைப்போக்கி, எனக்கு அருள்வாழ்வு நல்கிய அருட்செல்வமே! சினம் கொண்ட முகத்தினைக் கொண்டவர்களைப் பார்த்து, அறிவு மயங்கியபோது அவர்களைச் சிரித்த முகமுடையவர்களாக்கி, என்னை மகிழ்வித்த சிவபெருமானே! அன்னப்பறவையை வாகனமாகக் கொண்ட பிரம்மன், திருமால் முதலியோர் தேடிச்சென்று காண முடியாத திருவடியை உடையவனே! அத்திருவடியினை எளியனாகிய எனக்குத் தன்னுடைய திருவடியையும் திருமுடியையும் எனக்குக்காட்டி என்னை அடிமையாக ஆட்கொண்ட

சிவபதியே! அடியார் இனமெனக் கருதி வரும் மெய்யன்பர்கள் தொழுமாறு அம்பலத்தில் ஆடல்புரிகின்ற அரசனே! என்னுடைய சொல்மாலையினை ஏற்று அணிந்தருள வேண்டும்.

**சொற்பொருள் விளக்கம்**

1. அனம்உகைத்தான் - பிரம்மன்
2. அரி – திருமால்
3. இனம் - அடியார் இனம்

**தெய்வ மணவாளா!**

**“கங்குலிலே வருந்தியஎன் வருத்தம்எலாம் தவிர்த்தே**
**காலையிலே என்உளத்தே கிடைத்தபெருங் களிப்பே**
**செங்குவளை மாலையொடு மல்லிகைப்பூ மாலை**
**சேர்த்தணிந்தென் தனைமணந்த தெய்வமண வாளா**
**எங்கும்ஒளி மயமாகி நின்றநிலை காட்டி**
**என்அகத்தும் புறத்தும்நிறைந் திலங்கியமெய்ப் பொருளே**
**துங்கமுறத் திருப்பொதுவில் திருநடஞ்செய் அரசே**
**சொன்மாலை சூட்டுகின்றேன் தோளில்அணிந் தருளே.” 6**

இரவில் பலவற்றை நினைத்து வருந்திய என் வருத்தங்களை எல்லாம் போக்கிக் காலைப்பொழுதும் என் மனதில் மகிழ்ச்சியைத் தோற்றுவித்த பெருமானே! செங்குவளை மாலையும் மல்லிகைப் பூமாலையும் ஒன்றாக அணிந்து என்னை மணந்து ஆட்கொண்ட தெய்வமணாளனே! எங்கும் ஒளிமயமாய் நிற்கின்ற உன்னுடைய நிலையை, அடியேன் காணும்வண்ணம் காட்டி, என்னுடைய உள்ளும் புறமும் நிறைந்து விளங்குகின்ற மெய்ப்பொருளாகிய சிவனே! உயர்வுபொருந்த அழகிய அம்பலத்தின்கண் திருக்கூத்தாடுகின்ற அருளரசே! என்னுடைய சொல் மாலையை உன்னுடைய தோளில் ஏற்று அணிந்துகொண்டு எனக்கு அருள்செய்வாயாக!.

**சொற்பொருள் விளக்கம்**

1. கங்குல் - இரவு
2. களிப்பே – மகிழ்ச்சி
3. துங்கமுற – உயர்வுபொருந்த
4.

**கற்கண்டே கனிவாய்!**

**“கரைந்துவிடா தென்னுடைய நாவகத்தே இருந்து**
**கனத்தசுவை தருகின்ற கற்கண்டே கனிவாய்**
**விரைந்துவந்தென் துன்பமெலாம் தவிர்த்தஅருள் அமுதே**
**மெய்அருளே மெய்யாகி விளங்குகின்ற விளக்கே**
**திரைந்தஉடல் விரைந்துடனே பொன்உடம்பே ஆகித்**
**திகழ்ந்தழியா தோங்கஅருள் சித்தேமெய்ச் சத்தே**

**வரைந்தென்னை மணம்புரிந்து பொதுநடஞ்செய் அரசே**
**மகிழ்வொடுநான் புனைந்திடுஞ்சொன் மாலைஅணிந் தருளே." 7**

நாவில் கரைந்துவிடாமல் நின்று இனிய சுவையைத்தரும் கற்கண்டு போன்றவனே! விரைவாக வந்து என் துன்பத்தைத் துடைக்கும் அருளூறவாகிய அமுதமே! மெய்யான அருட்செல்வமே! மெய்யாக விளங்குகின்ற ஞான விளக்காக இருப்பவனே! தோல் சுருங்கிய எனது உடலில் ஞானம் பெற்று பொன்னிற உடலாம் விளங்க, அருள்புரிந்த சித்துப் பொருளாகிய மெய்ம்மை சான்ற சத்துப்பொருளே! என்னை வரைந்து ஞானமணம் புரிந்து ஆட்கொண்டு அம்பலத்தில் நடனமாடும் அரசே! மகிழ்ச்சியோடு நான் தொடுத்த இந்தச் சொல்மாலையை ஏற்று அணிந்தருள்வாயாக!.

**சொற்பொருள் விளக்கம்**

1. திரைந்த உடல் - தோல் சுருங்கிய உடல்

**கதிக்கு வழி காட்டுகின்ற கண்ணே!**

**"கதிக்குவழி காட்டுகின்ற கண்ணேஎன் கண்ணில்**
**கலந்தமணி யேமணியில் கலந்தகதிர் ஒளியே**
**விதிக்கும்உல குயிர்க்குயிராய் விளங்குகின்ற சிவமே**
**மெய்யுணர்ந்தோர் கையகத்தே விளங்கியதீங் கனியே**
**மதிக்குமதிக் கப்புறம்போய் வயங்குதனி நிலையே**
**மறைமுடிஆ கமமுடிமேல் வயங்கும்இன்ப நிறைவே**
**துதிக்கும்அன்பர் தொழப்பொதுவில் நடம்புரியும் அரசே**
**சொன்மாலை சூட்டுகின்றேன் தோளில்அணிந் தருளே." 8**

நான் நல்ல கதியினை அடைவதற்கு நன்னெறியைக் காட்டுகின்ற ஞானக்கண் போன்றவனே! என்னுடைய கண்ணில் இருக்கும் கருமணி போன்றவனே! அந்தக் கண்ணின் கருமணியில் கலந்து ஒளிர்கின்ற ஒளியாக இருப்பவனே! உன்னால் படைக்கப்படும் உலகில் வாழும் உயிர்களுக்கு உயிராய் விளங்குகின்ற சிவபரம்பொருளே! மெய்ப்பொருள் உணர்ந்த ஞானிகளின் உள்ளங்கையில் வைத்த இனிய கனி போன்றவனே!

அறிவின் எல்லைக்கு அப்பால் விளங்கும் தனிப்பெரும் ஞானநிலையமே! வேதாந்தம், சித்தாந்தம் (மறை முடி, ஆகம முடி) ஆகியவற்றின் உச்சியில் விளங்குகின்ற இன்பம் நிறைந்த பரம்பொருளே! ஆடித் துதிக்கும் அன்பர்கள் தொழுதுநிற்க, அம்பலத்தில் நடனமாடும் அருளரசே! நான் சூட்டுகின்ற சொல்மாலையை தோளில் ஏற்று அணிந்தருள்வாயாக!

**சொற்பொருள் விளக்கம்**

1. கதிக்கு – நல்ல கதியடைய
2. விதிக்கும் - படைக்கப்படும்
3. வயங்கும் - விளங்கும்

**மன்றில் நடிக்கும் தனியரசே!**

**"அண்டவள வெவ்வளவோ அவ்வளவும் அவற்றில்**
**அமைந்தசரா சரஅளவெவ் வளவோஅவ் வளவும்**
**கண்டதுவாய் ஆங்கவைகள் தனித்தனியே அகத்தும்**
**காண்புறத்தும் அகப்புறத்தும் புறப்புறத்தும் விளங்க**
**விண்டகுபேர் அருட்சோதிப் பெருவெளிக்கு நடுவே**
**விளங்கிஒரு பெருங்கருணைக் கொடிநாட்டி அருளாம்**
**தண்டகும்ஓர் தனிச்செங்கோல் நடத்திமன்றில் நடிக்கும்**
**தனிஅரசே என்மாலை தாளில்அணிந் தருளே." 9**

அண்டங்கள் எவ்வளவோ அத்தனையும் அவற்றிலுள்ள சராசரங்கள் எத்தனையே அத்தனையும் தோற்றுவித்த பெரும்பொருளானவனே! அவற்றில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே அகத்தும் புறத்தும் அகப்புறத்தும் புறப்புறத்தும் விளக்கமுற நின்று, மேலுள்ள உலகங்களுக்கெல்லாம் மேலாய் ஒளிரும் அருட்சோதிப் பெருவாரியாகிய ஞானவெளியின் நடுவாக இருப்பவனே! அங்கிருந்து ஒப்பற்ற பெரிய கருணையாகிய கொடியை உயர்த்தித் திருவருளாகிய குளிர்ந்த ஒப்பற்ற செங்கோல் நடத்தி அம்பலத்தில் நடிக்கின்ற அருளரசே! அடியேனுடைய சொல்மாலையை உன்னுடைய திருவடியில் ஏற்று அணிந்தருள்வாயாக!

**சொற்பொருள் விளக்கம்**

1. அண்டம் - பிரபஞ்சம்
2. விண்டகுபேர் – மேலாய் விளங்கும்
3. தண்டகும் - குளிர்ந்த

**பலகோடி**

**"நல்லார்சொல் யோகாந்தப் பதிகள்பல கோடி**
**நாட்டியதோர் போதாந்தப் பதிகள்பல கோடி**
**வல்லார்சொல் கலாந்தநிலைப் பதிகள்பல கோடி**
**வழுத்தும்ஒரு நாதாந்தப் பதிகள்பல கோடி**
**இல்லார்ந்த வேதாந்தப் பதிகள்பல கோடி**
**இலங்குகின்ற சித்தாந்தப் பதிகள்பல கோடி**
**எல்லாம்பேர் அருட்சோதித் தனிச்செங்கோல் நடத்தும்**
**என்அரசே என்மாலை இனிதுபுனைந் தருளே." 10**

யோகாந்தத்தில் பல கோடித்தலங்கள் உள்ளன. புனைந்துரைக்கப்பட்டது அல்ல, பொருளுடையது என்று நாட்டப்பட்டு உரைக்கும் வேதாந்தத்தில் பல கோடிப் பதிகள் உள்ளன. கலைவல்லுநர்களால் ஆகம நூல்களில் நுணுக்கமாய்க் காட்டப்பட்ட கலாந்தத்தில் பல கோடிப் பதிகள் உள்ளன. உலகியல் வாழ்க்கைக்குரிய அறங்களையுரைத்து இல்லங்களில் ஓதப்படும் வேதாந்த நூல்களில் பல கோடிப் பதிகள்

உள்ளன. விளங்குகின்ற சித்தாந்த நூல்களில் பல கோடிப் பதிகள் கூறப்பட்டுள்ளன. இவையெல்லாவற்றிலும் அருட்சோதியாகிய தனியாட்சி நடத்துகின்ற அருளரசே! என்னுடைய சொல்மாலையை இன்பத்துடன் ஏற்றருள்வாயாக!' என்று இறைவனின் தன்மை எடுத்துரைத்து, தன்னுடைய சொல்மாலையை ஏற்று இறைவன் அருள வேண்டும் என்று பாடியுள்ளார் இராமலிங்க அடிகளார்.

**சொற்பொருள் விளக்கம்**

1. பதிகள் - தலங்கள்
2. வல்லார் – கலைவல்லுநர்
3. இலங்குகின்ற – விளங்குகின்ற

----------------------

**ஆ.எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை - இரட்சண்யமனோகரம் - பால்யபிரார்த்தனை**

**எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை**

- பிறப்பு – 23.04.1827.
- '**கிறித்துவக்கம்பர்**' என்று அழைக்கப்பெறுபவர்.
- பிறந்த ஊர் – திருநெல்வேலி மாவட்டம் ரெட்டியார்பட்டி.
- குலம் - வேளாளர் குலம்.
- சமயம் - வைணவ சமயம்.
- பெற்றோர் – சங்கரநாராயண பிள்ளை, தெய்வநாயகியம்மை
- இயற்பெயர் – கிரு'ணபிள்ளை
- கிறித்தவ சமயம் மாறிய இவர் தன்னுடைய பெயரை **ஹென்றி ஆல்பிரட்** என்று மாற்றிக்கொண்டார்.
- இவ்விரு பெயர்களின் சுருக்கமே **எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை** என்பதாகும்.
- இயற்றிய நூல்கள்: போற்றித்திருவருகல், இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய குறள், இரட்சணிய பாலா.
- இவர் 03.02.1900-ல் தன்னுடைய 73ஆம் வயதில் உயிரிழந்தார்.

**பால்ய பிரார்த்தனை**

கிறித்துவக்கம்பர் என்று போற்றப்பெறுபவர் எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை அவர்கள். அவர் இயற்றிய நூல்களுள் ஒன்று இரட்சணிய மனோகரம். ஆங்கிலத்தின் ஜான் பான்யன் என்பவர் இயற்றிய 'புனிதப் பயணிகள் முன்னேற்றம்' என்ற நூலின் தமிழாக்கம் மோட்சப்பிரயாணம் என்பதாகும். அந்நூலைத் தழுவி செய்யுள்நடையில் எழுதப்பட்டதே 'இரட்சணிய மனோகரம்' என்னும் நூலாகும். இதில் 'பால்ய பிரார்த்தனை' என்னும் பகுதி

பாடமாக இடம்பெற்றுள்ளது. சிறுவர்கள் பிரார்த்தனை செய்வதுபோல் பாடப்பட்டுள்ளதால் இது ‘பால்ய பிரார்த்தனை’ என்று அழைக்கப்படுகிறது.

**இறைவணக்கம்**

**1. நாடிய கருமம் பீடுற முடிய**
**நீடருள் தருமிறை தாடொழு திடுவோம்**
**2. தேசுலாந்திரி யேசனார் மாசிலாவருள் வாஞ்சையாற்**
**பேசுபால்ய பிரார்த்தனை ஓசைமுட்டுக வும்பரே**

‘நினைத்த செயல் இனிமையாக நிறைவேறுவதற்காக நீண்ட அருள்திறம் வாய்ந்தவராகிய இறைவனின் பாதத்தினை வணங்குவோம். இறைவா! உன்னுடைய அருளால் விருப்பத்தால் இந்த பால்ய பிரார்த்தனை என்ற அருள்வேண்டலை உனக்காகச் சமர்ப்பித்தேன். அந்த ஒலி வானுலகம்வரை சென்று கேட்க அருள்புரிவீராக!

**சொற்பொருள் விளக்கம்**

1. கருமம் - செயல்
2. உம்பர் – வானுலகம்

**சித்தம் ஈந்திடும் யேசுவே!**

**3. பத்தியாய் செபம் பண்ணவே**
**சுத்தமாய்த் தெரி யாதய்யா**
**புத்தியோடுமைப் போற்ற நற்**
**சித்த மீந்திடும் யேசுவே!**

இயேசுபெருமானே! உன்னுடைய அருளைப் பெறுவதற்காக, உன்னை வேண்டிக்கொள்வது எப்படி என்று அறியாமல் இருக்கிறேன். நாங்கள் நல்லறிவோடு உம்மை வாழ்த்திப் புகழும்வண்ணம் நீங்கள்தான் நல்லமனத்தைக் கொடுக்க வேண்டும்.

**சொற்பொருள் விளக்கம்**

1. சித்தம் - நல்மனம்

**தேவகுமாரனே!**

**4. பாவபாதையை விட்டுநான்**
**சீவபாதையிற் சேரநல்**
**ஆவிதந்தெனை யாட்கொளுந்**
**தேவதேவ குமாரனே.**

**5. ஆசையோடு மக் காட்செயும்**
**மாசிலாமனம் நல்கியே**
**நேசம் வைத்தெனை ரட்சியும்**
**யேசுநாத சுவாமியே.**

இறைவனின் திருமகனாக அவதரித்தவரே! நான் பாவம் நிறைந்த இம்மண்ணுலகில் வாழும் வாழ்க்கையைவிடுத்து, உம்முடைய நிழலில் வாழும் வாழ்க்கையினைப்பெற எனக்கு ஆசிதந்து, என்னை ஆட்கொள்வாய் இறைவனே! ஆசையோடும் மாசற்ற மனத்தோடும் நாங்கள் செய்யும் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு, எங்களின்மீது அன்புகொண்டு இரட்சிக்க வேண்டும் இறைவனே!

**சொற்பொருள் விளக்கம்**

1. சீவபாதை – உம் நிழலில் வாழ

**தயாபரா!**

**6. இரவில் மோமொன் றின்றியே**
**உரிமையாயுறக் காட்டினை**
**பரமனேபதி னாயிரம்**
**சரணம்யேசு தயாபரா**

**7. நாலுமாறு நயந்திடாப்**
**பாலனிப்பரு வத்துனைச்**
**சாலவேதொழ நீயருள்**
**மூலகாரண மூர்த்தியே.**

**8. துட்டரோடுற வாடிநான்**
**மட்டிலாத துன்மார்க்கனாய்க்**
**கெட்டிடா வகை கிருபைசெய்**
**தட்டிலாத தயாபரா**

இயேசுபெருமானே! தயாபரனே! இந்த உலகில் உள்ள தீமைகள் என்னைச் சூழாதவாறு ஆள்கின்ற இறைவனே! உமக்கு என்னுடைய வணக்கங்கள் இறைவனே!

உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் தோன்றி நிலைபெறக் காரணமாக இருப்பவனே! பத்துவயதே நிரம்பிய சிறுவனாகிய நான் உம்மை வணங்குவதற்குரிய மனநிலையினையும் அருளினையும் தந்தருள வேண்டும்.

இறைவா! தடைகளற்ற அருள்வெள்ளமே! தீயவர்கள் நிறைந்திருக்கும் இந்த உலகினில் நான் அவர்களோடு சேர்ந்து, தவறான வழியில் சென்றுவிடாதவாறு தடுத்து, எனக்கு நீர்தான் நல்லவழியில் செல்ல அருள்புரிய வேண்டும்.

**சொற்பொருள் விளக்கம்**

1. மோமொன்றி – தீமைகள் சூழாதவாறு
2. நாலுமாறு – பத்து வயது
3. துட்டர் – தீயவர்கள்

**மனுவேலனே!**

**9. பஞ்சிநானொரு பாவியேன்**
**தஞ்சம் உன்னிரு தாளயா**
**அஞ்சலென் றருள் வாய் பாரன்**
**மஞ்சனேமனு வேலனே.**

**10. மெய்மையாக விளங்கிடும்**
**தெய்வ நீயல தில்லையே**
**ஐயனே யுன் னடைக்கலங்**
**கைவிடாதெனைக் காப்பாயே.**

**11. இந்தநாளிலெப் பாவமும்**
**சிந்தையாலுஞ் செய்யாமலே**
**முந்தவுன் கிருபை தந்துகா**
**வந்தன மனு வேலனே**

இயேசுபெருமானே! இறைவனின் மைந்தனாக இம்மண்ணுலகில் அவதரித்தவரே! என்னைவிட்டு நீங்காமல் என்னுள் நிறைந்திருப்பவரே! உயர்வான பொருளானவரே! நான் காற்றால் அலைக்கழிக்கப்படும் பஞ்சு போன்ற எளிமையான தன்மையுடையவன். மனத்தில் குற்றமுடைய பாவியாக இருப்பவன். உம்முடைய திருவடிகளே நான் அடைக்கலமாகின்ற இடமாகும். இவ்வுலக வாழ்வில் ஏற்படும் துயரங்களைக் கண்டு அச்சம் கொள்ள வேண்டாம் என்றுகூறி எனக்கு நீவிர் அருள வேண்டும்.

இறைவா! உண்மைத் தன்மையுடன் எழுந்தருளிய தெய்வம் உம்மையன்றி வேறில்லை. நான் உம்மிடம் அடைக்கலமாக இருப்பவன். நீ என்னைக் கைவிடாமல் காத்தருள வேண்டும். எனக்குள் இருந்து என்னை ஆள்பவரே! உம்மை நான் வாழ்த்தி வணங்குகிறேன். நான் இந்த உலகில் வாழ்கின்ற நாட்களில் நீர்தான் என்னைக் காத்து அருள வேண்டியவர். இந்த நாட்களில் என் மனத்தில் எந்தவிதமான தீய நினைவுகளும் ஏற்படாதவாறு என்னை உம்முடைய திருவருளால் வழிநடத்த வேண்டும்.

**சொற்பொருள் விளக்கம்**

1. மனுவேலன் - தேவமைந்தன்

**சர்வேசனே!**

**12. அன்னையுமென தப்பனும்**
**உன்னையன்றிலை யுண்மையே**
**பின்னையென்ன பிணக்குகாண்**
**என்னைரட்சி சர் வேசனே.**

13. **நீசனே னித யத்துளே**
**மாசிலாவிசு வாசமும்**
**நேசமுந்தின நீடவே**
**யேசுவே யரு ளீவையே**

14. **சத்தியங்கதி சார்வழி**
**நித்தியசீவனு நீயெனும்**
**பத்திதந்தெனைப் பாவியாய்**
**அத்தனேயரு ளாளனே.**

இறைவா! உலகில் பொருளில் எல்லாம் நிறைந்திருப்பவரே! எனக்குத் தாயும் நீர்தான். தந்தையும் நீர்தான். உன்னைத்தவிர எனக்கு வேறுயாரும் இல்லை என்பது உண்மை. ஆதலால் என்னோடு பிணக்கு கொள்ளாமல் என்னை இரட்சிப்பாயாக! இயேசுபெருமானே! என்னுடைய மனதில் சிறிதும் குற்றம் இல்லாத தன்மையையும் விசுவாசமும் அன்பும் பெருகுமாறு நீர்தான் உம்முடைய மேன்மையான அருளைத்தந்து காக்க வேண்டும். இறைவனே! அருளையே வடிவமாகக் கொண்டிருப்பவரே! நான் சரணடைய வேண்டிய இடமும் எந்நாளும் நிறைவான வாழ்வும் நீரே என்று உணர்ந்தேன். உம்முடைய மேன்மையான அருளைத் தந்து நீ என்னைக் காத்தருள வேண்டும்.

**சொற்பொருள் விளக்கம்**

1. கதிசார் – சரணடைதல்
2. நித்தியசீவன் - நிறையான வாழ்வு

**வரமருள வேண்டும்**

15. **பொய்யும்வஞ்சமும் போக்கியே**
**மெய்யு மன்பும் விடாமல்**
**தெய்வமேயுனைச் சேவித்திங்**
**குய்யும்நல்வர முதவுவாய்**

16. **தந்தைதாயருஞ் சார்ந்த வெண்**
**பந்துவும் பரி சனரும் வீண்**
**தொந்தமன்றியோர் துணையிலை**
**உய்யும் நல்வரம் உதவுவாய்**

17. **உன்றிருப் புக ழோதவும்**
**உன்றிருப் புகழ் கேட்கவும்**
**உன்றனக்கெனை யுதவவும்**
**என்றனக்கருள் யேசுவே**

**18. அந்திசந்தி யிராப்பகல்**
**சிந்தையார வுன் சேவடி**
**வந்தனஞ் செய்து வாழ்வரம்**
**தந்தி ரட்சிசர் வேசனே.**

இயேசுவே! என் கள்ளம் மிக்க மனத்தில் இருந்து தீமையை விளைவிக்கும் பொய்யினையும் ஏமாற்றும் குணத்தையும் என்னைவிட்டு நீங்குமாறு செய்து என்னிடம் உண்மை, அன்பு இவ்விரண்டும் பெருக வரமருள வேண்டும். இயேசுவே! அன்னை, தந்தை, உறவினர்கள், என்னைச் சார்ந்திருப்பவர்கள் என இவர்களால் எனக்கு எந்தப் பயனும் இல்லை. ஆனால் நீரே முதன்மையானவர். ஒப்புமை கூற இயலாத அருள்வடிவானவரே! நீரில்லாமல் எனக்கு வேறுயாரும் துணையில்லை. எனக்கு நீரே நல்ல துணையாவீர்.

இயேசுவே! உம்மைப்பற்றிப் புகழ்கின்ற நூல்களைப் படிக்கக் கேட்கவும் உம்முடைய புகழைப் பிறர் எடுத்துக்கூற, அதைக் கேட்கவும் உமக்கு அடிமைப்பணி செய்யவும் எமக்கு நீங்கள் அருள்புரிந்து காக்க வேண்டும்.

இறைவனே! இரவு, பகல், காலை, மாலை என எல்லா நேரத்திலும் உம்முடைய நினைவன்றி வேறு நினைவு ஏதும் எழாமல் நீர்தான் என்னைக் காக்க வேண்டும். உம்முடைய திருவடிகளை நான் வணங்கிட அருள்செய்வீராக!

**சொற்பொருள் விளக்கம்**

1. உய்யும் - பிழைக்கும்

**மண்ணுலகில் அவதரித்தீர்!**

**19. என்னையோர்பொரு ளாகவும்**
**உன்மானிட வுருவமாய்ப்**
**பன்னருந்துயர் பட்டனை**

**என்ன ஈடுள தியேசுவே.**

**20. அப்பனேயுன தன்பினுக்**
**கெப்படிப்பதி லீட்டுவேன்**
**செப்புமென்னித யத்தையே**
**ஒப்படைத்தன னுன்னதே.**

**21. நாடியுன்புகழ் நாயினேன்**
**பாடிடப்பதி னாயிரங்**
**கோடிநாவுள தாயினுங்**
**கூடுமோகுமே ரேசனே.**

இயேசுவே! என்னையும் ஓர் பொருளாக நினைத்தீர். மண்ணுலகில் அவதரித்து அளவற்ற துன்பங்களை அனுபவித்தீர். இதற்குப் பதிலாக நான் உங்களுக்கு என்ன செய்ய முடியும். இயேசுவே! உம்முடைய அன்பிற்குப் பதிலாக உமக்கு என்ன செய்வேன்? உம் அருளால் நிறைந்த மனதினை உமக்கு அடைக்கலமாகக் கொடுத்துவிட்டேன். இனி அது உம்முடையது.

இறைவனின் மைந்தரே! நான் நாயினும் கீழானவன். உம்முடைய புகழைப்பாட பத்தாயிரம் கோடி நாக்குகள் எனக்கு இருந்தாலும் அருள்வெள்ளமான உம்மைப் என்னால் பாட இயலாது.

**சொற்பொருள் விளக்கம்**

1. பன்னருந்துயர் – அளவற்ற துன்பம்
2. பதினாயிரம் - பத்தாயிரம்
3. கூடுமோ – முடியுமோ

**திருவிழிக்கடை திற ஐயா!**

**22. கருவிலேபவ நோய்கலந்**
**துருவழித்தொழி யாதெனைத்**
**தெருவில்விட்டது தேசிகா**
**திருவிழிக்கடை திறவயா.**

**23. மனமும்வாக்கு மசுத்தமாய்த்**
**தினமும்பாவமே செய்துநான்**
**சினமுஞ்சாபமுஞ் சேர்த்தனன்**
**அனகனேமன்னிப் பருளுவாய்.**

**24. நாயினுங்கடை யேனெனெகத்**
**தாயினுஞ்சத கோடிபங்**
**காயவன்பகொண் டாண்டனை**
**சேயனேதிரி யேகனே.**

இயேசுவே! ஒளியானவரே! தாயின் கருவில் நானிருந்தபோதே, என்னுடைய பாவங்களால் நான் அழிந்துவிடாமல் காத்து பூமியில் பிறக்கக் காரணமாக இருந்தவரே! உம்டைய அருட்பார்வையைத்தந்து என்னை வழிநடத்த வேண்டும்.

சிறிதும் களங்கமற்றவரே! என்னுடைய மனதிலும் சொற்களிலும் குற்றங்களைக் கொண்டு அசுத்தமானவன் ஆனேன். அதனால் கோபம் என்னை வந்தடைந்தது. பிறர்கூறும் சாபமும் வந்தது. குற்றமே வடிவாக இருக்கும் எனக்கு நீர்தான் பாவமன்னிப்பு வழங்கி என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவமைந்தரே! நாயினும் கீழான என்னிடம் தாயைவிட

அளவு கடந்த அன்பைக்காட்டி, ஆட்கொண்டு அருள்செய்தீர்கள். இதற்குக் கைமாறாக உமக்கு நான் என்ன செய்யப்போகிறேன்?

**சொற்பொருள் விளக்கம்**

1. பவநோய் - பாவம்
2. தெருவில் - பூமியில்

**புண்ணிய மூர்த்தியே!**

**25. உனதுசித்த முவந்ததே**
**எனதுபாக்கிய மென்னுநல்**
**மனதுதந்தெனை வாழ்வியாய்**
**புனிதபுண்ணிய மூர்த்தியே.**

**26. பேயினாற்பிடி பட்டுநான்**
**தீயனாய்த்தியங் காமலே**
**தூயவாவியின் துணையெனக்**
**கீயுமெங்கிறிஸ் தியேசுவே.**

**27. எனக்குமற்றவ னெதுசெய**
**மனக்கொள்வேனதை மற்றவன்**
**தனக்குயான்செயத் தகுமனம்**
**எனக்குநல்கிடும் யேசுவே**

**28. அத்தனேயுயி ரளவிலே**
**மெத்தவுநடதிகில் மேவினும்**
**சத்தியந்தவ றாத்திடச்**
**சித்தமீந்திடும் யேசுவே.**

**29. வஞ்சமில்மனச் சாட்சியும்**
**நெஞ்சுமொத்துநன் னெறியிலே**
**செஞ்செவேசெலத் திருவருள்**
**விஞ்சநல்கிடும் விமலனே.**

புனித புண்ணிய மூர்த்தியே! உமது சித்தம் உவந்து எனக்கு அருள்செய்தீர். அதனை நான் மனதால் உணர்ந்தேன். எனக்கு நல் மனதையும் சிந்தனையையும் தந்து நீர்தான் என்னைக் காக்க வேண்டும். இயேசுபெருமானே! நான் பேய்களினால் பிடிபட்டுத் துன்பங்களை அடையாமல், அவற்றின் செயலால் தீயவனாக மாறும் நிலையினை அடையாமல், நீர்தான் உம்முடைய தூய்மையான ஆவியைத்தந்து எனக்குத் துணையாக்க வேண்டும்.

இறைவா! மற்றவர் அனைவரும் எனக்கு நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதுபோல நானும் மற்றவர்களுக்கு நல்லவற்றை மட்டுமே செய்யும் மனதினை எனக்குத் தந்தருள வேண்டும். எம் இறைவனே!

என் உயிருக்குத் துன்பம் நேர்ந்தாலும் கொடுமையான துன்பங்களை நான் அனுபவித்தாலும் நேர்மையான வழியில் இருந்து தவறி, தீமையான பாதைக்குச் சென்றுவிடாமல் நீர்தான் அருள்புரிந்து காத்தல் வேண்டும்.

இயேசுபிரானே! சிறிதும் குற்றமற்ற மனமும் நன்மையே விளையும் உள்ளமும் எனக்கு அமையுமாறு நீரே உம்முடைய அருளை வழங்கி என்னைக் காத்தருள வேண்டும்.

**அருள் மூர்த்தியே!**

**30.** **அறையிலந்தரங் கத்திலே**
**நிறையுமன்பொடு நித்தமும்**
**இறைவவுன்னை யிறைச்சிடும்**
**முறையெனக்கருள் மூர்த்தியே.**

**31.** **தீங்கெனக்கெவன் செய்யினுங்**
**தாங்கிநன்மை தனைச்செய**
**ஓங்குநல்மன முதவுவாய்**
**வீங்குபேரருள் வித்தகா.**

**32.** **இழிவுமூடிய வேழையேன்**
**கழிவிலாத்துயர் காணவுன்**
**விழியைமூடி விடாதைகாண்**
**ஒழிவிலாவுப காரியே.**

**33.** **வேதகீதம் விடாமலே**
**ஓதியோதியுள் ளன்பினால்**
**பாதபங்கயம் பரவவென்**
**மீதிரங்கம்வை வேதனே.**

அருள்வடிவானவரே! தனியறையில் ஆள் அரவமற்ற நிலையில் என்னுடைய மனம் தடம்புரளாமல் எப்போதும் உம்மை வணங்கி, நன்னிலை அடையும் ஒழுக்கமுறையை எனக்கு நீ வழங்கியருள வேண்டும். பேரருள் வித்தகரே! நான் துன்பமடையும்படியும் மனக்கலக்கம் கொள்ளும்டியும் பிறர் செய்கின்ற துன்பங்களை எல்லாம் பொறுத்துக்கொள்ளும் மனத்தையும் அவர்களுக்கு மீண்டும் நான் நன்மை செய்யும் மனத்தையும் நீ எனக்குத் தந்தருள வேண்டும்.

இறைவா! அறிவில்லாத நான் செய்த பாவங்களை யாரும் அறியக் கூடாது என்று என் மனதிற்குள் மூடி மறைத்துவிட்டேன். பாவத்திற்கான தண்டனையையும்

அனுபவித்துவிட்டேன். நான்படும் துன்பங்களைப் பார்த்து என்மேல் இரக்கம் காட்டி நல்லருள் புரியவேண்டும்.

வேதத்தின் பொருளானவரே! வேதங்களையும் கீதங்களையும் நான் மீண்டும் மீண்டும் பாடி, உள்ளத்தில் உன்மீது அன்பு கொண்டு, உன் பாதத்தாமரை அடைய நீர் இரக்கம் கொண்டு அருள்புரிய வேண்டும்.

**சொற்பொருள் விளக்கம்**

1. இறைச்சிடும் - வணங்கிடும்
2. பாதபங்கயம் - பாதத்தாமரை

**ஒளிமயமானவரே!**

**34. திருட்டுநெஞ்சைத் தினம்தினம்**
**மருட்டுலோகத்தை வந்துவந்**
**துருட்டுபேயை யொழித்துநீ**
**தெருட்டுவாயெனைத் தேசிகா.**

**35. திரணம்நானொரு சிறியனுட்**
**கரணமோய்ந்துடல் கைவிட**
**மரணபாசம் வளைக்கையில்**
**சரணபங்கயந் தாவையா.**

**36. கள்ளுனுக்கருள் காட்டிய**
**வள்ளலேபர மண்டலத்**
**துள்ளுளேயெனை யுள்ளியாட்**
**கொள்ளுவாய்கதி கூட்டுவாய்.**

**37. தழுவுசீவபுத் தகத்திலே**
**பிழைபடாமலென் பேரையும்**
**எழுதிவைத்திக ழாதுநீ**
**முழுதுங்காத்தருள் மூர்த்தியே.**

இறைவா! குற்றமுடையது என் மனம். அதனால் இவ்வுலகத்தில் துன்பத்தினை அனுபவிக்கிறேன். துன்பம் என்னும் பேய்கள் என்னைத் துரத்துகின்றன. துன்பம் நிறைந்த இவ்வுலக வாழ்வில் இருந்து என்னை நீக்கி அருள்புரிவாயாக! மேன்மையானவரே! உம் அருளின் முன்னால் நான் சிறுதுரும்பு போன்றவன். என் உடல், மனம், உயிர் எல்லாம் ஒடுங்கி, ஒருநாள் செயல்படாமல் போகின்ற நேரத்தில், உம் அருள்வெளியில் உம்முடைய பாதங்களை அடைக்கலமாக அடைந்து, உம்முள் கலந்து பிறவி என்னும் பிணியை ஒழிக்க அருள்புரிய வேண்டும்.

இயேசுவே! சிலுவையில் அறையப்பட்டபோதும் உம்மிடம் வேண்டி நின்ற திருடனுக்கு அருள் செய்தாய். உம் மனத்தில் என்னையும் நினைத்து, உமக்குப் பணி செய்யும் அடிமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். நன்னிலையை நான் அடைய அருள்புரிய வேண்டும். அருள்மூர்த்தியே! உம் அருள் நிறைந்த உலகில் வாழத் தகுதியானவர்களின் பெயர்களை எழுதும் புத்தகத்தில் என் பெயரும் இடம்பெற நீர்தான் அருள்புரிந்து, என்னை முழுவதும் காத்தருள வேண்டும் இறைவனே!

**சொற்பொருள் விளக்கம்**

1. உருட்டு – துரத்தும்
2. கரணம் - உடல், மனம்
3. கள்ளன் - திருடன்

**வரம் தருவாய்**

**38. சிறுவனானனைச் செவ்வையாய்**
**அறியவுமுழு வன்பினால்**
**நிறையுமுள்ள நிலைக்கவும்**
**இறைவனேவர மீகுவாய்.**

**39. சிறந்தவேதநற் செம்பொருள்**
**அறிந்திடற்கென் னகத்தினைத்**
**திறந்துவைத்தருள் சிலுவைமீ**
**திறந்துயிர்த்தவென் யேசுவே.**

**40. கருத்துவைத்துநற் கல்வியை**
**அருத்தியாய்ப்படித் தறிவிலே**
**விருத்தியாயுனை மேவவே**
**திருத்துவாயெனைத் தேசிகா.**

**41. அண்ணலே உன தாலயம்**
**நண்ணி நல்லுணர் வோடுனை**
**எண்ணி யெண்ணி இறைஞ்சவுன்**
**கண்ணில் இன்னருள் காட்டுவாய்**

**42. நாளும்வேண்டுவ நல்கியே**
**ஆளுகின்றனை யப்பனே**
**மாளுமட்டுமுன் வார்கழற்**
**காளியான்செய வருள்வாய்.**

இயேசுவே! சிறுவனாகிய நான் உம்மை முழுமையாக அறிந்து போற்றவும் உம்முடைய மேலான அன்பு என் மனத்துள் நிலைத்திருக்கவும் நீவிர் அருள்புரிய வேண்டும்.

சிலுவையில் அறையப்பட்டு உயிர்நீத்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த இறைவனே! உம்முடைய புகழ்நிறைந்த திருமறையினை நான் மனத்தால் அறிந்து போற்றிட, நீர்தான் எனக்கு அருள்வழங்க வேண்டும்.

ஒளியின் வடிவானவரே! நான் வல்லமையாகக் கற்க வேண்டும். கற்றதன் பயனால் உம்மை உணர்ந்து பற்றிக் கொள்ள வேண்டும். ஆதலால் மனத்தில் குழப்பங்கள் எதுவும் இல்லாமல் தெளிவடையச் செய்ய வேண்டும் இறைவா! இயேசுவே! உம்முடைய ஆலயம் சென்று நல்ல உணர்வோடு, உன்னை எண்ணி எண்ணி வணங்குவதற்கு, உன் கண்களால் இன்னருள் காட்டுவாய்.

எம்முடைய தந்தையே! இந்த உலகில் நான் விரும்பிய பொருள்களையெல்லாம் கொடுத்து, என்னை மகிழ்ச்சியடையச் செய்தீர். நான் உலகில் வாழும்வரை உம்முடைய திருவடிகளுக்கு அடிமைப்பணி செய்யும் நல்லருளை எனக்கு வழங்கி அருள்செய்ய வேண்டும்.

**சொற்பொருள் விளக்கம்**

1. ஈகுவாய் - தருவாய்
2. மாளுமட்டும் - வாழும்வரை

**தேவர்களின் தலைவனே!**

**43. உம்பருக்கர சேயுயனை**
**நம்பினேனுனை நம்பினேன்**
**வெம்பியென்னுயிர் வீடுநாட்**
**செம்பதத்துணை சேர்த்தியால்.**

**44. ஈன்றுளோரடி யேனுடன்**
**தோன்றினோர்பர சுகமுற**
**ஆன்றநல்வர மருளுவாய்**
**மூன்றொன்றாகிய மூர்த்தியே.**

**45. அகிலலோகமு மநுதினம்**
**இகலிலாதுனை யேத்தியே**
**புகலிடம்பெறப் புனிதமார்**
**பகவனேகிருபை பாலியாய்.**

**46. எந்தையே யுலகி யாவையும்**
**தந்துபாவச் சழக்கற**
**மைந்தனைத்தந்த வண்மைக்கே**
**சந்ததந்துதி சாலவே.**

**47. வேதம்வாழ்கமெய் வேதியர்**
**போதம்வாழ்கவிப் புன்சொலார்**
**கீதம்வாழ்க கிறிஸ்துவின்**

**பாதம்வாழ்க பல்லூழியே.**

வானுலக தேவர்களின் தலைவனே! நான் நன்னிலை அடைய உம்மை நம்பி என்னை ஒப்படைத்திருக்கிறேன். வெம்பி என்னுடைய உயிர் உடலைவிட்டுப் பிரிகின்ற நாளில், உம்முடைய திருவடிகளில் என்னைச் சேர்த்தி அருள்புரிய வேண்டும். நன்மையின் வடிவானவரே! பிதா, சுதன், பரிசுத்த ஆவி என்கிற மூன்றும் ஆகியவரே! மண்ணுலகில் வாழ்பவர்களும் என்னோடு இவ்வுலகில் பிறந்தவர்களும் நல்ல நிலையினையடைந்து, உம் உலகை அடைய அருள் வழங்க வேண்டும்.

தூய்மையின் வடிவமாக இருப்பவரே! இந்த உலகம் எல்லாம் ஒவ்வொரு நாளும் உம்மைப்புகழ்ந்து, அதன் பயனாய்ப் பிறவாப்பெருநிலையை அடைய நீவிரே அருள்புரிய வேண்டும்.

எம் தந்தையே! உலகத்தையும் உலகத்தில் உள்ள பொருட்களையும் படைத்தருளியவரே! இந்த உலகத்தில் வாழும் மக்களின் பாவம் நீங்க தேவ மைந்தனாக இயேசுவைக் கொடுத்தவரே! எப்போதும் உம் அருளால் மேன்மை உண்டாகட்டும்.

இயேசுவே! உம் புகழைக்கூறும் வேதம் வாழ்க! உம் வேதத்தை எடுத்துரைப்பவர்களின் அருள்வாக்கும் அருளுரையும் வாழ்க! என்னுடைய சிறுமைத்தன்மை உடைய சொற்களால் அமைந்த பாடல்கள் வாழ்க! உம்முடைய மேன்மைமிக்க திருவடி பலகாலம் வாழ்க!' என்று இறைவனைப் பிரார்த்தனை செய்து பாடுகின்றார் கிருட்டிணப்பிள்ளை அவர்கள்.

**சொற்பொருள் விளக்கம்**

1. உம்பர் – தேவர்
2. மூன்றொன்றாகிய – பிதா, சுதன், பரிசுத்த ஆவி
3. பாவச் சழக்கற – பாவம் நீங்க

------------------------------------------------

## இ. குணங்குடி மஸ்தான் சாகிபு - பராபரக்கண்ணி

**குணங்குடி மஸ்தான் சாகிபு**

- காலம் - 1788-1835
- ஊர் - குணங்குடி அல்லது காயல்பட்டினம்
- இயற்பெயர் – சுல்தான் அப்துல் காதிறு லெப்பை
- தந்தை – நயினார் முகம்மது ஞானி
- இவரது பாடல்களைத் தொகுத்தவர் – சீயமங்கலம் அருணாசல முதலியார்
- அத்தர் வாணிகம் செய்தவர்.

- துறவியாகி சென்னை இராயபுரத்தில் வாழ்ந்த இவர் பல அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார்.
- இவர் இயற்றிய பாடல்கள் மஸ்தான் சாகிபு பாடல்கள் எனப்படும். இவை தாயுமானவர் பாடல்களை நிகர்த்தன.
- இவர் பாடல்களில் சித்தர் பாடல்களின் சாயல் இருக்கும்.
- பராபரக்கண்ணி, எக்காலக்கண்ணி, மனோன்மணிக்கண்ணி, நந்தீஸ்வரக்கண்ணி, சதகம், ஆனந்தக்களிப்பு போன்றவற்றை இயற்றியுள்ளார்.

**பராபரக்கண்ணி**

பராபரன் என்றால் பரம்பொருளான இறைவன் என்பது பொருள். அண்ட சராசரங்களுக்கெல்லாம் முதல்வனான இறைவன்மீது மாலைகளைப் போலப் பாடல்கள் புனையப்பட்டதால் பராபரக்கண்ணி எனப்பட்டது. 100 கண்ணிகளைக் கொண்ட இந்நூலில் இறைவனின் பெருமைகளையும் குணங்களையும் எடுத்துக்கூறுகின்றார் குணங்குடி மஸ்தான் சாகிபு.

**1. அண்ட புவனமென்றும் ஆடுதிருக் கூத்தினையான்**
**கண்டு மகிழ்ந்திடவே காட்டாய் பராபரமே**

**2. ஆதியாய் ஆண்டவனாய் அஃததுவாய் நின்றபெருஞ்**
**சோதியாய் நின்மலமாய்ச் சூழ்ந்தாய் பராபரமே**

**3. வேத மறைப்பொருளை வோதாந்தத்து உட்கருவை**
**ஓதி உனையறிந்தார் உண்டோ பராபரமே.**

**4. அண்ட புவனமுடன் ஆகாச மென்று உசும்பிக்**
**கொண்டாடும் மெஞ்ஞானக் கூத்தே பராபரமே**

**5.நாவாற்புகழ்க்கெட்டா நாயகனே நாதாந்தம்**
**பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே!**

**6.பேரால் பெிய பெரும்பொருளே பேதைதனக்கு**
**ஆரா ரிருந்தும்பலன் ஆமோ பராபரமே**

**7.மாராய நற்கருணை மாவருள்சித் தித்திடவே**
**பாராயோ ஐயா பகராய் பராபரமே**

**8.ஆனாலு முன்பாதம் யாசித்து இருப்பதற்குத்**
**தானாய் இரங்கியருள் தாராய் பராபரமே**

**9.நாதாந்த மூல நடுவீட்டுக்குள் இருக்கும்**
**மாதவத்தோர்க்கு ஆன மருவே பராபரமே**

**10.உடலுக்கு உயிரேஎன் உள்ளமே உன்பதத்தைக்**
**கடலுமலை யும்திரிந்தும் காணேன் பராபரமே.**

**திருக்கூத்து**

‘அண்டம், புவனமென்று அனைத்து இடங்களிலும் நீ ஆடும் திருக்கூத்தினை நான் கண்டு களித்திருக்கக் காட்டுவாய் பராபரமே!

உலகத்தின் தொடக்கமாகவும் இறைவனாகவும் உலகில் உள்ள அனைத்துப்பொருட்களாகவும் பெருஞ்சோதியாகவும் நிர்மலப்பொருளாகவும் வீற்றிருக்கிறாய் பராபரமே!

**வேதங்களின் மறைப்பொருள்**

ரிக், யசூர், சாமம், அதர்வணம் என்ற வேதங்களின் மறைப்பொருளை, வேதாந்தக் கருத்துக்களைக் கற்று, உன்னையறிந்தார் இந்த உலகினில் உண்டோ பராபரமே!

அண்டமும் உலகமும் ஆகாயமும் துதித்துக் கொண்டாடும் மெய்ஞ்ஞானக் கூத்தே பராபரமே!

**நீ இல்லையெனில்**

நாவினால் புகழ்வதற்கு எட்டாத புகழினைக் கொண்டுள்ள நாயகனே! நாதாந்தப் பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே!

பேரினால் பெரிய பொருளாயிருக்கின்ற பரம்பொருளே! நீ இல்லையெனில் எனக்கு யார் இருந்தும் பலன் இல்லை பராபரமே!

**அருள் தருவாய்!**

எனக்கு அந்நியமான கருணை என்கின்ற உன்னுடைய திருவருள் கிடைக்க உனது கடைக்கண் பார்வை தருவாய் பராபரமே!

எப்படியானாலும் உன்னுடைய திருவருளை யாசித்திருப்பதற்குத் தானாகவே கிருபை தந்து அருள் செய்யவேண்டும் பராபரமே!

**காணவில்லை பராபரமே!**

நாததத்துவமான மூலநடு வீட்டுக்குள்ளே எழுந்தருளியிருக்கின்ற தவயோகிகளுக்கானவனே பராபரமே!

உடலுக்குள் உயிர்போல இருக்கக்கூடியவனே! என்னுடைய உள்ளமே! உன்னுடைய திருவடிகளைக் கடலிலும் மலையிலும் நான் திரிந்தும் காணவில்லை பராபரமே!’ என்று இறைவனின் தன்மையினையும் இறைவனிடம் வேண்டுவனவற்றையும் விளக்குகின்றார் குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள்.

**சொற்பொருள் விளக்கம்**

1. அண்டம் - பிரபஞ்சம்
2. ஆதியாய் - முதல்வனாய்
3. அ.்.ததுவாய் - அந்தந்தப்பொருட்களாய்
4. உசும்பி – துதித்து

**தொகுப்புரை**

அலகு இரண்டில் பிற்காலப் பக்தி இலக்கியங்களான இராமலிங்கர் இயற்றிய திருவருட்பாவில் உள்ள அருள் விளக்க மாலையில் முதல் பத்துப் பாடல்களான அருள்ஒளி விளக்கு, குளிர்தருவே, ஆட்கொண்ட குருவே, நல்கிய மாமருந்தே, வாழ்வளித்த நிதியே, தெய்வ மணவாளா, கற்கண்டே கனிவாய், கதிக்கு வழி காட்டுகின்ற கண்ணே மற்றும் மன்றில் நடிக்கும் தனியரசே ஆகிய பாடல்களின்வழி அருட்சோதியின் திருவடியில் அணிந்தருள விளக்குகிறார். மேலும், கிருட்டிணப்பிள்ளையின் இரட்சண்ய மனோகரத்தில் பால்ய பிராத்தனையின் பொருண்மைகளையும் சிறப்புகளையும் இறைவனை பிரார்த்தனை செய்து பாடுகிறார். மேலும் குணங்குடி மஸ்தான் சாகிபின் பராபரக்கண்ணியில் திருக்கூத்து, வேதங்களின் மறைபொருள் ஆகியவற்றை குறிப்பிட்டு இறைவனின் தன்மையினையும் இறைவனிடம் வேண்டுவனவற்றையும் விளக்குகிறார்.

## பயிற்சி வினாக்கள்

### பகுதி – அ

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1.திருவருட்பாவின் (அருள்விளக்கமாலையின்) ஆசிரியர் யார்?

**அ.இராமலிங்கஅடிகள்** ஆ.கிருட்டிணப்பிள்ளை இ.மஸ்தான்சாகிபு ஈ.வீரமாமுனிவர்

2. வள்ளலார் என்று அழைக்கப்பெறுபவர் யார்?

**அ.இராமலிங்கஅடிகள்** ஆ.கிருட்டிணப்பிள்ளை இ.மஸ்தான்சாகிபு ஈ.வீரமாமுனிவர்

3. வள்ளலார் பிறந்த ஊர் எது?

அ.வடலூர் ஆ.கடலூர் **இ.மருதூர்** ஈ.விருதுநகர்

4. வள்ளலார் பின்பற்றிய நூல் எது?

அ.திருவருட்பா ஆ.தேவாரம் **இ.திருவாசகம்** ஈ.நான்மணிமாலை

5. கோடை வெயிலில் வெதும்பியவர்க்குக் குளிர்ந்த மரம் போல இருப்பவர் யார்?

**அ.ஈசன்** ஆ.நான்முகன் இ.இந்திரன் ஈ.கண்ணன்

6. “ஒசித்த கொடி” என்பதன் பொருள் யாது?

அ.ஒடிந்த கொடி **ஆ.கொழுகோம்பின்றி அலைகின்ற கொடி**

இ.ஆடும்கொடி ஈ.தரையில் படரும் கொடி

7. ‘வேதாகமங்களின் உச்சியில் விளங்கும் இன்பம் நிறைந்த பரம்பொருள் சிவன்’ என்று கூறியவர் யார்?

அ.தாயுமானவர் **ஆ.வள்ளலார்** இ.திருஞானசம்பந்தன் ஈ.பாம்பாட்டிச்சித்தர்

8. திருவருட்பாவில் நமக்குப் பாடமாக அமைந்துள்ள பகுதி எது?

அ.சென்னை கந்தக்கோட்டம் ஆ.உலாமாலை இ.திருவருட்பேறு **ஈ.அருள்விளக்கமாலை**

9. இரட்சணிய மனோகரம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ.இராமலிங்கஅடிகள் **ஆ.கிருட்டிணப்பிள்ளை** இ.மஸ்தான்சாகிபு ஈ.வீரமாமுனிவர்

10. 'யாருடன் தான் நட்பு கொள்ளாமல் இருக்க வேண்டும்' என கிருட்டிணப்பிள்ளை கூறுகின்றார்?

**அ.அரக்கர்கள்** ஆ.யூதர்கள் இ.தீயவர்கள் ஈ.ஏழைகள்

11. இயேசுபெருமான் சிலுவையில் இருக்கும்பொழுது யாருக்குக் கருணை காட்டியதாக கிருட்டிணப்பிள்ளை பாடுகின்றார்?

அ.யூதர்கள் **ஆ.திருடன்** இ.மன்னன் ஈ.இசுரவேலர்

12. எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை பிறந்த ஊர் எது?

**அ.ரெட்டியார்பட்டி** ஆ.தேனி இ.புதுக்கோட்டை ஈ.நெல்லை

13.'கிறித்தவக்கம்பன்' என்று போற்றப்பெறுபவர் யார்?

அ.வேதநாயகம்பிள்ளை **ஆ.கிருட்டிணப்பிள்ளை** இ.வீரமாமுனிவர் ஈ.கால்டுவெல்

14. பராபரக்கண்ணியின் ஆசிரியர் யார்?

அ.இராமலிங்கஅடிகள் ஆ.கிருட்டிணப்பிள்ளை **இ.குணங்குடிமஸ்தான்சாகிபு** ஈ.வீரமாமுனிவர்

15. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர் யாது?

அ.நயினா முகமது ஞானி **ஆ.சுல்தான் அப்துல் காதிறு லெப்பை** இ.அப்துல் ரகுமான் ஈ.அப்துல் காதர்

16. 'இசுலாமியத் தாயுமானவர்' என்று அழைக்கப்படுபவர் யார்?

அ.இராமலிங்கஅடிகள் ஆ.கிருட்டிணப்பிள்ளை **இ.குணங்குடிமஸ்தான்சாகிபு** ஈ.வீரமாமுனிவர்

17. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் தந்தையார் பெயர் யாது?

**அ.நயினா முகமது ஞானி** ஆ.சுல்தான் அப்துல் காதிறு லெப்பை இ.அப்துல் ரகுமான் ஈ.அப்துல் காதர்

18. குணங்குடி மஸ்தான் சாகிபு மீது நான்மணிமாலை பாடியவர் யார்?

**அ.திருத்தணிகை சரவணப்பெருமாள்** ஆ.அய்யாசாமி இ.பெரியசாமி ஈ.பட்டினத்தார்

19. 'பராபரன்' என்பதன் பொருள் யாது?

**அ.இறைவன்** ஆ.சக்தி இ.அருள் ஈ.உலகம்

20. மஸ்தான் சாகிபு செய்த தொழில் யாது?

அ.ஆசிரியர் ஆ.சமயக்கல்வி அறிஞர் **இ.அத்தர் வணிகம்** ஈ.வேளாண்மை

21. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் பாடல்களைத் தொகுத்தவர் யார்?

அ.திருத்தணிகை சரவணப்பெருமாள் ஆ.அய்யாசாமி **இ.சீயமங்கலம் அருணாசலமுதலியார்** ஈ.நயினா முகமது

## பகுதி – ஆ

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்**

1.வள்ளலார் திருவருட்பாவில் எடுத்துரைக்கும் இறைவனின் தன்மைகளை விளக்குக.

2.வள்ளலாரின் ''கோடையிலே இளைப்பாற்றும் குளிர்தருவே'' என்ற பாடலை விளக்கி வரைக.

3.வள்ளலார் – குறிப்பு வரைக.

4.எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை – குறிப்பு வரைக.

5.இயேசுபெருமானின் இரக்க குணத்தை கிருட்டிணப்பிள்ளை பாடல்களின்வழி விளக்குக.

6.இறைவன் தன்னை முழுமையாக ஆட்கொள்ள வேண்டும் என கிருட்டிணப்பிள்ளை வேண்டுவதை விளக்குக.

7.குணங்குடி மஸ்தான் சாகிபு – குறிப்பு வரைக.

8.குணங்குடி மஸ்தான் சாகிபு உரைக்கும் இறைவனின் தன்மைகளை விளக்குக.

## பகுதி-இ

**எட்டு மதிப்பெண் வினாக்கள்**

1.தன்னுடைய சொல்மாலையை ஏற்று இறைவன் அருள்புரிய வேண்டும் என வள்ளலார் பாடிய பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

2.திருவருட்பா அருள்விளக்கமாலை மூலம் அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

3.இரட்சணிய மனோகரம் 'பால்ய பிரார்த்தனை' மூலம் அறியலாகும் இறைவனின் தன்மைகளைத் தொகுத்துரைக்க.

4.கிருட்டிணப்பிள்ளையின் பக்திச்சிறப்பினை 'பால்ய பிரார்த்தனை' பாடல்களின் மூலம் விளக்குக.

5.குணங்குடி மஸ்தான் சாகிபு எடுத்துரைக்கும் பராபரக்கண்ணி பாடல்களின் கருத்தினைத் தொகுத்துரைக்க.

---

# அலகு – 3 சிற்றிலக்கியங்கள்

## அ. தமிழ்விடுதூது

**தமிழ்விடுதூது**

96 வகை சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாக அறியப்பெறுவது தூது இலக்கியம். தலைவன்மீது காதல் கொண்ட தலைவி உயிருள்ள பொருட்களையோ உயிரற்ற பொருட்களையோ தலைவனிடம் தூதாக அனுப்பி, 'தூது சொல்லி வா', 'மாலை வாங்கி வா' என்று பாடப்பெறுவது தூது இலக்கியம் ஆகும். கலிவெண்பாவால் பாடப்பெறும் தூது இலக்கியத்தின் பெயர் தூதுப்பொருளின் பெயராலேயே அமையும்.

தூது இலக்கியத்துள் மிகவும் புகழ் வாய்ந்ததாகக் கருதப்பெறுவது தமிழ்விடுதூது. இந்நூலின் ஆசிரியர் யார் எனத் தெரியவில்லை. 268 கண்ணிகளால் பாடப்பெற்ற நூல். மதுரைச் சொக்கநாதப் பெருமான்மீது காதல் கொண்ட தலைவி, சிறப்பு மிகுந்த தமிழ் மொழியினைத் தூதாகத் தலைவனிடம் அனுப்பும்விதமாகப் பாடப்பெற்ற நூல். இந்நூல் தமிழ்மொழியின் பெருமைகளை எடுத்துரைக்கும் நூல்.

1. **சீர்கொண்ட கூடல் சிவராச தானிபுரத்து**
   **ஏர்கொண்ட சங்கத்து இருந்தோரும் - போர்கொண்டு**

2. **இசையும் தமிழரசி என்று ஏத்தெடுப்பத் திக்கு**
   **விசையம் செலுத்திய மின்னும் - நசையுறவே**

3. **செய்ய சிவஞானத் திரள் ஏட்டில் ஓரேடு**
   **கையில் எடுத்த கணபதியும் - மெய்யருளால்**

4. **கூடல் புரந்த ஒருகால் கூடற் புலவர்எதிர்**
   **பாடல் அறிவித்த படைவேளும் - வீடு அகலா**

5. **மன்னும் மூவாண்டில் வடகலையும் தென்கலையும்**
   **அன்னை முலைப்பாலில் அறிந்தோரும் - முன்னரே**

6. **மூன்று விழியார் முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்**
   **ஈன்றுதரச் சொல்லின் இசைத்தோரும் - தோன்று அயன்மால்**

7. **தேடி முடியா அடியைத் தேடாதே நல்லூரில்**
   **பாடி முடியாப் படைத்தோரும் - நாடிமுடி**
8. **மட்டோலைப் பூவனையார் வார்த்து ஓலை சேர்த்து எழுதிப்**
   **பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும் - முட்டாதே**

9. ஒல்காப் பெருந்தமிழ் மூன்று ஓதியருள் மாமுனியும்
தொல்காப்பியம் மொழிந்த தொல்முனியும் -மல்காச் சொல்

10. பாத்திரம் கொண்டே பதிபால் பாய் பசுவைப் பன்னிரண்டு
சூத்திரம் கொண்டே பிணித்த தூயோரும் - நேத்திரமாம்

11. தீதில் கவிதைத் திருமாளிகைத் தேவர்
ஆதி முனிவர் அனைவோரும் - சாதி, உறும்

12. தந்திரத்தினால் ஒழியாச் சார்வினையைச் சாற்றுதிரு
மந்திரத்தினால் ஒழிந்த வல்லோரும் - செந்தமிழில்

13. பொய்யடிமை இல்லாப் புலவர் என்று நாவலர்சொல்
மெய்யடிமைச் சங்கத்து மேலோரும் - ஐயடிகள்

14. காடவரும் செஞ்சொல் கழறிற்றறிவாரும்
பாடஅரும் தெய்வமொழிப் பாவலரும் - நாடஅரும்

15. கல்லாதார் சிங்கமெனக் கல்வி கேள்விக்கு உரியர்
எல்லாரும் நீயாய் இருந்தமையால் - சொல் ஆரும்

16. என்னடிகளே உன்னைக் கண்டு ஏத்தின்இடர் தீருமென்றுஉன்
பொன்னடிகளே புகலாப் போற்றினேன் - பன்னியமென்

17. பஞ்சி படா நூலே பலர் நெருடாப் பாவே கீண்டு
எஞ்சி அழுக்கு ஏறா இயல்கலையே - விஞ்சுநிறம்

18. தோயாத செந்தமிழே சொல்ஏர் உழவர் அகம்
தீயாது சொல்விளையும் செய்யுளே - வீயாது

19. ஒருகுலத்தும் வாராது உயிர்க்கு உயிராய் நின்றாய்
வருகுலம் ஓர் ஐந்தாயும் வந்தாய் - இருநிலத்துப்

20. புண்ணியம் சேர்உந்திப் புலத்தே வளிதரித்துக்
கண்ணிய வாக்காம் கருப்பாய் - நண்ணித்

**சிவபெருமான்**

‘சிவபெருமான் மதுரை தமிழ்ச்சங்கத்தின் தலைச்சங்கத்தின் தலைவராக இருந்தார். மதுரை நகரை சிவபெருமான் போற்றிப் பாதுகாத்ததால் தமிழ்மொழியும் சைவ சமயமும் போற்றி வளர்க்கப்பெற்றன.

**பார்வதி**

பார்வதி அன்னை தமிழரசி என்று அனைவரும் போற்றும் வகையில் தமிழ் வளர்த்த நகராகிய மதுரை மாநகரில் இருந்து ஆட்சி புரிந்தார். ஆதலால் மதுரை மீனாட்சி என்று அழைக்கப்பெறும் சிறப்பினைப் பெற்றார். பூமியில் அவதரித்திருந்தபோது எட்டுத் திசைகளிலும் சென்று வெற்றி கொண்டு ஆட்சி புரிந்தார்.

**விநாயகர்**

தத்துவ வடிவமான பிள்ளையார் தத்துவ நூலாகிய சிவஞானபோதத்தில் ஓர் ஏட்டைத் தன் கையில் எடுத்தார்.

**முருகப்பெருமான்**

இளையவராகிய முருகப்பெருமான் தமிழ்ச் சங்கத்தில் புலவராய் இருந்து, கூடல் நகராகிய மதுரையில் ஆட்சி புரிந்து, புலவர்களின் எதிரில் அமர்ந்து, அவர்களுக்குச் சங்கப் பாடல்களின் பெருமையினை எடுத்துரைத்தார். இவ்வாறாக கடவுளரால் போற்றி வளர்க்கப்பெற்ற பெருமைக்குரியதாக தமிழ்மொழி விளங்குகிறது.

**திருஞானசம்பந்தர்**

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவ சமயக் குரவர்களாகப் போற்றப்பெறுகின்றனர். அவர்களுள் திருஞானசம்பந்தர் தன்னுடைய மூன்றாம் அகவையில் இறைபக்தி கொண்டு, உமையம்மையிடம் ஞானப்பால் பெற்று, வடமொழி, தென்மொழி ஆகிய மொழிகளை அறிந்து, இசைப் பாடல்கள் பாடினார்.

**சுந்தரர்**

சிவபெருமானைத் தன்னுடைய நண்பனாக்கிக் கொண்ட சுந்தரர் பெருமான், முதலையுண்ட பாலகனைத் தன் இசைப்பாடல் மூலம் உயிரோடு மீட்டுத் தந்தார்.

**திருநாவுக்கரசர்**

திருமாலாலும் பிரம்மாவாலும் அடிமுடி அறியப்பெறாத சிறப்பினை உடையவர் சிவபெருமான்.

அவரின் பாதத்தினைத் தனக்கு மணிமுடியாக அணிவிக்கும்படி திருநாவுக்கரசர் வேண்ட, திருநல்லூரில் காட்சியளிக்கும் இறைவன், அவ்வாறே தன் பாதத்தினை நாவுக்கரசக்கு மணிமுடியாகச் சூட்டுகிறார்.

**மாணிக்கவாசகர்**

மாணிக்கவாசகரின் இனிய தமிழ்ப்பாடலை அருகிருந்து கேட்க விருப்பம் கொள்கிறான் சிவபெருமான். சிவன் தன் அருகமைந்து பாடலை எழுதுவதாக இருந்தால் பாடல் பாடுகிறேன் என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார். அதன்படி மாணிக்கவாசகர் அருகில் இறைவன் அமர்ந்து பாடல்களை எழுத, திருவாசகத்தினைப் பாடி முடிக்கின்றார் மாணிக்கவாசகர். இவ்வாறாக இறைவன் தமிழ்ப்பாடல்பொருட்டு சைவ சமயக் குரவர்களுக்கு அருள்புரிந்த திறம் அறியப்பெறுகின்றது.

**அகத்தியர் – தொல்காப்பியர்**

என்றும் குறையாத பெருமையுடைய தமிழ்மொழிக்கு இலக்கணம் உருவாக்கிக் கொடுத்தார் அகத்தியர் பெருமான். அவரைத் தொடர்ந்து தொல்காப்பியரும் தமிழ்மொழிக்கு இலக்கண நூலைப் படைத்தார்.

**சிவஞானபோதம்**

சைவ சமயத்தின் பிழிவாக விளங்கக்கூடிய பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் தத்துவத்தைக் கூறுவது சிவஞானபோதம். இறைவனை நாடிச்செல்லும் உயிர்களை ஆற்றுப்படுத்தும் நெறிகொண்ட இந்நூல், 12 சூத்திரங்களை மட்டுமே உடையதாகும். இதனை இயற்றியவர் மெய்கண்டார் ஆவார். திருமாளிகைத்தேவரும் பக்திச்சுவை மிகுந்த பல இனிய இசைத்தமிழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். இவரைப் போலப் பலரும் தீதற்ற பல தெள்ளு தமிழ்ப் பாடல்களை இயற்றியுள்ளனர்.

**திருமூலர்**

திருமூலர் ‘அன்பே சிவம்’ என்பதையும் ’உள்ளம் பெருங்கோவில்’ என்பதையும் உணர்த்தியவர் ஆவார். உயிர்களின் வினைதீர அவனிடம் உண்மையான அன்பு காட்டுவதே வழி என்பதைக் கூறினார் அவர்.

**சங்க இலக்கியங்கள்**

செந்தமிழில் அகத்தியர், தொல்காப்பியர் இயற்றிய இலக்கண நூல்களைக் கொண்டு காலத்தால் அழியாத என்றும் புகழ் மிகுந்திருக்கக் கூடிய சங்க இலக்கியங்கள் பாடப்பெற்றன. சங்க இலக்கியங்கள் யாவும் கருத்துப் பெட்டகமாய்த் திகழ்கின்றன.

**ஐயடிகள் காடவர்கோன்**

நாயன்மார்களுள் ஒருவரான ஐயடிகள் காடவர்கோன் அரசைத் துறந்து, ஆன்மீகம் போற்றி, தலந்தோறும் சென்று பல வெண்பாக்கள் பாடியவர். உயிர்கள் அனைத்தும் உரைக்கும் யாவற்றையும் உணரும் திறன் வாய்க்கப்பெற்ற கழறிற்றறிவார் நாயனாரும் இசைப்பாடல் மூலம் இறைவனை வழிபட்டார்.

**சேரமான் பெருமாள் நாயனார், திருவள்ளுவர்**

செம்மையான சொல்லாற்றல் கொண்ட நூல்களை சேரமான் பெருமாள் நாயனார் இயற்றியுள்ளார். உலகப் பொதுமறையாகிய திருக்குறளைப் பாடிய பெரும் புகழ் வாய்ந்த தெய்வப்புலவராக திருவள்ளுவர் உள்ளார்.

**சரணடைந்தேன்**

கல்லாதவர்கள் நாடவும் முடியாத அருஞ்சிங்கமெனக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் எல்லாருமாக நீயே இருந்தமையால்தான். சொல்லில் அடங்காத புகழ்வாய்ந்த தமிழ்மொழியே! உன்னைக் கண்டு புகழ்ந்தால் என் துயரம் தீரும் என்று உன்னுடைய பொன் போன்ற அழகிய திருவடிகளில் சரணடைந்து போற்றுகின்றேன்.

**செம்மைத்தமிழே!**

தமிழ்மொழியே! அடிக்கப்பெற்ற மென்மையான பஞ்சிலிருந்து நூற்கப்படாத நூலினைக் கொண்டிருக்கின்றாய். பலரால் நெருங்கப்படாத பாக்களைக் கொண்டிருக்கிறாய். கிழிந்து குறைந்து அழுக்கடையாத இயல்புள்ள ஆடையாகிய கலைகளைக் கொண்டிருக்கிறாய்.

வேறுநிறம் மிஞ்சித் தோயாத செம்மைத் தமிழே! புலவர்களாகிய உழவர்கள் சொற்களையே ஏராக்கி மனங்களை உழுவார்கள். அப்பொழுது உழவர்களாகிய புலவர்கள் அகம் (அறிவு) தீய்ந்து போகாது சொற்களை விளைவிக்கும் செய்யுளே!

**ஐந்து குலங்கள்**

ஒரு குலத்தும் பிறக்காத நீ என்றும் அழியாது எங்கள் உயிருக்கு உயிராக நின்றாய். ஆனால் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்று ஐந்து குலங்களாகவும் வந்தாய்.

**தமிழாகப் பிறந்தாய்**

பெருமைமிக்க இவ்வுலகில், புண்ணியம் வாய்ந்த உந்தியில் தோன்றிய காற்று, வாக்கு என்னும் கருத்தரித்து இருந்து தமிழகப் பிறந்தாய்' என்று தமிழ்மொழியின் சிறப்புகளை எடுத்துக்கூறி, மதுரை சொக்கநாதப் பெருமானிடம் தூதாக அனுப்புகிறாள் தலைவி.

**சொற்பொருள் விளக்கம்**

1. கூடல் - மதுரை
2. தமிழரசி – பார்வதி தேவி
3. நசையுறவே – விருப்பத்தோடு
4. கூடல் புரந்து – மதுரை தமிழ்ச்சங்கத்தில்
5. படைவேளும் - முருகப்பெருமானும்
6. மூவாண்டில் - மூன்று வயதில்
7. மூன்று விழியார் – சிவபெருமான்

8. அயன் - பிரம்மன்
9. மால் - திருமால்
10. அருள்மாமுனி – அகத்தியர்
11. தொல்முனி – தொல்காப்பியர்
12. ஏத்தின் - புகழ்ந்தால்
13. இடர் – துயரம்
14. சொல்ஏர் உழவர் – புலவர்கள்
15. வளி – காற்று

------------------------------------

## ஆ. திருக்குற்றாலக் குறவஞ்சி – திரிகூடராசப்பக் கவிராயர் – குறத்தி மலைவளம் கூறுதல்

**திருக்குற்றாலக்குறவஞ்சி**

திருக்குற்றாலக் குறவஞ்சி தமிழ்ச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தமிழ்நாட்டின் தென்கோடியில் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் எனும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து அங்குள்ள ஈசரான குற்றாலநாதரைப் போற்றித் தெய்வக் காதல் பற்றிய கற்பனையை அமைத்துப் பாடப்பெற்ற நூல் ஆகும்.

பாட்டியல் நூல்கள் கூறும் குறத்திப் பாட்டே பிற்காலத்தில் குறவஞ்சி இலக்கியங்களாக உருப்பெற்றன. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் ஒருங்கே கொண்டிருப்பது குறவஞ்சி. காதலால் வருந்தும் தலைவியிடம் சென்று குறத்தி குறி சொல்வதாகப் பாடுவதே குறம், குறவஞ்சி எனப்பட்டது.

**குறவஞ்சி இலக்கியம்**

உலா வரும் தலைவனைக் கண்டு தலைவி காதல் கொள்ளுதல், அவள் நிலவு, தென்றல் போன்றவற்றைப் பழித்தல், குறத்தி வருதல், குறத்தி மலைவளம் கூறுதல், தலைவியின் கைபார்த்துக் குறி சொல்லுதல், விரும்பிய தலைவனைத் தலைவி அடைவாள் எனல், பரிசுபெற்று வரும் குறத்தியைக் குறவன் காணுதல், பரிசு பற்றிக் கேட்டல், குறத்தி விடை கூறுதல் என செய்திகள் நிரல்படக் கூறப்படுகின்றன.

குறத்தி செயலே மிகுதியும் கூறப்படுவதால் குறவஞ்சி எனப்பட்டது. குறவஞ்சி இலக்கியத்தில் காலத்தால் முற்பட்டது குற்றாலக் குறவஞ்சி ஆகும். திருக்குற்றாலக்குறவஞ்சியைப் பாடியவர் திரிகூடராசப்பக் கவிராயர் ஆவார்.

**திரிகூடராசப்பக் கவிராயர்**

குறவஞ்சி நாடகம் என்று போற்றப்படும் இந்நூல் வடகரை அரசனான சின்னஞ்சாத் தேவரின் அவைப்புலவராக விளங்கிய திரிகூடராசப்பக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் தென்காசிக்கு அருகில் உள்ள மேலகரம் ஊரைச் சார்ந்தவர் (இவர் திருவாவடுதுறை ஆதினத் தலைவராக விளங்கிய சுப்பிரமணிய தேசிகரின் சகோதரர் ஆவார். இவரைத் தலைவராகக் கொண்டு நெஞ்சுவிடு தூது என்ற இலக்கிய படைப்பையும் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது). திருக்குற்றாலநாதாரின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்ட இந்நூல் அன்றைய மதுரை மன்னனான முத்துவிஜயரங்க சொக்கநாத நாயக்கரின் பாராட்டையும் பரிசையும் பெற்றது.

**குற்றாலத்திரிகூடமலை**

1. **"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**
**கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பர்**
**ககனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்**
**தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்**
**செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்**
**கூனலிளம் பிறைமுடித்த வேணி அலங் காரர்**
**குற்றாலத்திரிகூட மலைஎங்கள் மலையே!"**

'குற்றாலநாதர் வீற்றிருக்கும் திரிகூடமலை சிறந்த வளம் பொருந்தியதாகும். அங்கு ஆண் குரங்கு பல வகையான பழங்களையும் பறித்துக் கொண்டு குரங்குகளிடம் கொடுத்துக் கொஞ்சம். அந்தப் பெண் குரங்குகள் சிந்தும் கனிகளுக்குத் தேவர்களும் கெஞ்சுவர். காடுகளிலுள்ள வேடுவர்கள் அவ்வானவர்களாகிய தேவர்களை அழைப்பர். வான்வழியாகப் பறந்து செல்லும் சித்தர்கள் அம்மலைக்கு வந்து காயசித்தி மூலிகைகளை விளைவிப்பார்கள். அம்மலையிலுள்ள தேனருவியின் அலைகள் வானம்வரை சென்று கீழே இறங்குவதால், சூரியனின் தேர்க்குதிரைகளின் கால்களுக்கும் தேர்ச்சக்கரங்களுக்கும் வழுக்கும்.

இத்தகைய வளம் வாய்க்கப்பெற்றது வளைந்துள்ள இளம்பிறையைச் சூடியிருக்கின்ற சடைமுடியையுடைய அழகரான குற்றாலநாதரின் திரிகூடமலை.

**சொற்பொருள் விளக்கம்**

1. வானரங்கள் - ஆண் குரங்குகள்
2. மந்தி – பெண் குரங்கு
3. வான் கவிகள் - தேவர்கள்
4. கானவர்கள் - வேடுவர்கள்
5. திரை – அலை
6. பரி – குதிரை
7. கூனல் - வளைந்த
8. இளம்பிறை – பிறைச்சந்திரன்

**எங்கள் மலை**

**2. “முழங்குகதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்**
**முற்றம்எங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்**
**கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்**
**கிம்புரியின் கொம்பொடித்து வேம்புதினை இடிப்போம்**
**செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்**
**தேன்அலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்**
**வழங்குகொடை மகராசர் குறும்பலவின் ஈசர்**
**வளம்பெருகும் திரிகூட மலைஎங்கள் மலையே!”**

முழக்கமிடும் அலைகளையுடைய அருவி கழற்சிக்காய் ஆடுவதுபோல முத்துக்களைப் பொழியும். அவ்வருவி நீர் அங்குள்ள மனைகளின் முற்றங்களில் எல்லாம் பரவிப் பெண்களின் மணல்வீடுகளை அடித்துக் கொண்டு ஓடும். மலைச்சாரல்களில் கிழங்குகளைக் கிள்ளி எடுத்தும், தேனடை எடுத்தும் மலைவளங்களைப் பாடி குறத்தியராகிய நாங்கள் நடமாடுவோம். யானைகளின் கொம்புகளை ஒடித்துக்கொண்டு வந்து, வறுத்த தினையினை உரலில் இட்டு, அக்கொம்புகளைக் கொண்டு இடிப்போம். அங்குக் குரங்குகள் மாங்கனிகளைப் பறித்துப் பந்தாடுவதுபோல் ஆடிக்கொண்டிருக்கும். தேன் பொருந்திய செண்பக மலரின் மணம் விண்ணுலகம் சென்று பரவும். அருட்கொடை வழங்குகிற தேவாதி தேவர், குறும்பலா மரத்தடியிலே எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றாலநாதர் வீற்றிருக்கும் வளம் பொருந்திய திருக்குற்றாலமலையே நாங்கள் வாழ்கின்ற மலையாகும்.

**சொற்பொருள் விளக்கம்**

1. முழங்கு – முழக்கமிடும்
2. கழங்கு – கழற்சிக்காய்
3. சிற்றில் - மணல்வீடு
4. கிம்புரி – யானை
5. தேமா – மாம்பழம்

**நிலைதங்கும் திரிகூடமலை**

**3. “ஆடுமர வீனுமணி கோடிவெயில் எறிக்கும்**
**அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்**
**வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனந் தோறும்**
**விந்தைஅகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்**
**காடுதொறும் ஓடிவரை ஆடுகுதிபாயும்**
**காகமணு காமலையில் மேகநிரை சாயும்**
**நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்**
**நிலைதங்கும் திரிகூட மலைஎங்கள் மலையே!”**

ஆடுகின்ற தன்மையுடைய நாகப்பாம்புகள் கக்கிய நாகரத்தினங்கள் எங்கும் வெயில்போல ஒளியினைக் கொடுக்கும். நிலவினைத் தான் உண்ணும் கவள

உருண்டையினை எண்ணிய யானைகள் நிலவின் வழியினை மறிக்கும். மலைக்குறவர்களாகிய வேடுவர்கள் தினைப்பயிரை விதைப்பதற்காகப் பண்படுத்தும் நிலத்தினில் உள்ள பலவகை மரங்களாகிய அகில், குங்குமம், சந்தனம் ஆகியன கண்டோர் வியக்கும்படி நறுமணத்தைப் பரப்பும். காடுகளில் ஓடிச்சென்று வரையாடுகள் துள்ளிப்பாயும். காகமும் பறவாத உயர்ந்த மலையில் மேகக்கூட்டங்கள் வந்து படியும். நீண்ட குறும்பலா வடிவில் எழுந்தருளி இருக்கின்றவரும் கைலை மலையில் வாழ்பவருமாகிய குற்றாலநாதரின் நிலைபெற்றிருக்கின்ற திருக்குற்றால மலையே எங்களுடைய மலையாகும்.

**சொற்பொருள் விளக்கம்**

1. அரவு – பாம்பு
2. மணி – நாகரத்தினம்
3. எறிக்கும் - ஒளிவீசும்
4. வரையாடு – மலையாடுகள்
5. மேகநிரை – மேகக்கூட்டம்

**உயர்ந்த மலை**

**4. “கயிலைஎனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே**
**கனகமகா மேருஎன நிற்குமலை அம்மே**
**சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே**
**சகலமலை யுந்தனக்குள் அடக்குமலை அம்மே**
**வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே**
**வான்இரவி முழைகள்தொறும் நுழையுமலை அம்மே**
**துயிலுமவர் விழிப்பாகி அகிலமெங்கும் தேடும்**
**துங்கர்திரி கூடமலை எங்கள்மலை அம்மே!”**

எங்கள் குற்றாலமலை வடக்குப் பக்கமுள்ள கயிலை மலைக்குத் தெற்கே உள்ள மலையாகும். இது பொன்மலையாகிய மேருமலை போல உயர்ந்த மலையாகும். தெற்குத் திசையிலுள்ள சிவசைலமலைக்கு வடக்கில் உள்ள மலையாகும். இம்மலை மற்ற மலைகளின் சிறப்பையெல்லாம் தனக்குள் கொண்டிருக்கும் மலையாகும். இம்மலை வைரமணிகளுடன் பலவகை மணிகளையும் வளைத்துத் தருவதாகும். வான்வழியாகச் செல்லும் சூரியன் குகைகளையே வழியாகக் கொண்டு நுழைந்து செல்வதற்கு இடனாக இருப்பதும் இம்மலையாகும்.

பாற்கடலில் அறிதுயில் புரிகின்ற திருமாலும் துயில்விட்டெழுந்து எல்லா உலகங்களிலும் போய்த் தேடுகின்ற தன்மையுடைய திரிகூடநாதப் பெருமானுக்குரிய திரிகூடமலைதான் நாங்கள் வாழ்கின்ற மலையாகும்.

**சொற்பொருள் விளக்கம்**

1. கனகம் - பொன்
2. மகாமேரு – மேருமலை
3. சயிலமலை – சிவசைலமலை
4. இரவி - சூரியன்
5. முழைகள் - குகைகள்
6. துயிலுமவர் – திருமால்

**செல்வமலை**

**5. "கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே**
**கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை அம்மே**
**எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே**
**இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே**
**சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே**
**தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே**
**செல்இனங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்**
**திரிகூடமலை எங்கள் செல்வமலை அம்மே!"**

'அம்மே! கொல்லிமலை எனக்கு இளையவாகிய செல்லி என்பவளுக்குரிய மலையாகும். அவளுடைய கணவனுக்குரிய மலை பழனி மலையாகும். ஞாயிறு மேலே செல்கின்ற விந்தியமலை என் தந்தைக்குரிய மலையாகும். இமயமலை என்னுடைய தமையனுக்குரிய மலையாகும். செல்லுதற்கரிய சுவாமிமலை என்னுடைய மாமியின் மலையாகும். நாஞ்சில் நாட்டிலுள்ள வேள்விமலை என்னுடைய தோழிக்குரிய மலையாகும். மேகங்கள் பறையை முழக்க, அதற்கேற்ப மயிலினங்கள் நடனம் ஆடுகின்ற திரிகூடமலை என்னும் குற்றாலமலையே எங்களுக்குச் செல்வப் பொருளாக இருக்கின்ற நாங்கள் வாழும் மலையாகும்.

**சொற்பொருள் விளக்கம்**

1. கொழுநன் - செல்லியின் கணவன்
2. எல்லுலவும் - சூரியன் உலாவும்
3. விந்தைமலை – விந்தியமலை
4. செல் - மேகம்

**குறவர்குல மரபு**

**6. "ஒருகுலத்திற் பெண்கள்கொடோம் ஒருகுலத்திற் கொள்வோம்**
**உறவுபிடித் தாலும்விடோம் குறவர்குலம் நாங்கள்**
**வெருவிவருந் தினைப்புனத்திற் பெருமிருகம் விலக்கி**
**வேங்கையாய் வெயில்மறைத்த பாங்குதனைக்குறித்தே**
**அருள்இலஞ்சி வேலர்தமக் கொருபெண்ணைக் கொடுத்தோம்**
**ஆதினத்து மலைகளெல்லாம் சீதனமாகக் கொடுத்தோம்**

**பரிதிமதி சூழ்மலையைத் துருவனுக்குக் கொடுத்தோம்**

**பரமர்திரி கூடமலை பழையமலை அம்மே!"**

அம்மே! எங்கள் குலம் தவிர நாங்கள் வேறுகுலத்தில் பெண்களை மணம் செய்து கொடுக்க மாட்டோம். வேறு குலத்திலிருந்து பெண்ணை எடுக்கவும் மாட்டோம். குறவர் சாதியனராகிய நாங்கள் ஒருவரிடம் நட்பு கொண்டால் இடையில் அந்நட்பை விட்டுவிட மாட்டோம். நாங்கள் அச்சம் கொள்ளும்படி தினைப்புனம் காக்கின்ற இடத்தில் வருகின்ற யானை முதலிய விலங்குகளைத் துரத்தி, வேங்கை மரமாக நின்று எங்களுக்கு நிழல்தந்து அருள்புரிகின்ற இலஞ்சியிலுள்ள வேலை ஏந்தியுள்ள முருகப்பெருமானுக்கு வள்ளியென்னும் ஒரு பெண்ணை முன்பு கொடுத்தோம். அதற்காக எங்களுக்கு உரிமையான வேறுமலைகளை மகட்கொடையாக வழங்கினோம். ஞாயிறும் திங்களும் சுற்றிவருகின்ற மேருமலையைத் துருவன் என்பவனுக்குக் கொடுத்து அனுப்பினோம். சிறந்தவராகிய திருக்குற்றால நாதருக்குரிய இத்தகைய திரிகூடமலையே எங்களுக்குரிய நாங்கள் வாழ்கின்ற மலையாகும்' என்று திரிகூடமலையின் வளத்தைப் பாடுகின்றாள் குறிகூறும் குறத்திப்பெண்.

**சொற்பொருள் விளக்கம்**

1. வெருவிவரும் - அச்சம் கொள்ளும்படி
2. பெருமிருகம் - யானை
3. வேங்கையாய் - வேங்கை மரமாய்
4. இலஞ்சி வேலர் - இலஞ்சியிலுள்ள வேலர்
5. பரிதி - சூரியன்
6. மதி – சந்திரன்
7. பரமர் – சிவபெருமான்

---

## இ.முக்கூடற்பள்ளு – நாட்டுவளம்

**முக்கூடற்பள்ளு**

பள்ளு என்பது 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று. பள்ளர்களின் வாழ்க்கையை எடுத்துரைப்பதால் இவ்விலக்கியம் பள்ளு என்னும் பெயர் பெற்றது. மருத நிலத்தில் பள்ளர் மகளிர் பாடிய 'உழைத்தியர் பாட்டு' பிற்காலத்தில் பள்ளு என்ற இலக்கிய வகையாக மலர்ந்தது.

பள்ளு இலக்கியங்களில் சிறந்ததாகப் போற்றப்பெறுவது முக்கூடற்பள்ளு. இதன் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. இதன் காலம் கி.பி.17ஆம் நூற்றாண்டு என்பர். முக்கூடல் என்னும் ஊர் திருநெல்வேலிக்கும் சிறிது வடகிழக்கில் தன்பொருநை (தாமிரபரணி), சிற்றாறு (சித்திராநதி), காட்டாறு (கோதண்டராமநதி) ஆகிய மூன்று

ஆறுகளும் கலக்கும் இடமாகும். தாமிரபரணியில் பிற இரண்டு ஆறுகளும் கலப்பதால் இது முக்கூடல் என்னும் பெயர்பெற்றது. தற்பொழுது இவ்வூர் சீவலப்பேரி என்று அழைக்கப்படுகிறது.

பாண்டிய அரசனாகிய சீவல்லபனால் வெட்டப்பெற்ற ஏரி இருப்பதனால் சீவலப்பேரி எனப்பெற்றது. இந்த சீவலப்பேரி என்று பெயர்பெற்ற **முக்கூடலில் வீற்றிருக்கும் அழகர்** என்னும் தெய்வத்தின்மீது பாடப்பட்டதால் இந்நூல் முக்கூடற்பள்ளு என்னும் பெயர்பெற்றது.

பாட்டுடைத்தலைவனாகிய திருமாலின் பெயராகிய **வடிவழகன்** பெயரை பள்ளனுக்கு ஏற்றி வடிவழகக்குடும்பன் என்றும் மூத்தபள்ளியை முக்கூடற்பள்ளி என்றும் இளையபள்ளியை மருதூர்ப்பள்ளி என்றும் இந்நூல் குறிப்பிடுகின்றது. நாடகப்பாங்கில் அமையப்பெற்றது இந்நூல்.

**நாட்டுவளம்**

**"கோட்டு வளம் கூறியமுக் கூடல் அலங் காரர்திரு**
**நாட்டுவளம் பேசமணி நாவசைத்தார் பள்ளியர்கள்**
**பாட்டுவளஞ் சேரகுலப் பத்தனார் மாலிகைப்பூங்**
**காட்டுவள மெல்லாம் களமருரை செய்வாரே."**

வளம்பொருந்திய மலைக்கு ஒப்பாகச் சொல்லப்பட்ட திருமேனியை உடையவர் முக்கூடல் அழகராகிய செண்டலங்காரர். அவர் வீற்றிருக்கும் திருநாட்டின் வளத்தைப்பாட பள்ளியர்கள் நாவினை அசைத்தனர். நம்மாழ்வார் முதலிய பத்து ஆழ்வார்களும் தங்களுடைய பாட்டின் வளத்தின் மூலம் திருமாலையும் அவர் வீற்றிருக்கும் மலையினையும் புகழ்ந்து பாடினர். அதுபோல நெற்களம் மிகுந்திருக்கும் மருதநிலமுடைய இவ்வூரின் வளத்தை பள்ளியர் பாடத் தொடங்கினர்.

**சொற்பொருள் விளக்கம்**

1. கோட்டுவளம் - வளம் பொருந்திய மலை
2. பத்தனார் – நம்மாழ்வார் முதலிய பத்து ஆழ்வார்கள்

**வடகரைநாட்டின் வளம்**

**"மேடை ஏறித்தன் காலைப் பவுசு**
**விரித்த பீலி மயிலெட்டிப் பார்க்க**
**பேடை மாங்குயில் வாய்கொண்டு உசாவப்**
**பிளந்த வாய்தனைப் பேசாமல் மூடக்**
**கோடை போய்விட்ட சோபனம் கொண்டு**
**குளிர்ந்த கொண்டற் குறுந்துளி யோட**
**வாடை யோடி வரக்களி கூரும்**
**வளமை யாசூர் வடகரை நாடே!"**

'தோகையுடைய மயில் மேடையின்மேல் ஏறி நின்று, மகிழ்ச்சி தரக்கூடிய கார்காலம் தொடங்கப் போவதையறிந்து, அதிகாலையில் ஆகாயத்தினை நிமிர்ந்து நோக்கி

நடனமாடத் தொடங்கியது. அப்பொழுது மாமரத்திலிருந்து குயிலானது தங்களுக்கு மகிழ்ச்சி தந்த வேனில்காலம் சென்று கார்காலம் வந்துவிட்டதோ என்று தன்னுடைய பெடையிடம் கேட்பதற்காக வாயைத் திறந்தது. பின் மயிலின் காட்சியைக் கண்ட குயில்சேவல் கார்காலம் வந்துவிட்டது என்று கருதித் தன்னுடைய வாயினை மூடிக் கொண்டது. கோடைக்காலம் போய்விட்டது என்பதற்கான மங்கள அடையாளங்களை அறிந்து கொண்டு, குளிர்ச்சியுடைய கொன்றை இளந்தளிரில் துளிர்க்கத் தொடங்கியது. இந்த கார்காலத்திற்குப் பின் வாடைக்காலம் வருமென்பதை அறிவிப்பதுபோல் கோழி கூவத்தொடங்கியது. இத்தகைய செழிப்பான தன்மையுடையது ஆசூர் வடகரைநாடு என்று அழைக்கப்பெறும் தன்னுடைய நாடு' என்கிறாள் மூத்தபள்ளி.

**சொற்பொருள் விளக்கம்**

1. பீலி – மயில்தோகை
2. உசாவ – கேட்பதற்காக
3. சோபனம் - மங்கள அடையாளங்கள்
4. கொண்டல் - கொன்றை
5. வாடை – வாடைக்காலம்

**தென்கரைநாட்டின் வளம்**

**“வென்றல் லோவிடு வேனென வேயிரு**
**வேழங் கூடி மதிக்குடை தாவக்**
**குன்றே லாந்தர மில்லையென் றாடவர்**
**கொம்ப னார்முலைக் குன்றிற் பதுங்க**
**மன்றல் சேரிள வேனிற் புறாக்கள்**
**மாங்குயி லுக்கு மாராயஞ் சொல்லித்**

**தென்ற லோடி வரக்களி கூரும்**
**சீவல மங்கைத் தென்கரை நாடே!”**

'நிலவும் இருளும் தம்முள் பகை கொண்டது மன்மதனின் கரிய யானையாகிய இருட்டு, அவனுடைய குடையாகிய நிலவினை வென்றுவிடுவேன் என்று இருண்ட மேகங்கள் நிலவினை மறைத்தன. நிலவையும் மறைக்கும் இருளுக்கு அஞ்சிய ஆடவர்கள் தாங்கள் ஒளிந்து கொள்வதற்குக் குன்றுகளும் பொருத்தமானவையல்ல என்று கருதி, தங்களுடைய மனைவியரின் கொங்கைகளாகிய குன்றில் பதுங்கிக் கொண்டனர். இளவேனில் காலத்தை விரும்பும் புறாக்களும் மாங்குயில்களுக்கும் இளவேனில் காலத்தை வரப்போவதை கட்டியங்கூறிக் கொண்டு, தென்றல் வரப்போவதை முன்னறிவிப்பதாகக் கோழி கூவும். இத்தகைய வளமுடையது சீவலமங்கைத் தென்கரைநாடு மருதூரைத் தன்னகத்துள்ளே கொண்ட தென்பகுதிநாடு' என்று தன்னுடைய நாட்டின் வளத்தைக் கூறுகிறார் இளையபள்ளி.

**சொற்பொருள் விளக்கம்**

1. மதிக்குடை – குடையாகிய நிலவு
2. ஆந்தரமில்லை – பொருத்தமானவையில்லை

**முக்கூடல்வளம்**

**“கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்**
**கொடிகள் வானம் படிதர மூடும்**
**கண்ட பேரண்டம் தண்டலை நாடும்**
**கனக முன்றில் அனம்விளை யாடும்**
**விண்டபூமது வண்டலிட் டோடும்**
**வெயில்வெய் யான்பொன் னெயில்வழி தேடும்**
**அண்டர் நாயகர் செண்டலங் காரர்**
**அழகர் முக் கூடல் ஊரெங்கள் ஊரே!”**

‘முக்கூடல் அழகர் கோயில் கொண்டிருக்கும் திருக்கோயிலின் கோபுரம் மிகவும் உயரமானது. மேகக்கூட்டங்கள் அந்தக் கோபுரங்களின் பக்கத்தில் வந்து சேரும். கோவில் கொடிமரத்தில் கட்டப்பெற்றுள்ள கொடிகள், மேகக் கூட்டங்கள் கீழேவந்து படியும்படி, அவ்வானத்தை மறைத்து மூடிக் கொண்டிருக்கும். கண்ட பேரண்டப் பட்சிகள் குளிர்ச்சியுடைய அந்த உச்சியை அடைய விரும்பி மேலே செல்லும். பொன்வண்ணத்தில் தோற்றமளிக்கும் கோவிலின் முற்றத்தில் அன்னப்பறவைகள் விளையாடிக் கொண்டிருக்கும். மலர்களிலிருந்து வீழ்ந்த மகரந்தம் என்ற வெள்ளத்தில் தேன் இழைந்து ஓடிக் கொண்டிருக்கும். வெப்பமுடைய கதிர்களைக் கொண்டுள்ள கதிரவன் கோயிலின் மதிற்சுவர்களில் தான் புகுந்து செல்வதற்குரிய வழியினைத் தேடிக்கொண்டிருக்கும்.

தேவர்களுக்கெல்லாம் தலைவரும் செண்டு என்ற படைக்கலக்கருவியைக் கையில் கொண்டுள்ள அழகர் வீற்றிருப்பது முக்கூடல் என்ற எங்களின் ஊராகும்’ என்கிறாள் மூத்தபள்ளி.

**சொற்பொருள் விளக்கம்**

1. கொண்டல் - மேகக்கூட்டம்
2. படிதர – கீழே வந்து படியும்படி
3. கண்டபேரண்டம் - பறவைகள்
4. தண்டலை – உச்சியை
5. அனம் - அன்னப்பறவை
6. மது – தேன்
7. எயில் - மதிற்சுவர்
8. அண்டர் – தேவர்
9. செண்டு – படைக்கலக்கருவி

**மருதூர் வளம்**

**“சங்கம் மேடைகள் எங்கும் உலாவும்**
**தரங்க மீன்பொன் னரங்கிடை தாவும்**
**திங்கள் சோலை மரங்களை ராவும்**
**தெருக்கள் தோறும் மருக்களைத் தூவும்**
**பொங்கர் ஊடிளம் பைங்கிளி மேவும்**
**பூவை மாடப் புறாவினங் கூவும்**
**வங்க வாரிதி வெங்கடு உண்ட**
**மருதீசர் மருதூர் எங்கள் ஊரே!”**

‘மேடைகள் முதலான அனைத்து இடங்களிலும் சங்குகள் உலாவிக் கொண்டிருக்கும். அழகிய பொன்மயமான அரங்கங்களில் மீன்கள் தாவிப் பாயும். சோலையில் வானாளவு உயர்ந்துள்ள மரங்களை நிலவானது தழுவிக்கொண்டு செல்லும். அந்தச் சோலைகள் தெருக்கள்தோறும் பூந்தாதுக்களைத் தூவிவிடும். சோலைகளில் பசுங்கிளிகள் தன்னுடைய துணையுடன் அமர்ந்திருக்கும். அதனைக்கண்டு நாகணவாய்ப் பறவையும் மாடப்புறாக்களும் பிரிந்துசென்ற தங்களுடைய துணையினை அழைப்பதற்காகக் கொடிய நஞ்சினை உண்டு உலகினைக் காத்த மருதீசர் வீற்றிருக்கும் திருமருதூர் எங்களின் ஊராகும்’ என்கிறாள் இளையபள்ளி.

**சொற்பொருள் விளக்கம்**

1. திங்கள் - நிலவு
2. ராவும் - உராய்ந்து செல்லும்
3. மருக்கள் - பூந்தாதுகள்
4. வெங்கடு – விடம்
5. மருதீசர் – சிவபெருமான்

**ஆசூர்நாட்டு வளம்**

**“கறைபட் டுள்ளது வெண்கலைத் திங்கள்**
**கடம்பட் டுள்ளது கம்பத்து வேழம்**
**சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு**
**திரிபட் டுள்ளது நெய்படும் தீபம்**
**குறைபட் டுள்ளது கம்மியர் அம்மி**
**குழைபட் டுள்ளது வல்லியங் கொம்பு**
**மறைபட் டுள்ளது அரும்பெருட் செய்யுள்**
**வளமை ஆசுர் வடகரை நாடே!”**

‘வெண்மையான ஒளியினைப் பெற்றுள்ள நிலவில் மட்டுமே கறையாகிய கருமையைப் பெற்றுள்ளது. அதுதவிர மக்களின் உள்ளத்தில் மதியில் கறையாகிய குற்றம் இல்லை. கம்பத்தில் கட்டப்பட்டுள்ள யானைகளுக்கு மட்டுமே கடமாகிய மதநீர்

உள்ளது. அதுதவிர அவ்வூரில் வாழும் மக்கள் கடன்பட்டு வாழ்தல் இல்லை. வானத்திலே பறந்து செல்லும் பறவைகளுக்கு மட்டுமே சிறகு என்ற சிறையுள்ளது. அதுதவிர அங்கு வாழும் மக்கள் குற்றங்கள் செய்து சிறையில் இருப்பது இல்லை. நெய் பொருந்திய தீபம் மட்டுமே திரியினைக் கொண்டிருக்கும். அங்குவாழும் மக்களின் அறிவில் திரிபு என்பது இல்லை. தச்சரால் அடிக்கப்படும் அம்மி மட்டுமே குறைபட்டுள்ளது. அங்கு வாழும் மக்களின் தொழிலில், வாழ்க்கையில் குறை என்பது இல்லை. கொடிகளும் அவை தழுவிப் படரும் கொம்புகளும் மட்டுமே குழைகளை (இலைகள்) உடையதாய் இருக்கின்றன. அவையன்றிக் கொடி போன்ற மகளிரிடமும் கொம்பு போன்ற ஆடவரிடமும் குறைந்து, கும்பிட்டு வாழும் தன்மையென்பது கிடையாது. செய்யுளாகிய பாடலில் அவற்றின் பொருள் மட்டுமே மறைக்கப்பட்டிருக்கும். அதுதவிர வயலிடத்து விளையும் அரிய பொருட்களைப் பிறருக்குக் கொடுக்காமல் மறைத்து வைக்கும் தன்மை என்பது இல்லை. இத்தகைய சிறந்த வளமுடைய நாடு ஆசூர் வடகரை நாடு' என்று தன்னுடைய நாட்டினைப் போற்றிப் பாடுகின்றாள் மூத்தபள்ளி.

**சொற்பொருள் விளக்கம்**

1. கறைபட்டுள்ளது – கறையுடன் இருப்பது
2. வெண்கலை – வெண்மையான ஒளி
3. கடம்பட்டுள்ளது – கட்டப்பட்டுள்ளது
4. வேழம் - யானை
5. சிறைபட்டுள்ளது – சிறையில் இருப்பது
6. புள் - பறவை

7. திரிபட்டுள்ளது – திரிந்து போயிருப்பது
8. கம்மியர் – தச்சர்
9. மறைபட்டுள்ளது – மறைவாக இருப்பது

**தென்கரை நாட்டு வளம்**

**"காயக் கண்டது சூரிய காந்தி**
**கலங்கக் கண்டது வெண்தயிர்க் கண்டம்**
**மாயக் கண்டது நாழிகை வாரம்**
**மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்**
**சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்**
**தனிப்பக் கண்டது தாபதர் உள்ளம்**
**தேயக் கண்டது உரைத்திடும் சந்தனம்**
**சீவல மங்கைத் தென்கரை நாடே!"**

'சீவலமங்கைத் தென்கரை நாட்டில் சூரியனின் வெப்பமாகிய வெயில் மட்டுமே காயும். அதுதவிர ஞாயிறு போன்ற நடுநிலையாளர் காய்ந்து சீற்றம் கொள்வது கிடையாது.

வெண்மையான நிறத்தினையுடைய தயிர்த்துண்டுகளே கலங்கிக் காணப்படும். மக்களில் மனம் கலங்குபவர் எவரும் அங்கில்லை. நாழிகை, வாரம் என்ற காலம் மட்டுமே அங்கு மாய்ந்து போகக் காணலாம். அதுதவிர மக்கள் பசியால் மாய்தலை அங்குப் பார்க்க முடியாது. அங்கு நீர்ச்சுழி வெள்ளம் மட்டுமே சுழன்று சுழன்று மறுகிக் கொண்டு ஓடும். அதுதவிர படைச்சுழி வெள்ளம் போரில் சுழித்து மறுகுதலைக் காணமுடியாது. அங்கு செந்நெல் குலைகள் காய்ந்து சாய்ந்து கிடப்பதைக் காணலாம். அதுதவிர மக்கள் தலைசாய்ந்து நடக்கும் நிலையினைக் காணமுடியாது. அங்கு தவம் செய்வோர் மட்டுமே பற்று எதுவுமின்றித் தனிமையில் இருக்கக் காணலாம். அதுதவிர அன்புடைய இல்லறத்தார் பிரிந்து தனிமையில் வாடுவது இல்லை. கல்லில் உரைத்திடுகின்ற சந்தனம் மட்டுமே தேயும். ஒருநாளும் செய்யுள் உரைத்திடும் பொருளில் தேய்வு என்பது இல்லை. இப்படிப்பட்ட வளம் பொருந்தியது எங்களின் சீவலமங்கைத் தென்கரை நாடு' என்கிறாள் இளையபள்ளி.

**சொற்பொருள் விளக்கம்**

1. காயக்கண்டது – காய்ந்து இருப்பது
2. சூரிய காந்தி - சூரியனின் வெப்பம்
3. கலங்கக் கண்டது – கலங்கியிருப்பது
4. மாயக்கண்டது – மாய்ந்து போவது
5. மறுகக்கண்டது – சுழித்து ஓடுவது
6. தனிப்ப – தனிமையில் இருப்பது
7. தாபதர் – தவம் செய்வோர்

**முக்கூடல் நகர்**

**"சோதி மாமணி வீதி நெருக்கும்**
**சுரும்பு பாடி இரும்பும் உருக்கும்**
**சாதி நால்வளம் நீதி பெருக்கும்**
**தடத்து வாளை குடத்தை நெருக்கும்**
**போதில் மேய்ந்திள மேதி செருக்கும்**
**புனமெல லாந்தண் மலர்விண் டிருக்கும்**
**ஆதிநாதர் அனாதி யொருத்தர்**
**அழகர் முக்கூடல் ஊரெங்கள் ஊரே!"**

'ஒளிபொருந்திய முத்து, மாணிக்கம் போன்றவற்றை விற்கும் மணிக்கடை வீதியில் கொள்வோரும் கொடுப்போரும் இருப்பதால் நெருக்கம் அதிகமாய் இருக்கும். மலர்ச் சோலைகளில் இருக்கும் வண்டினங்கள் இன்னிசை பாடி இரும்பினையும் உருகச் செய்யம். குறிஞ்சி, அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைச் சாதியினராக மாந்தர்களும் அந்த பேதங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு, ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்ற அறத்தினைப் பெருக்கிக் கொண்டிருப்பார்கள். நீர்நிலையில் உள்ள வாளைமீன்கள், அங்குத் தண்ணீர் எடுக்கும் குடத்தில் நிறைந்து நெருக்கடியினைத் தரும். இளைய

எருமைகள் அந்நீர்நிலையிலுள்ள தேனோடு உள்ள நீர்ப்பூக்களை மேய்ந்து செருக்கித் திரியும். இவ்வாறாக நீர்நிலத்தில் மட்டும் இல்லாமல் மேட்டு நிலங்களிலும் குளிர்ந்த மலர்கள் இதழ்விரிக்கும். இத்தகைய வளமுடையது ஆதிநாதரும் அனாதி ஒருத்தருமாகிய அழகர் வாழ்கின்ற முக்கூடல் நகர்' என்று உரைக்கின்றாள் மூத்தபள்ளி.

**சொற்பொருள் விளக்கம்**

1. மணி வீதி – மணிக்கடை வீதி
2. சுரும்பு – வண்டினங்கள்
3. நீதி – அறம்
4. தடம் - நீர்நிலை
5. வாளை – வாளைமீன்கள்
6. மேதி – எருமை
7. புனம் - மேட்டுநிலம்

**மருதீசர் நகர்**

**"தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்**
**சாலைவாய்க் கன்னல் ஆலை யுடைக்கும்**
**கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்**
**கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்**
**நித்தம் சா்றயர் சித்ரம் படைக்கும்**
**நிதியெல் லாந்தன் பதியிற் கிடைக்கும்**
**மத்தம் சூடும் மதோனமத்த ரான**
**மருதீசர் மரூதூர் எங்கள் ஊரே!"**

'கரை, வரம் என்பவற்றைக் கொண்டு வாய்க்கால்களில் இடையிடையே உள்ள அடைப்புகளில் தத்திச் செல்லும் நீரானது முத்துக்களால் இடைமறித்து அடைக்கப்படும். பாகு காய்ச்சும் சாலையில் கொண்டு வந்து போடப்பட்ட கருப்பங்கழிகளைக் கரும்பாலைகள் உடைத்து நெருக்கிச் சாறு பிழியும். பேரிகை என்றும் முரசு மிகுதியான ஒலிவரும் வண்ணம் முழக்கப்படும். அங்குள்ள பல்வேறு வகை முழக்கங்களும் கடலின் ஒளியைவிட அதிகமாக இருக்கும். நாள்தோறும் நடத்துகின்ற சிற்பங்களைக் கொண்டிருக்கும். அனைத்து வகையான செல்வங்களும் அவ்வூரிலேயே கிடைக்கும். இத்தகைய சிறப்புடையது அவ்வூரிலேயே கிடைக்கும். இத்தகைய சிறப்புடையது இவ்வூர். எளிய ஊமத்தம்பூவை அணிந்து கொண்டு உயிர்கள்மீது அன்பு கொண்டவராகிய மருதீசர் வாழும் நகராகிய திருமருதூரே எங்கள் ஊர்' என்கிறாள் இளையபள்ளி.

**சொற்பொருள் விளக்கம்**

1. தத்தும் - தாவிச்செல்லும்
2. முத்தம் - முத்து
3. சாலை – பாகு காய்ச்சும் இடம்
4. கன்னல் - கரும்பு
5. பேரிகை - முரசு

6. வேலை – கடல்
7. பதி - ஊர்
8. மத்தம் - ஊமத்தம்

**ஆசூர் வடகரை நாடு**

**“மீது யர்ந்திடும் தெங்கிள நீரை**
**மிடைந்த பூகஞ் சுமந்துதன் காயைச்**
**குத மொன்றிச் சுமக்கக் கொடுக்கும்**
**சூதந் தன்கனி தூங்கும் பலாவில்**
**ஓதும் அந்தப் பலாக்கனி வாழை**
**உளுக்க வேசுமந்து ஒண்குலை சாய்க்கும்**
**மாது ளங்கொம்பு வாழையைத் தாங்கும்**
**வளமை ஆசூர் வடகரை நாடே!”**

மிக உயரமாக வளர்ந்த தென்னை மரங்களிலுள்ள இளநீர்க் காய்களை, அதற்கு அருகில் உள்ள பாக்கு மரங்கள் தாங்கிக் கொண்டிருக்கும். பாக்கு மரம் தன்னுடைய காய்களை மாமரக்கிளைகளில் சுமக்கும்படி கொடுத்துக் கொண்டிருக்கும். அந்த மாமரத்தில் உள்ள மாங்கனிகள் பலாமரத்தின் கொம்புகளில் தங்கித் தொங்கும். பலாமரத்தின் கனிகளோ அடுத்து இருக்கும் வாழை மரத்தின்மீது சாய்ந்திருக்கும். அதனால் வாழை வளைந்து ஒளியுள்ள தன்னுடைய குலையினைச் சாய்த்துக் கொண்டிருக்கும். அதன் அருகே இருக்கும் மாதுளை மரத்தின் கொம்புகள் சாய்ந்த வாழைக்குலையினைத் தாங்கிக் கொண்டிருக்கும். இத்தகைய மரங்கள் பலவற்றையும் கொண்டு சிறந்த வளமுடையதாகத் திகழ்வதே எங்கள் நாடாகிய ஆசூர் வடகரை நாடு’ என்கிறாள் மூத்தபள்ளி.

**சொற்பொருள் விளக்கம்**

1. தெங்கு – தென்னை
2. பூகம் - பாக்கு
3. குதம் - மாமரக்கிளை

**சீவலமங்கைத் தென்கரை நாடு**

**“பங்க யந்தலை நீட்டிக் குரம்பினில்**
**பச்சை இஞ்சியின் பார்சடை தீண்டும்**
**தங்கும் இஞ்சியும் மஞ்சட் கழுத்தைத்**
**தடவி மெள்ளத் தொடுமந்த மஞ்சள்**
**அங்க சைந்திடும் காய்க்கதிர் செந்நெல்**
**அளாவி நிற்குமச் செந்நெலு மப்பால்**
**செங்க ரும்புக்குக் கைதரும் போல்வளர்**
**சீவல மங்கைத் தென்கரை நாடே!”**

‘நீர்நிலையில் மலர்ந்திருக்கும் தாமரை மலர் தன் தலையினை நீட்டி, பக்கத்து வரம்பிலே வளர்ந்திருக்கும் இஞ்சியின் பச்சை இலையான பெரிய சடையினைத் தீண்டிக்

கொண்டு இருக்கும். அந்த இஞ்சி அருகில் வளர்ந்திருக்கும் மஞ்சளின் கழுத்தைத் தன் இலை என்ற கைகளால் மெதுவாகத் தொடும். அந்த மஞ்சள் தன் பக்கத்திலே அசைந்தாடி நின்று கொண்டிருக்கும் காய்ந்த நெற்குலைகளையுடைய செந்நெற்கதிர்களுடன் அளவளாவி இருக்கும். அந்தச் செந்நெற்கதிர்களோ அதனையடுத்து வளர்ந்திருக்கும் செங்கரும்புகளுக்குக் கைகொடுத்து நிற்கும். இத்தகைய வளமுடைய சீவலமங்கைத் தென்கரைநாடே எங்களுடைய நாடு' என்கிறாள் இளையபள்ளி.

இவ்வாறாக மூத்தபள்ளியும் இளையபள்ளியும் வடகரை நாட்டின் வளத்தையும் தென்கரை நாட்டின் வளத்தையும் தன்னுடைய பாடல்களால் எடுத்துக்கூறுகின்றனர்.

**சொற்பொருள் விளக்கம்**

1. பங்கயம் - தாமரை
2. குரம்பினில் - வரப்பில்
3. பார்சடை – பெரிய சடை (இலை)
4.

**தொகுப்புரை**

அலகு மூன்றில் 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்றான தமிழ்விடு தூதில் முதல் இருபது கண்ணிகளின் செம்மைத்தமிழ், ஐந்து குலங்கள் மற்றம் தமிழாகப் பிறந்தாய் என்பது பற்றியும் தமிழ்மொழியின் சிறப்புகளை எடுத்துக்கூறி மதுரைச் சொக்கநாதரிடம் தூதாக அனுப்புகிறாா். அடுத்ததாக திருக்குற்றலாக் குறவஞ்சியில் திரிகூட இராசப்பக் கவிராயர் குற்றாலத் திரிகூட மலை, எங்கள் மலை, நிலை தங்கும் திரிகூட மலை, உயர்ந்த மலை, செல்வ மலை, குறவர் குல மரபு ஆகியவற்றை குறத்தி மலைவளம் கூறுவதாகக் குறிப்பிடுகிறார். மேலும் முக்கூடற்பள்ளின் நாட்டு வளங்களான வடகரை, தென்கரை, முக்கூடல் வளத்தைப் பற்றியும் மருதூர், ஆசூர், மருதீசர், சீவல மங்கை ஆகிய நாடுகளில் வளங்களைப் பற்றி தம்முடைய பாடல்களால் எடுத்துக்கூறுகிறார்.

## பயிற்சி வினாக்கள்

### பகுதி – அ

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1.தமிழ்விடு தூது நூலின் ஆசிரியர் யார்?

அ.திரிசூடராசப்பக் கவிராயர் ஆ.இராமலிங்கஅடிகள் இ.கிருட்டிணப்பிள்ளை**ஈ.தெரியவில்லை**

2.தூது இலக்கியம் என்ன பா வகையால் பாடப்பெறும்?

அ.குறள்வெண்பா **ஆ.கலிவெண்பா** இ.நேரிசைவெண்பா ஈ.இன்னிசைவெண்பா

3.தமிழ்விடுதூது நூலின் பாட்டுடைத் தலைவன் யார்?

அ.மதுரை கள்ளழகர் ஆ.மதுரை மீனாட்சி **இ.மதுரை சொக்கநாதர்** ஈ.மதுரை பிரம்மா

4.மதுரை சொக்கநாதப் பெருமானிடம் ஆசிரியர் எதனைத் தூதாக அனுப்புகிறார்?

அ.புலி ஆ.விடை **இ.தமிழ்** ஈ.அன்னம்

5. ‘‘சீர்கொண்ட கூடல் சிவராச தானிபுரத்து

ஏர்கொண்ட சங்கத்து இருந்தோரும்’’ என்னும் பாடல் வரிகள் இடம் பெறும் நூல் எது?

**அ.தமிழ்விடு தூது** ஆ.குற்றாலக்குறவஞ்சி இ.முக்கூடற்பள்ளு ஈ.எதுவும் இல்லை

6.தமிழ்விடு தூது நூலில் கூறப்பெறும் தமிழரசி யார்?

**அ.சரஸ்வதி** ஆ.திருமகள் இ.பார்வதி ஈ.துர்க்கை

7.சிவஞானபோதத்தில் ஓர் ஏட்டினைத் தன் கையில் எடுத்தவர் யார்?

அ.சிவன் **ஆ.விநாயகர்** இ.முருகன் ஈ.பிரம்மன்

8. ‘‘கல்லாதார் சிங்கமெனக் கல்விகேள்விக்கு உரியர் எல்லாரும் நீயாய்’’ – யார்?

அ.சிவன் **ஆ.தமிழ்** இ.முருகன் ஈ.சமஸ்கிருதம்

9.திருக்குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் யார்?

**அ.திரிகூடராசப்பக் கவிராயர்** ஆ.இராமலிங்கர் இ.கிருட்டிணப்பிள்ளை ஈ.தெரியவில்லை

10.குறவஞ்சி இலக்கியத்தில் யாருடைய செயல்பாடு அதிகம் பேசப்படுகிறது?

அ.தலைவன் ஆ.தலைவி இ.தோழி **ஈ.குறத்தி**

11.குற்றாலக்குறவஞ்சி எக்கடவுளரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது?

**அ.சிவன்** ஆ.விநாயகர் இ.முருகன் ஈ.அழகர்

12.குற்றாலநாதர் எம்மரத்தின் அடியில் வீற்றிருப்பதாக திரிகூடராசப்பக்கவிராயர் பாடுகின்றார்?

அ.ஆலமரம் ஆ.அரசமரம் **இ.குறும்பலாமரம்** ஈ.வில்வமரம்

13. ‘‘ஆடுமர வீனுமணி கோடிவெயில் எறிக்கும்

அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்’’ என்னும் பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

அ.தமிழ்விடு தூது **ஆ.குற்றாலக்குறவஞ்சி** இ.முக்கூடற்பள்ளு ஈ.எதுவும் இல்லை

14.குறத்தி தன்னுடைய தோழியின் மலையாக எம்மலையைக் கூறுகிறாள்?

அ.கொல்லிமலை ஆ.விந்தியமலை இ.சுவாமிமலை **ஈ.வேள்விமலை**

15.முக்கூடற்பள்ளு நூலின் ஆசிரியர் யார்?

அ.திரிகூடராசப்பர் ஆ.இராமலிங்கஅடிகள் இ.கிருட்டிணப்பிள்ளை **ஈ.தெரியவில்லை**

16.முக்கூடற்பள்ளு யாருடைய வாழ்க்கையினை எடுத்துரைக்கும் நூல்?

அ.மழவர்கள் **ஆ.உழவர்கள்** இ.வீரர்கள் ஈ.மன்னர்கள்

17.முக்கூடல்நகர் எப்பெயரில் அழைக்கப்படுகிறது?

அ.சிவகங்கை ஆ.மருதூர் **இ.சீவலப்பேரி** ஈ.திருநெல்வேலி

18.முக்கூடற்பள்ளு இலக்கியம் எக்கடவுளர்மீது பாடப்பட்டுள்ளது?

அ.சிவன் ஆ.விநாயகர் இ.முருகன் **ஈ.அழகர்**

19.மூத்தபள்ளியின் நாடு எது?

**அ.ஆசூர்வடகரை நாடு** ஆ.மருதூர்தென்கரை நாடு இ.பாண்டியநாடு ஈ.பல்லவநாடு

20.இளையபள்ளியின் நாடு எது?

அ.ஆசூர்வடகரை நாடு **ஆ.மருதூர்தென்கரை நாடு** இ.பாண்டியநாடு ஈ.பல்லவநாடு

21. ‘‘சங்கம் மேடைகள் எங்கும் உலாவும்

தரங்க மீன்பொன் னரங்கிடை தாவும்''என்னும் பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ.தமிழ்விடு தூது ஆ.குற்றாலக் குறவஞ்சி **இ.முக்கூடற்பள்ளு** ஈ.எதுவும் இல்லை

**பகுதி-ஆ**

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்**

1.தெய்வமணம் கமழும் மொழி தமிழ் என்பதனை தமிழ்விடு தூது பாடல் மூலம் விளக்குக.
2.குற்றாலமலையின் சிறப்புகளை குற்றாலக்குறவஞ்சி பாடல்கள் மூலம் விளக்குக.
3.குறவர்குல மரபு குறித்து குறத்தி கூறும் கருத்தினைத் தொகுத்துரைக்க.
4.திரிகூடராசப்பக்கவிராயர் குறிப்பு வரைக.
5.குற்றாலக்குறவஞ்சி குறிப்பு வரைக.
6.முக்கூடற்பள்ளு குறிப்பு வரைக.
7.தமிழ்விடு தூது குறிப்பு வரைக.
8.மூத்தபள்ளி எடுத்துரைக்கும் வடகரை ஆசூர் நாட்டின் வளத்தை எடுத்துரைக்க.
9.இளையபள்ளி எடுத்துரைக்கும் தென்கரை மருதூர் நாட்டின் வளத்தை எடுத்துரைக்க.

**பகுதி - இ**

**எட்டு மதிப்பெண் வினாக்கள்**

1.தமிழ்விடு தூது மூலம் அறியலாகும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
2.தமிழ்விடு தூது உரைக்கும் தமிழ்மொழியின் சிறப்புக்களை வரைக.
3.குற்றாலக்குறவஞ்சி எடுத்துரைக்கும் குற்றாலநாதரின் சிறப்புக்களை எடுத்துரைக்க.
4.முக்கூடற்பள்ளு வாயிலாக அறியலாகும் வடகரை, தென்கரை நாட்டின் வளம் குறித்து எடுத்துரைக்க.

## அலகு 4 இலக்கிய வரலாறு

## அ. பன்னிருதிருமுறைகள்

**பன்னிருதிருமுறைகள்**

தமிழகத்தில் சங்க காலத்திற்குப் பிறகு களப்பிரர்களின் ஆட்சி ஏற்பட்டது. களப்பிரர்களின் ஆட்சிக் காலத்தில் சமண, பௌத்த சமயங்களே தழைத்து வளர்ந்தன. தமிழகத்தின் ஆதி சமயங்களான சைவமும் வைணவமும் தன்னுடைய செல்வாக்கினை இழந்தன.

பின் பல்லவர் ஆட்சிக்காலத்தில் பக்தி எழுச்சியின் காரணமாகத் தமிழகத்தில் சைவ, வைணவ சமயங்கள் புத்துயிர்ப்பெற்றன. கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை தமிழகம் பக்தி வெள்ளத்தில் மூழ்கியது. சைவ சமயத்தை **நாயன்மார்களும்** வைணவ சமயத்தை ஆழ்வார்களும் தங்களின் இசைப்பாடல்கள் மூலம் போற்றி வளர்த்தனர். தமிழ்மொழியும் வளர்ந்தது.

**நாயன்மார்கள்**

**சைவ சமயத்தைத் தங்களுடைய இசைப்பாடல்கள் மூலம் போற்றி வளர்த்தவர்கள் நாயன்மார்கள்** என்றழைக்கப்பட்டனர். இவர்கள் மொத்தம் **63 பேர்** ஆவர்.

சைவ சமயம் சார்ந்த நூல்களாக அறியப்பெறுபவை **பன்னிருதிருமுறைகளாகும்**. இதனை அருளிச் செய்தவர்கள் திருஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் பெருமான் வரையிலுள்ள 27 பேர் ஆவர். பன்னிருதிருமுறையில் முதல் பதினோரு திருமுறைகள் **இராஜராஜசோழன்** காலத்தில் **நம்பியாண்டார்நம்பிகள்** என்பவரால் தொகுக்குப்பட்டதாகும். பன்னிரெண்டாம் திருமுறையாக அறியப்பெறும் சேக்கிழாரின் பெரியபுராணம் பிற்காலத்தில் சேர்க்கப்பெற்றதாகும்.

**சைவசமயக் குரவர்கள்**

**திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவசமயக் குரவர்களாகப்** போற்றப்பெறுகின்றனர். இவர்களுள் முதல் மூவர் பாடிய நூல்கள் **தேவாரம்** ஆகும். மாணிக்கவாசகர் பாடியது **திருவாசகம்**. சைவசமயக்குரவர் நால்வரின் நூல்கள் **சைவ நான்மறையாகப்** போற்றப்பெறுகின்றன.

**பன்னிருதிருமுறைகளாவன**

- 1,2,3 திருமுறைகள் - திருஞானசம்பந்தர் தேவாரம்
- 4,5,6 திருமுறைகள் - திருநாவுக்கரசர் தேவாரம்
- 7 ஆம் திருமுறை – சுந்தரர் தேவாரம்
- 8 ஆம் திருமுறை – மாணிக்கவாசகரின் திருவாசகம், திருக்கோவையார்
- 9 ஆம் திருமுறை – திருமாளிகைத்தேவர் முதலான 9 பேர் பாடிய திருவிசைப்பா மற்றும் திருப்பல்லாண்டு

- 10 ஆம் திருமுறை – திருமூலரின் திருமந்திரம்
- 11 ஆம் திருமுறை – காரைக்காலம்மையார் முதலான பன்னிருவர் பாடிய நூல்கள்
- 12 ஆம் திருமறை – சேக்கிழாரின் பெரியபுராணம்

**முதல் மூன்று திருமுறைகள் - திருஞானசம்பந்தர் தேவாரம்**

திருஞானசம்பந்தர் **சீர்காழியில்** அந்தணர் குலத்தில் **சிவபாத இருதயர், பகவதி அம்மையார்** ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். **ஆளுடையபிள்ளை** எனவும் **காழிவள்ளல்** எனவும் அழைக்கப்பெற்றார். பாண்டிய அரசி மங்கையர்க்கரசியார், அமைச்சர் குலச்சிறையார் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்கி கூன்பாண்டியனைச் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றினார். சமணர்களுடன் அனல்வாதம், புனல்வாதம் செய்து வெற்றி கண்டார். சிறுத்தொண்டர் என்றழைக்கப்பெறும் பரஞ்சோதியின் நண்பராக இருந்தார்.

பெரியபுராணம் ''**வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கத் தோன்றினார் இவர்**'' என்று திருஞானசம்பந்தர் குறித்துக் கூறுகின்றது. இவரின் செயலே பெரியபுராணத்தில் அதிகம் கூறப்பெறுவதால் ''**பிள்ளை பாதி புராணம் பாதி**'' என்று அந்நூல் போற்றப்பெறுகின்றது.

''நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்'' என்று தன்னைத்தானே அழைத்துக்கொண்டவர். தன்னுடைய 16ஆம் வயதில் மணக்கோலத்தில் இறைவனுடன் இரண்டறக் கலந்ததாகக் கூறுவர். இவர் **சத்புத்ர மார்க்கத்தால்** இறைவனை வழிபட்டவர். திருஞானசம்பந்தரின் பாடல்களுக்கு திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ் இசைத்தார். சந்தப்பாடல்களை அதிகம் பாடியமையால் இவரை **'சந்தத்தின் தந்தை'** எனவும் **'திராவிடசிசு'** எனவும் அழைப்பர்.

இவர் பாடிய பதிகங்கள் 16,000. கிடைப்பவை 384 பதிகங்கள். கிடைக்கும் மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 4,121.

**4,5,6ஆம் திருமுறைகள் - திருநாவுக்கரசர் தேவாரம்**

திருநாவுக்கரசர் **திருமுனைப்பாடி நாட்டுத் திருவாமூரில்** வேளாளர் குலத்தில் **புகழனார், மாதினியார்** ஆகியோருக்குப் புதல்வனாகவும் **திலகவதியாருக்குச்** சகோதரனாகவும் பிறந்தார். இவரின் இயற்பெயர் **மருள்நீக்கியார்**. சிறிய வயதிலேயே பெற்றோரை இழந்து, சகோதரி திலகவதியாரால் வளர்க்கப்பெற்ற இவர், சமண சமயத்தைச் சேர்ந்து **தருமசேனர்** என்னும் பட்டத்தினைப் பெற்றார்.

தமக்கை திலகவதியாரின் வேண்டுகோளுக்கிணங்கி இறையருளால் நாவுக்கரசருக்குச் சூலை நோய் உண்டானது. அந்நோயினைச் சமணர்களால் தீர்க்க

இயலாதபோது, தன்னுடைய தமக்கையார் கொடுத்த திருநீற்றாலும் ஐந்தெழுத்து போதனையாலும் நோய் நீங்கப்பெற்றார். மீண்டும் சைவ சமயத்தில் சேர்ந்தார்.

சமணர்களின் தூண்டுதலின்பேரில் அரசன் இவருக்குப் பல்வேறு இன்னல்களைச் செய்தான். நீற்றறையில் இட்டும் நஞ்சுகொடுத்தும் யானையை ஏவியும் கல்லில் கட்டிக் கடலில் எறிந்தும் துன்புறுத்தினர்.

**“கல்லைக் கட்டிக் கடலிலே பாய்ச்சினும்**
**நற்றுணையாவது நமச்சிவாயமே”**

என்று சிவமந்திரத்தை உரைத்து, அனைத்து இன்னல்களிலிருந்தும் விடுபட்டார். மன்னனையும் சைவ சமயத்தைச் சேரச் செய்தார்.

திருநாவுக்கரசர் இறைவனால் **‘நாவுக்கரசர்’** என்னும் பெயரினைப் பெற்றார். **‘அப்பர்’** என்று இவரை திருஞானசம்பந்தர் அழைத்தார். தாண்டகப்பாடல்கள் அதிகம் பாடியமையால் ‘**தாண்டகவேந்தர்**’ என்று அழைக்கப்பெற்றார். மக்கள் இவரை **ஆளுடையஅரசு, வாகீசர்** என்றழைத்தனர்.

“**என் கடன் பணி செய்து கிடப்பதே**” என்றுகூறி உழவாரத்தொண்டு ஆற்றிய இவர் இறைவனை ‘**தாச மார்க்கத்தில்**’ வழிபட்டவராவார். திருநாவுக்கரசர் பாடியவை **திருநேரிசை, திருக்குறுந்தாண்டகம், திருத்தாண்டகம்** ஆகியனவாகும். பாடிய பதிகங்கள் 4,900. கிடைப்பவை 313. கிடைக்கும் மொத்தப் பாடல்கள் 3,066. 81 வருடங்கள் உயிர்வாழ்ந்த இவரின் பாடல்களில் பக்தி உருக்கம் அதிகம் காணப்பெறும்.

**7ஆம் திருமுறை – சுந்தரர் தேவாரம்**

சுந்தரர் **திருநாவலூரில்** அந்தணர் குலத்தில் **சடையனார், இசைஞானியார்** என்போருக்கு மகனாகப் பிறந்தார். இவரின் இயற்பெயர் **நம்பியாரூரர்.** இறைவனுக்குத் தோழராகக் கருதப்பெற்றமையால் **தம்பிரான் தோழர்** என்று அழைக்கப்பெற்றவர். **வன்தொண்டர், திருநாவலூரர், ஆளுடைய நம்பி** எனவும் அழைக்கப்பெற்றவர்.

கைலையில் சிவபெருமானின் அணுக்கத் தொண்டராக இருந்த ஆலால சுந்தரரே இவர் என்று கூறப்பெறுகிறார். பரவை நாச்சியாரையும் சங்கிலி நாச்சியாரையும் மணந்து கொண்டவர். இறுதியில் **சேரமான்பெருமாள் நாயனாரோடு சேர்ந்து வெள்ளையானை மீதேறி கைலை சென்றதாக** பெரியபுராணம் கூறுகின்றது. “பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா!” என்பது இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டபோது இவர் பாடிய முதல் பாடலாகும்.

**சுந்தரர் பாடிய திருத்தொண்டர்த்தொகை நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர்த் திருவந்தாதிக்கும் சேக்கிழாரின் பெரியபுராணத்திற்கும் அடிப்படையாக**

**அமைந்தது. இவர் இறைவனை 'சகமார்க்கத்தில்' வழிபட்டவராவார்.** இவர் பாடிய பதிகங்கள் 3,800. கிடைப்பவை 100 பதிகங்கள். கிடைக்கும் மொத்த பாடல்கள் 1,026.

**8ஆம் திருமுறை – மாணிக்கவாசகர்– திருவாசகம், திருக்கோவை**

மாணிக்கவாசகர் **பாண்டி நாட்டுத் திருவாதவூரில்** ஆதிசைவ அந்தணர் குலத்தில் **சம்புபாதசாரியார், சிவஞானவதியார்** ஆகியோர்க்கு மகனாகப் பிறந்தார். **அரிமர்த்தனப்பாண்டிய மன்னனிடம்** அமைச்சராகப் பணியாற்றினார். இவரின் கல்வி மேம்பாட்டை அறிந்த அரசன் **தென்னவன் பிரம்மராயன்** என்னும் பட்டத்தினை அளித்துச் சிறப்பித்தான். மாணிக்கவாசகரின் இயற்பெயர் யாதெனத் தெரியவில்லை. ஊரின் பெயரைக் கொண்டு **வாதவூரர்** என்று அழைப்பர்.

அரசனுக்காகக் குதிரை வாங்குவதன்பொருட்டு திருப்பெருந்துறை சென்ற மாணிக்கவாசகர் அங்கிருந்த குருந்த மரத்தின் அடியில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றார். இவருக்காக இறைவன் நரியைப் பரியாக்கியும் பிட்டுக்கு மண் சுமந்து அடியும் பெற்றுத் திருவிளையாடல்கள் செய்தார். 32 ஆண்டுகள் வாழ்ந்த மாணிக்கவாசகர் பொன்னம்பலத்தில் கூத்த பெருமானோடு இரண்டறக் கலந்ததாகக் கூறுவர். இவர் இறைவனை **'ஞானமார்க்கத்தில்'** வழிபட்டவராவார். இவர் பாடியது **திருவாசகம், திருக்கோவை**.

திருவாசகப் பாடல்களை மாணிக்கவாசகர் பாட தில்லை நடராசரே ஏட்டில் எழுதினார் என்றும் அப்பாடல்கள் மாணிக்கம் போன்று இருந்தமையால் இறைவன் இவருக்கு **'மாணிக்கவாசகர்'** என்று பெயரிட்டார் எனவும் கூறுவர். திருவாசகம் 'சிவபுராணம்' முதலாக 'அச்சோப்பதிகம்' ஈறாக 15 பதிகங்களைக் கொண்டு அமைந்துள்ளது. திருக்கோவை 400 அகப்பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. **திருவெம்பாவை** என்ற பாவை நூலையும் இவர் இயற்றியுள்ளார். இன்றளவும் மார்கழி மாதங்களில் சைவ சமயத் திருத்தலங்களில் திருவெம்பாவை பாடல்கள் பாடப்பெறுகின்றன.

**9ஆம் திருமுறை – திருவிசைப்பா, திருப்பல்லாண்டு**

திருமாளிகைத்தேவர் முதலான 9 பேர் பாடிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையாகத் தொகுக்கப்பெற்றுள்ளன.

- திருமாளிகைத்தேவர் – பாடிய பதிகம்: 4, பாடல்கள் - 45
- கருவூர்த்தேவர் - பாடிய பதிகம்: 10, பாடல்கள் - 105
- சேந்தனார் - பாடிய பதிகம்: 4, பாடல்கள் - 47
- பூந்துருத்தி காடவநம்பி - பாடிய பதிகம்: 2, பாடல்கள் - 12
- கண்டராதித்தர் - பாடிய பதிகம்: 1, பாடல்கள் - 10
- வேணாட்டடிகள் - பாடிய பதிகம்: 1

- திருவாலியமுதனார் - பாடிய பதிகம்: 10, பாடல்கள் - 42
- புருடோத்தமநம்பி - பாடிய பதிகம்: 2, பாடல்கள் - 22
- சேதிராயர் - பாடிய பதிகம்: 1

**10ஆம் திருமுறை – திருமூலர் – திருமந்திரம்**

**தமிழ்ச்சித்தர்களின் வரிசையில் தலைமை வாய்ந்தவராகப் போற்றப்பெறுபவர் திருமூலர்.** நந்திதேவரின் அருள்பெற்ற யோகியான இவர் இறந்து கிடந்த சாத்தனூர் மூலன் என்னும் இடையனின் உடலில் கூடுவிட்டுக்கூடுபாய்ந்து, 3000 ஆண்டுகள் யோகத்தில் இருந்து, ஆண்டுக்கொரு பாடலாக 3000 பாடல்கள் எழுதினார் என்று கூறுவர். அவற்றின் தொகுப்பே **திருமந்திரம்** என்று பெயர்பெற்றது. திருவாவடுதுறை கோவில் கொடிமரத்தின்கீழ் தமிழ்மணம் வீச, அங்கே தோண்டிப்பார்க்க **திருமந்திரநூல்** வெளிப்பட்டதாகக் கூறுவர்.

**தமிழர்களின் தலையாய சைவ சித்தாந்தக் கொள்கை நூலாக** இந்நூல் விளங்குகிறது. இதில் 3000 பாடல்களும் 232 அதிகாரங்களும் 9 தந்திரங்களும் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் வேறுபெயர் **திருமந்திரமாலை, தமிழ் மூவாயிரம்** என்பதாகும்.

**11ஆம் திருமுறை – பிரபந்தமாலை**

இதன் வேறுபெயர் பிரபந்தமாலை என்பதாகும். இதில் 40 நூல்களின் தொகுப்பும் 1430 பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

- காரைக்காலம்மையார் – பிறந்த ஊர்: காரைக்கால். இயற்பெயர் : **புனிதவதியார்**. 63 நாயன்மார்களுள் அமர்ந்த கோலத்தில் காணப்படுபவர். பாடிய நூல்கள் : திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி. இறைவனிடம் வேண்டி பேய் உருவம் பெற்றவர் இவர்.
- திருவாலவாயுடையார் – திருமுகப்பாசுரம்
- கல்லாடர் – திருக்கண்ணப்பர் திருமறம்
- நக்கீரர் – திருமுருகாற்றுப்படை, திருவெழுகூற்றிருக்கை முதலான நூல்கள்.
- கபிலர் – சிவபெருமான் திருவந்தாதி, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை
- பரணர் - சிவபெருமான் திருவந்தாதி
- அதிரா அடிகள் - மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை
- இளம்பெருமாளடிகள் - சிவபெருமான் திருமும்மணிக்கோவை
- ஐயடிகள் காடவர்கோன் - சேத்திரத்திருவெண்பா
- சேரமான் பெருமாள் நாயனார் – திருக்கைலாய ஞான உலா, பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை.
- பட்டினத்தடிகள் - இயற்பெயர் : **திருவெண்காடர்**. பாடிய நூல்கள் - கோயில்நான்மணிமாலை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, திருவொற்றியூர் ஒருபா ஒருப.்.து

- நம்பியாண்டார் நம்பிகள் - **திருமுறைகளைத் தொகுத்தவர். தமிழ் வியாசர்** என்று போற்றப்பெறுபவர். திருத்தொண்டர்த்திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை, திருநாவுக்கரச திருஏகாதசமாலை போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார்.
-

**12ஆம் திருமறை – சேக்கிழார்– பெரியபுராணம்**

பன்னிரெண்டாம் திருமுறையாகப் போற்றப் பெறுவது **சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம்** ஆகும். **63 நாயன்மார்கள்** குறித்தும் **9 தொகையடியார்கள்** குறித்தும் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்தும் விளக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் **திருத்தொண்டர் புராணம்** என்பதாகும்.

**சுந்தரர் இயற்றிய திருத்தொண்டர்த்தொகை, நம்பியாண்டர் நம்பிகளின் திருத்தொண்டர்த்திருவந்தாதி ஆகிய நூல்களை முதனூல்களாகக் கொண்டு இயற்றப்பட்டமையால் இந்நூலினை வழிநூல்** என்று கூறுவர். இதன் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டாகும்.

சேக்கிழார் தொண்டை நாட்டுப் புலியூர்க்குன்றத்துக் கோட்டூரில் பிறந்தவர். இவரின் இயற்பெயர் **அருள்மொழித்தேவர்** என்பதாகும். **இரண்டாம் குலோத்துங்கனின்** அமைச்சராகப் பணியாற்றியவர். பெரியபுராண நூல் அரங்கேற்றத்திற்குப் பிறகு சேக்கிழாருக்கு '**தொண்டர் சீர் பரவுவார்**' என்னும் பட்டம் வழங்கப்பெற்றது.

பெரியபுராணம் **13 சருக்கங்களையும் 2 காண்டங்களையும் 4287 பாடல்களையும்** கொண்டு அமைந்துள்ளது. சிவபெருமான் 'உலகெலாம்' என்று அடி எடுத்துக் கொடுக்க இந்நூல் இயற்றப்பெற்றதாகக் கூறுவர். ஓராண்டு காலம் நூல் அரங்கேற்றம் செய்யப்பெற்றதாகவும் கூறுவர்.

இந்தப் பன்னிரு திருமுறைகளும் சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் ஒருசேர போற்றி வளர்த்தன.

-------------------------------------

## ஆ. நாலாயிர திவ்யப் பிரபந்தம்

**பன்னிரு ஆழ்வார்கள்**

**திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவ சமயம்**. இதனைத் தங்களுடைய இசைப்பாடல்கள் மூலம் தழைக்கச் செய்தவர்கள் **ஆழ்வார்கள், ஆசாரியார்கள்** என்று அழைக்கப்பெற்றனர். திருமாலின் திருக்கல்யாண குணங்களில் ஆழ்ந்து கிடந்தமையால் இவர்கள் ஆழ்வார்கள் என்று பெயர் பெற்றனர்.

**வைணவ ஆழ்வார்கள் மொத்தம் பன்னிருவர்** ஆவர். இவர்கள் 108 வைணவ தலங்களுக்குச் சென்று திருமாலைப் பாடிப் பரவியுள்ளனர். இவர்கள் பாடிய **4000**

**பாடல்கள்** நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்று அழைக்கப்பெறுகின்றன. இதனை ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் எனவும் அழைப்பர். **நாதமுனிகள்** என்பவர் பன்னிரு ஆழ்வார்களின் பாடல்களைத் தொகுத்தவர் ஆவார். இவரை **பெரியமுதலி** எனவும் அழைப்பர்.

**1.பொய்கையாழ்வார்**

காஞ்சியில் ஐப்பசித் திங்களன்று பொய்கை ஒன்றில் அவதரித்ததாகக் கூறப்பெறுவதால் இவர் பொய்கையாழ்வார் என்று அழைக்கப்பெற்றார். இவர் திருமாலின் திருச்சங்கான பாஞ்சசன்னியத்தின் அவதாரமாகக் கருதப்பெறுகிறார்.

திருக்கோவிலூரில் ஒரு வீட்டின் இடைகழியில் மழைக்காக இவர் ஒதுங்கி இருக்க, பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் அங்கு வந்திட, நான்காவதாக அங்கே திருமால் வந்ததாகவும் மூன்று ஆழ்வார்களும் திருமாலைக்கண்டு பாடல்கள் பாடியதாகவும் கூறுவர். அப்பொழுது பொய்கையாழ்வார் பாடியது **முதல் திருவந்தாதி** ஆகும்.

***“வையம் தகளியா வார்கடலே நெய்யாக***
***வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய***
***சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை***
***இடர்ஆழி நீங்குகவே என்று”***

**2.பூதத்தாழ்வார்**

மாமல்லபுரத்தில் ஐப்பசித் திங்களில் தோன்றிய இவர் திருமாலின் கெதாயுதத்தின் அவதாரமாகக் கருதப்பெறுகிறார். ‘பூதம்’ என்ற சொல் இவரது பாடல்களில் அதிகம் பயின்று வந்தமையால் இவர் பூதத்தாழ்வார் என்று அழைக்கப்பெற்றதாகக் கூறுவர். இவர் பாடிய பாடல்கள் **இரண்டாம் திருவந்தாதி** என்று போற்றப்பெறுகின்றன.

***“அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக***
***இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி***
***ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு***
***ஞானத் தமிழ் புரிந்த நான்”***

**3.பேயாழ்வார்**

மயிலாப்பூரில் ஐப்பசித் திங்களில் கேணி ஒன்றில் அவதரித்ததாகக் கூறப்பெறும் இவர் ‘நந்தகம்’ என்ற திருமாலின் வாளின் அம்சமாகக் கருதப்பெறுகிறார். பக்திப் பரவசத்தால் நெஞ்சஞ்சோர்ந்து கண் சுழன்று, அழுதுசிரித்து, ஆடிப்பாடி, பேய் பிடித்தாற்போல் இறைவனைத் தொழுது மகிழ்ந்ததால் பேயாழ்வார் என்று அழைக்கப்பெற்றார். இவர் பாடிய பாடல்கள் **மூன்றாம் திருவந்தாதி** என்று அழைக்கப்பெறுகின்றன.

**"திருக் கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்**

**அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருகிளரும்**

**பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைகண்டேன்**

**என்னாழி வண்ணன்பால் இன்று"**

**பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்** ஆகிய மூவரும் **முதலாழ்வார்கள்** என்று அழைக்கப்பெறுகின்றனர்.

**4.திருமழிசையாழ்வார்**

தொண்டை நாட்டுத் திருமழிசையில் தைத்திங்களில் பிறந்த இவர் திருமாலின் சுதர்சனச் சக்கரத்தின் அம்சமாகக் கருதப்பெறுகிறார். திருவல்லிக்கேணியில் யோகத்தில் இருந்த இவர் நாள்தோறும் காஞ்சிபுரத்து மணிவண்ணனை வணங்க மறவாதவர். பக்திசாரர் என்ற சிறப்புப்பெயர் கொண்ட இவரின் **சீடன்பெயர் கணிகண்ணன்** என்பதாகும். இவர் இறைவனையே தன்னுடைய சீடனான கணிகண்ணன் பொருட்டுத் தன் பின்னால் வரச் செய்தவர் ஆவார். திருமழிசையாழ்வார் பாடிய நூல்கள் **திருச்சந்தவிருத்தம், நான்முகன் திருவந்தாதி** என்பனவாகும்.

**5.நம்மாழ்வார்**

**ஆழ்வார் திருநகரி** என்றழைக்கப்பெறும் **பாண்டிநாட்டுத் திருக்குருகூரில்** வேளாளர் குலத்தில் பிறந்தவர் இவர். **மாறன்** என்னும் இயற்பெயர் கொண்ட இவருக்கு சடகோபன், பராங்குசன், குருகைக்காவலன், காரிமாறன், தமிழ்மாறன், வகுளாபரணன் என்னும் பல சிறப்புப் பெயர்கள் உள்ளன. ஆழ்வார்களில் இவர் தலைமையானவராகக் கருதப்பெறுகிறார்.

**திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி** ஆகியவை இவர் இயற்றிய நூல்களாகும். திருவாய்மொழி '**திராவிடவேதம்**' எனவும் '**செந்தமிழ்வேதம்**' எனவும் போற்றப்பெறுகின்றது.

**6.மதுரகவியாழ்வார்**

இவர் நம்மாழ்வாரின் சீடராவார். பாண்டி நாட்டுத் திருக்கோளூரில் பிறந்த இவர் நம்மாழ்வாரின் பாடல்கள் அனைத்தையும் ஓலைச்சுவடியில் எழுதியவர். சிந்தைக்கினிய செவிக்கினிய பாடல்களைப் பாடியமையால் மதுரகவியாழ்வார் என்று அழைக்கப்பெற்றார். நம்மாழ்வாரைப் போற்றி இவர் பாடிய பாடல்களின் தொகுப்பு '**கண்ணின்நுன் சிறுத்தாம்பு**' என்று அழைக்கப்பெறுகின்றது. இவரை கருடாழ்வாரின் அம்சம் என்று கூறுவர்.

**7.பெரியாழ்வார்**

**ஸ்ரீவில்லிப்புத்தூரில்** ஆனித்திங்களில் பிறந்த இவர் திருமாலின் கருடனின் அவதாரமாகக் கருதப்பெறுகிறார். வேயர்குல அந்தணர் குலத்தில் பிறந்த இவரின்

இயற்பெயர் **வி'ணுச்சித்தர்** என்பதாகும். **பட்டர்பிரான், புதுவை மன்னன்** எனவும் இவர் அழைக்கப்பெறுகின்றார்.

இவர் பாடிய நூல்கள் **பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு** ஆகியவையாகும். இறைவனுக்குத் திருப்பல்லாண்டு பாடியதால் பெரியாழ்வார் என்று அழைக்கப்பெற்றார். நந்தவனம் அமைத்து, இறைவனுக்குப் பூமாலை கட்டி அணிவித்து வழிபாடு செய்தவர். இவர் பாடிய கண்ணன் தாலாட்டுப் பாடலே பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கிய வகை தோன்றக் காரணமாக இருந்தது என்று கூறுவர். ஆதலால் பெரியாழ்வாரை **'பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடி'** எனவும் அழைப்பர்.

**8.ஆண்டாள்**

பெரியாழ்வாரால் துளசிச்செடியின் அடியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு **கோதை** என்று பெயர் சூட்டி வளர்க்கப்பெற்றவர் இவர். பூமாதேவியின் அவதாரமாகக் கருதப்பெறும் இவர், தான் சூடிய மாலையை இறைவனுக்குச் சூட்டியதால் **'சூடிக்கொடுத்த நாச்சியார்'** என்று அழைக்கப்பெறுகின்றார். இறைவனை முழுமையாக ஆட்கொண்டமையால் பெரியாழ்வார் இவரை 'ஆண்டாள்' என்று அழைத்தார்.

திருமாலைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் பாவித்து **முப்பது பாடல்களைக் கொண்ட திருப்பாவை**யைப் பாடியுள்ளார். திருப்பாவைக்கு ஆண்டாள் வைத்த பெயர் **'சங்கத் தமிழ் மாலை முப்பது'** என்பதாகும். இன்றளவும் மார்கழி மாதங்களில் வைணவத் திருத்தலங்களில் திருப்பாவைப் பாடல் பாடப்பெற்று வருகின்றது. இவர் பாடிய மற்றொரு நூல் **'நாச்சியார்திருமொழி'** என்பதாகும். 'மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்' என்று கூறி, இறுதியில் திருவரங்கத்தில் இறைவனுடன் இவர் இரண்டறக் கலந்ததாகக் கூறுவர்.

**9.தொண்டரடிப்பொடியாழ்வார்**

சோழநாட்டுத் திருமண்டங்குடியில் பிறந்த இவரின் இயற்பெயர் **விப்ரநாராயணர்** என்பதாகும். இவரும் பெரியாழ்வாரைப் போலவே திருவரங்கத்தில் நந்தவனம் அமைத்து, மாலை கட்டி, இறைவனுக்கு அணிவித்து இறைத்தொண்டாற்றி வந்தவர். தம்மைத் திருமால் அடியவர்களின் அடிப்பொடியாக்கிக் கொண்ட இவர் பாடிய நூல்கள் **திருப்பள்ளியெழுச்சி, திருமாலை** என்பனவாகும்.

**10.திருப்பாணாழ்வார்**

இவர் சோழநாட்டு உறையூரில் பாணர் குலத்தில் பிறந்தவர் ஆவார். ஸ்ரீவத்சம் என்னும் திருமால் மறுவின் அம்சமாகப் போற்றப்பெறுகிறார். இசைபாடுவதில் வல்லவரான இவர் ஆலயத்தின் உள்ளே செல்ல மனம் இன்றி, காவிரியாற்றின் கரையிலேயே நின்று திருவரங்கநாதனை நோக்கிப் பாடல் பாடினார். மக்கள் இவரை பக்தர் என்றும் பாராமல் குலம் கருதி, இவரை நோக்கிக் கற்களை எறிந்தனர். தன்னுடைய பக்தன்

புண்படுவதைக்கண்ட திருவரங்கன் தன் நெற்றியிலிருந்து குருதி கொட்டச் செய்தார். பின் உலோகசாரங்கன் என்பவரின் கனவிலே தோன்றி திருப்பாணாழ்வாரைத் தோளில் சுமந்து ஆலயத்திற்கு அழைத்துவரப் பணிந்தார். திருப்பாணாழ்வார் 10 பாசுரங்களைக் கொண்ட **'அமலனாதிபிரான்'** என்னும் நூலினைப் பாடியுள்ளார்.

**11.திருமங்கையாழ்வார்**

இவர் திருவாலிநாட்டுத் திருக்குறையலூரில் கள்ளர் குடியில் பிறந்தவர் ஆவார். திருமாலின் வில்லின் அம்சமாகக் கருதப்பெறுகிறார் இவர். **நீலன், பரகாலன்** என்னும் பெயர்களை உடைய இவர் திருமங்கை நாட்டு அரசனாகையால் திருமங்கை என்னும் பெயர்பெற்றார்.

தன்னிடம் உள்ள பொன்னையும் பொருளையும் திருமால் பணிக்குச் செலவிட்டு நாள்தோறும் 1008 வைணவ அடியார்களுக்கு உணவளித்து வந்தார். பின் பொருளில்லாத காலத்தில் வழிப்பறி செய்து இறைப்பணியைத் தொடர்ந்தார். இவர் பாடிய நூல்கள் **பெரிய திருமொழி, திருநெடுந்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல், திருவெழுகூற்றிருக்கை** என்பனவாகும்.

**12.குலசேகராழ்வார்**

திருவஞ்சைக்களம் என்னும் ஊரில் பிறந்த இவர் சேர நாட்டின் அரசராகத் திகழ்ந்தவர். திருமால் பணிக்காகத் தம் மணிமுடி துறந்தவர். திருமால் வீற்றிருக்கும் மலையில் படியாய்க்கிடக்கும் வரத்தினை வேண்டியவர். இன்றும் திருமலைத் திருப்பதியில் குலசேகராழ்வார் படி என்ற ஒன்று காணப்படுகின்றது. இவர் பாடியது **பெருமாள் திருமொழி** என்பதாகும்.

மேற்கண்ட பன்னிரு ஆழ்வார்களின் இசைப்பாடல் மூலம் வைணவ சமயமும் தமிழ்மொழியும் ஒருசேர வளர்ந்தன.

-----------------------------------------------------

## இ. திருமடங்களின் தமிழ்ப்பணி

**திருமடங்கள்**

மடங்கள் யாவும் சமயங்களின் வளர்ச்சிக்காகத் தோற்றுவிக்கப்பட்டன. மடங்கள் சமயத்தை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், செந்தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சிக்கும் பாடுபட்டன. தமிழ் அறிவு நிரம்பிய பலர் சைவ மடங்களில் தங்கியிருந்து தமிழ்த்தொண்டு ஆற்றியுள்ளனர். கால வெள்ளத்தில் தமிழ் இலக்கிய ஏடுகள் பலவும் அடித்துச் செல்லப்படாமல் காத்தவை மடங்களே ஆகும். அவ்வகையில் சைவ சமயம் சார்ந்த மடங்கள் தமிழ்வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் குறித்துக் காண்போம்.

**திருவாவடுதுறை ஆதீனம்**

- கும்பகோணம் அருகில் **திருவாவடுதுறை** என்னுமிடத்தில் **நமச்சிவாய மூர்த்திகள்** என்பவரால் கிபி. 14ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது இம்மடம்.
- இதனை **மொட்டை மடம்** என்றும் அழைப்பர்.
- நமச்சிவாய மூர்த்திகள், அவருடைய மாணவர் தட்சிணாமூர்த்தி அம்பலவாண தேசிகர், வேலப்ப தேசிகர், ஈசான தேசிகர் ஆகியோர் இயற்றிய 14 நூல்கள் **பண்டார சாத்திரங்கள்** என்று அழைக்கப்பெறுகின்றன.
- நன்னூலின் உரையாசிரியர் சங்கரநமச்சிவாயரும் மாதவச்சிவஞான முனிவரும் இம்மடத்தைச் சேர்ந்தவர்களாவர்.
- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையையும் உ.வே.சா.வையும் இம்மடம் ஆதரித்தது.
-

**தருமபுர ஆதீனம்**

- இம்மடம் தஞ்சை மாவட்டம் **மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தருமபுரத்தில்** காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது.
- இம்மடத்தை நிறுவியவர் **குருஞானசம்பந்த தேசிகர்** என்பவராவார்.
- இவர் சிவபோதசாரம், சொக்கநாத வெண்பா போன்ற புகழ்பெற்ற எட்டு நூல்களை இயற்றியுள்ளார்.
- ஸ்ரீவெள்ளியம்பலவாணர், படிக்காசுப்புலவர் போன்றோர் இம்மடத்தைச் சேர்ந்தவர்களாவர்.
- இம்மடம் தேவாரத்திருமுறைகளுக்குப் பேருரை வெளியிட்டது.
- ஞானசம்பந்தம் என்ற பெயரில் திங்களிதழ் ஒன்றினை நடத்தி வருகிறது.
- இம்மடத்தின் சார்பில் தமிழ்க்கல்லூரி, சித்தாந்தக்கல்லூரி, தேவாரப்பாடசாலை ஆகியன நடத்தப்பெற்று வருகின்றன.
- இம்மடத்தைத் தாடிமடம் என்றும் அழைப்பர்.
- சமயச் சாத்திர மாநாடுகளையும் சமயச் சொற்பொழிவுகளையும் நடத்திவரும் இம்மடம் ஏறத்தாழ 800 நூல்களை வெளியிட்டுள்ளது.

**திருப்பனந்தாள் மடம்**

- இம்மடம் 1720ல் தில்லைநாயக சுவாமிகளால் தொடங்கப்பட்டது.
- இதனை திருப்பனந்தாள் காசிமடம் எனவும் அழைப்பர்.
- தருமபுர ஆதீனத்தின் சி'யமடம் எனவும் இது பெயர்பெறும்.
- குமரகுருபரன் என்னும் திங்களிதழையும் செந்தமிழ்க்கல்லூரி ஒன்றினையும் இம்மடம் நடத்தி வருகின்றது.
- ஸ்ரீவைகுண்டத்தில் கலைக்கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, தேவாரப்பாடசாலை ஆகியவற்றையும் நடத்தி வருகிறது.

- கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருக்குறள் உரைக்கொத்து, தேவாரம், திருவாசகம், பன்னிருதிருமுறை ஆகிய நூல்களை மலிவு விலைப் பதிப்பாக இம்மடம் வெளியிட்டுள்ளது.

**மதுரை ஆதீனம்**

- இது மதுரை மீனாட்சியம்மன் கோவிலருகே அமைந்துள்ளது.
- சைவ மடங்களுள் காலத்தால் முற்பட்டது இது.
- திருஞானசம்பந்தர் தங்கிச் சென்றதால் இம்மடம் திருஞானசம்பந்தர் திருமடம் எனவும் அழைக்கப்பெறுகின்றது.
- பிற சமயங்களைச் சார்ந்தவர்களுக்குச் சிவ தீட்சையளித்து, அவர்களைச் சைவ சமயத்தில் சேர்த்துக் கொள்ளும் பணியினை இம்மடம் செய்து வருகின்றது.

**திருவண்ணாமலை மடம்**

- சித்தாந்தச் சாத்திரங்களைப் பரப்புவதில் முன் நிற்கிறது இம்மடம்.
- இம்மடத்தைச் சேர்ந்த குகைநமச்சிவாயர் ‘அருணகிரி அந்தாதி’ என்ற நூலைப் பாடியுள்ளார்.
- இவருடைய மாணவர் ஆறுமுக சுவாமிகள் ‘நிட்டானுபூதி’ என்ற நூலை வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்தார்.

**வீர சைவ மடங்கள்**

- துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் நிறுவப்பட்ட மடங்கள் வீர சைவ மடங்களாகத் திகழ்கின்றன. இம்மடங்கள் கி.பி. 17ம் நூற்றாண்டில் நிறுவப்பட்டன.
- இவற்றுள் ஸ்ரீமயிலம்மடமும் துறைமங்கலம் மடமும் திருப்போரூர் மடமும் குறிப்பிடத்தக்கன.

**தமிழ்க்கல்லூரி**

தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் காசி மடம், போரூர் சாந்தலிங்கத் தம்பிரான் மடம் ஆகியன தமிழ்க் கல்லூரிகளை நடத்தி வருகின்றன. சைவ மடங்கள் சைவ சமயத்தை நிலைநிறுத்த தமிழ் மொழியை முன்னெடுத்தன. ஆதலால் மடங்கள் வாயிலாகத் தமிழ் மொழியும் சிறப்பெய்தியது.

------------------------

## ஈ. சிற்றிலக்கியங்கள்

**சிற்றிலக்கியங்கள்**

சோழர்களின் ஆட்சிக்குப்பிறகு தமிழகத்தில் நாயக்கர்களின் ஆட்சி நிலவியது. நாயக்கர்கள் பக்தி மிகுந்தவர்களாகவும் புகழினை விரும்புபவர்களாகவும் இருந்தனர். ஆதலால் இவர்கள் ஆட்சிக்காலத்தில் பேரிலக்கியங்கள் எதுவும் தோன்றாமல் சிற்றிலக்கியங்களே அதிகம் தோன்றின. ஆதலால் நாயக்கர்கள் ஆட்சிக் காலத்தைச் சிற்றிலக்கிய காலம் என்று அழைப்பர்.

**சிற்றிலக்கியம் 96 வகைப்படும்.**

**“பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாகத்**

**தொன்னூற்றாறு என்னும் தொகையாம்”** என்று பிரபந்த மரபியல் கூறுகின்றது.

பாட்டியல் நூல்களான வெண்பாப்பாட்டியல், பன்னிருபாட்டியல், நவநீதப்பாட்டியல் ஆகியனவும் சிற்றிலக்கிய வகைகள் குறித்துக் கூறுகின்றன. கலம்பகம், தூது, உலா, பள்ளு, பரணி, குறவஞ்சி, பிள்ளைத்தமிழ் ஆகியன சிற்றிலக்கிய வகைகளுள் குறிப்பிடத்தக்கனவாகத் திகழ்கின்றன.

**1. பிள்ளைத்தமிழ்**

இறைவனையோ மனிதரில் சிறந்தவரையோ குழந்தையாகப் பாவித்து, அக்குழந்தையின் மூன்றாம் மாதம் தொடங்கி இருபத்தியோராம் மாதம் வரையிலுள்ள காலகட்டத்தைப் பத்துப் பருவங்களாக அமைத்து, ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பாடல்கள்வீதம் நூறு பாடல்களால் பாடப்படுவது பிள்ளைத்தமிழ் எனப்படும். இதனைப் பிள்ளைப்பாட்டு, பிள்ளைக்கவி என்றும் அழைப்பர். தொல்காப்பியத்தில் இவ்விலக்கிய வகை ‘‘குழவி மருங்கினும் கிழவதாகும்’’ என்று குறிப்பிடப்படுகிறது. பிள்ளைத்தமிழ் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரண்டு வகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய ஏழுவகைப் பருவங்களும் இருவகைப் பிள்ளைத்தமிழுக்கும் உரியதாகும். இதில் இறுதி மூன்று பருவங்கள் சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகியன ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கும் கழங்கு, அம்மானை, ஊசல் ஆகியன பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கும் உரியனவாகும்.

**பெரியாழ்வார் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடி**யாகக் கருதப்பெறுகிறார். இவர் பாடிய **கண்ணன் தாலாட்டு**ப் பாடலே பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் தோற்றமாகக் கருதப்பெறுகின்றது. குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், ஒட்டக்கூத்தரின் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், பகழிக்கூத்தரின் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் ஆகியன குறிப்பிடத்தக்க பிள்ளைத்தமிழ் இலக்கியங்களாகும்.

**2.தூது**

தலைவன்மேல் காதல் கொண்ட தலைவி உயிருள்ள பொருட்களையோ அல்லது உயிரில்லாத பொருட்களையோ தூதாக அனுப்பி, ‘தூது சொல்லி வா’, ‘மாலை வாங்கி வா’ எனக்கூறும் விதமாகப் பாடப்பெறுவது தூது இலக்கியம் எனப்படும். இந்நூல் கலிவெண்பாவால் பாடப்பெறும். தலைவி தலைவனுக்குத் தூது அனுப்பும்விதமாகவே இவ்விலக்கியம் அமையும். **விறலிவிடு தூது** என்னும் இலக்கியம் மட்டுமே தலைவன் தலைவிக்குத் தூது அனுப்பும் விதமாகப் பாடப்பெற்றுள்ளது.

தூதாக அனுப்பும் பொருளின் பெருமையை எடுத்துக்கூறிய பின்னரே, அப்பொருளைத் தலைவனிடம் தலைவி தூதாக அனுப்புவாள். தூது இலக்கியங்களுள்

சிறந்ததாகக் கருதப்பெறுவது தமிழ்விடுதூது. இதனை இயற்றியவர் யாரெனத் தெரியவில்லை. மதுரை சொக்கநாதர்மீது காதல் கொண்ட தலைவி தமிழ் மொழியினைத் தூதாக அனுப்பும்விதமாகப் பாடப்பெற்றதாகும். உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சுவிடுதூது, பலபட்டடைச் சொக்கநாதப் புலவரின் அழகர் கிள்ளைவிடு தூது, கச்சியப்பச் சிவாச்சாரியாரின் வண்டுவிடு தூது ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.

**3.உலா**

தலைவன் வீதி உலா வரும்பொழுது அவனைக் கண்டு ஏழுபருவ மகளீரும் காதல் கொள்ளும் விதமாகப் பாடப்பெறுவதே உலா இலக்கியம். இது கலிவெண்பாவால் பாடப்பெறும். இறைவன், அரசன், வள்ளல், தலைவர் என இவர்களில் யாரேனும் ஒருவரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இந்நூலினை இயற்றுவர். உலாபுறம், பவனி உலா, உலாமாலை, புற உலா ஆகியன இதன் வேறுபெயர்களாகும். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகியன பெண்களின் ஏழு பருவங்களாகும். தலைவன்மீது காதல் கொள்ளக் கூடிய இவர்கள் குலமகளிர் அல்ல எனவும் பொதுமகளிர் என்றும் கூறுவர். **சேரமான் பெருமாள் நாயனாரின் திருக்கைலாய ஞானஉலா** முதல் உலா நூலாகும். ஆதலால் இதனை **ஆதியுலா** எனவும் அழைப்பர். ஒட்டக்கூத்தரின் ஏகாம்பரநாதர் உலா, வீரராகவக் கவிராயரின் திருவாரூர் உலா ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.

**4.அந்தாதி**

அந்தம் + ஆதி ஸ்ரீ அந்தாதி. முதல் பாடலின் அந்தத்தை (இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ) இரண்டாம் பாடலின் ஆதியாக (தொடக்கமாக) அமைத்துப் பாடப்பெறுவது அந்தாதி இலக்கியம் ஆகும். இது பதிற்றந்தாதி, நூற்றந்தாதி எனப் பல வகைப்படும். அபிராமி அந்தாதி (அபிராமபட்டர்), திருமழிசையாழ்வாரின் திருவந்தாதி, எல்லப்பநாவலரின் திருவருணை அந்தாதி, காரைக்காலம்மையாரின் அற்புதத்திருவந்தாதி, கம்பரின் சடகோபரந்தாதி ஆகியன குறிப்பிடத்தக்க அந்தாதி நூல்களாகும்.

**5.கலம்பகம்**

கலம்பகம் என்றால் கலவை, அறம்பாடுதல் என்று பொருள். பலவகைப் பூக்களால் தொடுக்கப்படும் மாலையைக் கதம்பம் என்று கூறுவதுபோல, பலவகையான ஓசைகளையும் உறுப்புக்களையும் பாக்களையும் கொண்டு பாடப்பெறுவதால் இது கலம்பக இலக்கியம் என்னும் பெயர் பெற்றது. சிலர் கலம்(12) ‚ பகம்(6) எனப்பிரித்து 18 உறுப்புக்களைக் கொண்டு பாடப்பெறுவது கலம்பக இலக்கியம் என்று கூறுவர். இது 100 பாடல்களைக் கொண்டு பாடப்பெறும். கார், காலம், குறம், மறம், களி, சித்து, வண்டு போன்றன கலம்பக உறுப்புக்களாகும்.

கலம்பக நூல்களுள் காலத்தால் முற்பட்டது நந்திக்கலம்பகம். மூன்றாம் நந்திவர்மன்மேல் பாடபட்ட இவ்விலக்கியத்தின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. இரட்டையரின் தில்லைக்கலம்பகம், குமரகுருபரரின் மதுரைக்கலம்பகம்,

திருவருணைக்கலம்பகம், கச்சிக்கலம்பகம் ஆகியன குறிப்பிடத்தக்க கலம்பக இலக்கியங்களாகும்.

**6.பரணி**

போரில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனுக்குப் பாடப்பெறுவது பரணி இலக்கியம். இதனை, ‘‘ஆனை ஆயிரம் அமரிடை வென்ற ∴ மானவனுக்கு வகுப்பது பரணி’’ என்று பன்னிருபாட்டியல் கூறுகின்றது. மன்னனின் பிறந்த நாள், பட்டத்து யானையின் பிறந்த நாள், போருக்குகந்த நாள், கொற்றவை தெய்வத்திற்கு உகந்த நாள் ஆகியன பரணி நாள் என்பதால் இது பரணி என்னும் பெயர் பெற்றது. போரில் தோற்றவன் பெயரே பரணி நூலுக்கு இடப்பெறும்.

செயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப்பரணியே பரணி இலக்கியங்களுள் தலைசிறந்ததாகப் போற்றப்படுகிறது. முதலாம் குலோத்துங்க சோழன் கருணாகரத்தொண்டைமான் தலைமையில் அனந்தவர்மன் சோடகங்கனை வெற்றி பெற்ற போது பாடப்பட்டதே இவ்விலக்கியம். ஒட்டக்கூத்தரின் தக்கயாகப்பரணி, பாசவதைப்பரணி போன்ற நூல்களும் போற்றுதலுக்குரியதாகும்.

**7.குறவஞ்சி**

குறவர் குலத்தைச் சார்ந்த பெண்ணையே குறவஞ்சி என்று அழைப்பர். தலைவன்மேல் காதல் கொண்ட தலைவிக்காகத் தோழி குறி கேட்கின்றாள். தலைவனோடு தலைவி விரைவில் சேருவாள் என்று குறத்தி குறி கூற, அதனைக் கேட்டுத் தலைவி மகிழ்ச்சி கொள்கிறாள். தலைவி கொடுக்கும் பரிசுப்பொருட்களைப் பெற்றுக் கொண்டு வரும் குறத்தி, தன்னைத்தேடி வரும் குறவனிடம் நடந்த நிகழ்ச்சிகள் யாவற்றையும் கூறும்விதமாகப் பாடப்பெறுவதே குறவஞ்சி இலக்கியம் எனப்படும். குறத்தியின் செயலே மேம்பாடு பெறுவதால் குறவஞ்சி என்று பெயர் பெற்றது. இதனைக் குறவஞ்சி நாடகம் எனவும் குறவஞ்சி நாட்டியம் எனவும் அழைப்பர். திரிகூடராசப்பக்கவிராயரின் திருக்குற்றாலக்குறவஞ்சி, குமரேசர் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரின் சரபேந்திர பூபாலக்குறவஞ்சி ஆகியன குறிப்பிடத்தக்க குறவஞ்சி இலக்கியங்களாகும்.

**8.பள்ளு**

பன்னிருபாட்டியலில் கூறப்பெறும் உழத்திப்பாட்டே பிற்காலத்தில் பள்ளு என்கிற சிற்றிலக்கிய வகையாகத் தோன்றிற்று என்று கூறுவர். தொல்காப்பியர் இவ்விலக்கியத்தினைப் ‘புலன்’ என்னும் வனப்புகளில் ஒன்றாகக் கூறுகின்றார். உழவர்களின் வாழ்க்கை நிலையை எடுத்துக்கூறும் விதமாகவே இவ்விலக்கியம் பாடப்பெறும். ‘‘நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது’’ என்று கூறுவர்.முக்கூடற்பள்ளு, திருச்செந்தூர்ப்பள்ளு, வைசிய பள்ளு, வையாபுரிப்பள்ளு ஆகியன குறிப்பிடத்தக்க பள்ளு இலக்கியங்களாகும்.

மேற்கூறியவை அல்லாமல் 100 பாடல்களால் பாடப்பெறும் சதகம், கோர்வையாகப் பாடப்பெறும் கோவை, பாவை போன்ற வேறு பல சிற்றிலக்கிய வகைகளும் காணப்பெறுகின்றன.

----------------------------------------

## சைவ சித்தாந்த சாத்திரங்கள்

**சைவ சித்தாந்தம்**

களப்பிரர் ஆட்சிக்காலத்தில் வீழ்ச்சியுற்றிருந்த சைவ சமயத்தைச் சைவத்திருமுறைகள் என்ற இசைப்பாடல்கள் மீண்டும் நிலைபெறச்செய்தன. இந்தத் திருமுறைகள் யாவும் தோத்திரநூல்கள் என்று அழைக்கப்பெற்றன. சைவத்திருமுறைகளையடுத்து சைவ சித்தாந்த சாத்திரங்கள் சைவ சமயத்தின் வளர்ச்சியில் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. கி.பி. 12ஆம் நூற்றாண்டு முதல் 14ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் தோன்றிய சைவ சித்தாந்த சாத்திரங்கள் மொத்தம் 14 நூல்கள் ஆகும்.

**சைவ சித்தாந்த சாத்திரங்கள்**

சைவ சித்தாந்த சாத்திரங்கள் எவையென்பதை,

**"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்**
**பிந்திருபா உண்மை பிரகாசம் வந்தவருட்**
**பண்பு வினா போற்றிக் கொடி பாசமிலா நெஞ்சுவிடு**
**உண்மை நெறி சங்கற்பம் முற்று"**

என்னும் பாடலின் மூலம் அறியலாம். இவையாவும் சாத்திர நூல்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றை மெய்கண்ட சாத்திரம் என்றும் அழைப்பர். அனுபூதி நூல்கள் என்றும் கூறுவர்.

இவையாவும் பதி, பசு, பாசம் குறித்த தத்துவங்களை விளக்குவனவாகும். பதி – சிவம் எனப்பெறும் இறைவன். பசு – ஆன்மா. பாசம் - ஆணவம், மாயை, கன்மம் என்ற மும்மலங்கள்.

**1.திருவுந்தியார்**

- ஆசிரியர் – **திருவியலூர் உய்யவந்த தேவனார்**
- பாடல்கள் - 45
- காலம் - கி.பி. 12ஆம் நூற்றாண்டு
- மு.வரதராசனார் இந்நூல் குறித்துக் கூறும்பொழுது "அழகான நடையில் உயர்ந்த உண்மைகளை விளக்குவது" என்று புகழ்ந்துள்ளார்.
- மெய்க்கண்டாரின் சிவஞானபோதத்திற்கு முன் தோன்றிய நூல்.

**2. திருக்களிற்றுப்பாடியார்**

- ஆசிரியர் – **திருக்கடவூர் உய்யவந்த தேவனார்**
- பாடல்கள் - 100
- காலம் - கி.பி.12 ஆம் நூற்றாண்டு
- 63 நாயன்மார்களின் வரலாற்றில் சில செய்திகளை மட்டும் விளக்கும் வகையில் இயற்றப்பெற்றுள்ளது.
- சைவ சமயக் கருத்துக்களை விளக்குவதன்பொருட்டு திருக்குறள் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது.

**3.சிவஞானபோதம்**

- ஆசிரியர் – **மெய்கண்ட தேவர்**
- சைவ சித்தாந்த சாத்திரங்களின் தலைமை நூலாக விளங்கக் கூடியது.
- பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை விளக்குவது.
- சைவ சித்தாந்தத்தின் அடிப்படை நூலாக விளங்குவது.
- இது முதல்நூல் என்றும் வடமொழி கிரௌவ ஆகம பாவ விமோசன படலத்தின் மொழிபெயர்ப்பு என்றும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஆனால் இது மொழிபெயர்ப்பு நூல் அன்று. தமிழ் மொழியிலேயே தோன்றிய முதல்நூல் என்று சதாசிவப் பண்டாரத்தார் கூறுவர்.
- சூத்திரங்கள் - 12
- அதிகாரங்கள் - 39
- எடுத்துக்காட்டு வெண்பாக்கள் - 81
- இந்நூலுக்கு சிவஞானமாபாடியம் என்னும் உரை எழுதப்பெற்றுள்ளது.
- காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

**4.சிவஞான சித்தியார்**

- ஆசிரியர் – **அருள்நந்தி சிவாச்சாரியார்**
- இது சிவஞானபோதத்தின் வழிநூல் ஆகும்.
- பரபக்கம், சுபக்கம் என்னும் இருபிரிவுகளையுடைய விரிவான நூல்.
- பாடல்கள் - 828.
- ‘‘சிவத்திற்குமேல் தெய்வமில்லை. சிவஞானசித்திக்குமேல் சாத்திரமில்லை’’ என்னும் சொற்கள் இந்நூலின் பெருமையினைப் பறைசாற்றும்.
- காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டு.

**5.இருபா இருப.்.து**

- ஆசிரியர் – **அருள்நந்தி சிவாச்சாரியார்**
- அந்தாதித் தொடையில் அமைந்த இந்நூலில் 10 நேரிசை வெண்பாக்களும் 10 நேரிசை ஆசிரியப்பாக்களும் மாறிமாறி இடம்பெற்றுள்ளன.
- தம் ஆசிரியரான மெய்க்கண்ட தேவரை வணங்கி வினவ, அதற்கு அவர் விடை கூறும் உரையாடல் பாங்கில் அமைந்துள்ளது.

**6.சிவப்பிரகாசம்**

- ஆசிரியர் – **கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்**
- சைவ சித்தாந்த சாத்திரங்களுள் 8 நூல்களை இயற்றியவர் இவரே.
- இவர் மறைஞான தேசிகரின் மாணவராவார்.
- சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய நூல்களை அடியொற்றி எழுந்தது இந்நூல்.
- பொது, உண்மை என்னும் 2 பிரிவுகளையும் 100 வெண்பாக்களையும் இந்நூல் கொண்டுள்ளது.
- காலம் - கி.பி.14ஆம் நூற்றாண்டு.

**7.திருவருட்பயன்**

- ஆசிரியர் – **கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்**
- குறள் வெண்பாக்கள் - 100
- அதிகாரம் - 10
- சைவ சித்தாந்த உண்மைகளை விளக்கும் நூல்.

**8.வினாவெண்பா**

- ஆசிரியர் – **கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்**
- தன் ஆசிரியரான மறைஞான தேசிகரை வினவி, சைவ சித்தாந்த உண்மைகளை அறிவதுபோல் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.
- வெண்பாக்கள் - 13

**9.போற்றிப்ப.்.றொடை வெண்பா**

- ஆசிரியர் – **கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்**
- கலிவெண்பாவால் ஆன நூல்
- ஆசிரியர் தன் ஞானகுருவின் அருட்செயல்களை வியந்து போற்றும் வகையில் இயற்றப் பெற்ற நூல்.

**10. கொடிக்கவி**

- ஆசிரியர் – **கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்**
- தில்லையில் கொடியேற்றும் வகையில் சித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் நூல்.
- செய்யுள்கள் - 4
- அளவால் மிகச்சிறிய நூல்.

**11. நெஞ்சுவிடுதூது**

- ஆசிரியர் – **கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்**
- சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.
- ஆசிரியரிடம் நெஞ்சினைத் தூதுவிடும் வகையில் இயற்றப்பெற்றது.
- திருவள்ளுவரைப் போற்றிக் கூறும் நூல்.

**12.உண்மைநெறி விளக்கம்**

- ஆசிரியர் – **கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்**
- விருத்தப்பாக்கள் - 6
- சைவ சித்தாந்தங்கள் ‘தசகாரியம்’ என்று குறிப்பிடும் தத்துவரூபம், தத்துவக்காட்சி, ஆன்மவடிவம், ஆன்மதரிசனம் போன்ற பத்தையும் விளக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது.

**13.சங்கற்ப நிராகரணம்**

- ஆசிரியர் – **கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்**
- சைவ சமயத்திற்குப் புறம்பான கருத்துக்களை இந்நூல் எடுத்துரைக்கின்றது.

**14.உண்மை விளக்கம்**

- ஆசிரியர் – **திருவதிகை மனவாசகம் கடந்தார்**
- இந்நூலும் தம் ஆசிரியரான மெய்க்கண்ட தேவரை வினவி, அதற்கு அவர் விடைகூறும் பாங்கில் இயற்றப்பெற்றுள்ளது.
- இந்நூல் ‘நமசிவாய’ என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தின் தத்துவப்பொருளை விளக்குகிறது.
- வெண்பாக்கள் - 60
- காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டு.

**சைவ சித்தாந்த உரையாசிரியர்**

**சிவஞான முனிவர்**

- சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கு உரை எழுதியோருள் குறிப்பிடத்தக்கவர்.
- ஊர் – விக்கிரமசிங்கபுரம்

- மரபு – வேளாளர்
- இயற்பெயர் – முக்காளலிங்கர்
- இயற்றிய நூல்கள் - மாபாடியம், தொல்காப்பியம் சூத்திரவிருத்தி, நன்னூல் சூத்திரவிருத்தி, காஞ்சிப்புராணம், சோமசேர் முதுமொழி வெண்பா.
- இயற்றிய உரைநூல்கள் - சிவஞானமாபாடியம் பேருரை, சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞான சித்தியார் பொழிப்புரை.
- இவர் மறுப்பு நூல்கள் எழுதுவதில் வல்லவர்.

**தொகுப்புரை**

அலகு நான்கில் தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ள பன்னிரு திருமுறைகள் பற்றிய விளக்கங்களையும், நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தின் பன்னிரு ஆழ்வார்கள் பற்றியும், சைவ வைணவ திருமடங்களின் தமிழ்ப்பணி குறித்தும், சிற்றிலக்கிய வரலாறு குறித்தும், சைவ சிந்தாந்த சாத்திரங்கள் பற்றியும் உரிய ஆசிரியர் கால வரையறை மற்றும் நூல் தலைப்புகளோடு தெளிவுபட எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## பயிற்சி வினாக்கள்

### பகுதி-அ

**ஒரு மதிப்பெண் வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. பன்னிரு திருமுறையைத் தொகுத்தவர் யார்?
(அ) நாதமுனிகள் (ஆ) **நம்பியாண்டார் நம்பி** (இ) உ.வே.சா (ஈ) சேக்கிழார்
2. பத்தாம் திருமுறையைப் பாடியவர் யார்?
(அ) சுந்தரர் (ஆ) அப்பர் (இ) மாணிக்கவாசகர் **(ஈ) திருமூலர்**
3. பிரம்மராயன் என்னும் பட்டம் பெற்றவர் யார்?
(அ) சுந்தரர் (ஆ) அப்பர் **(இ) மாணிக்கவாசகர்** (ஈ) திருமூலர்
4. திருநாவுக்கரசரின் இயற்பெயர் என்ன?
(அ) **மருள்நீக்கியார்** (ஆ) ஆலாலசுந்தரர் (இ) திருவாதவூரர் (ஈ) நம்பிஆரூரர்
5. தாண்டகவேந்தர், அப்பர் என்று அழைக்கப்படுபவர் யார்?
(அ) சுந்தரர் **(ஆ) திருநாவுக்கரசர்** (இ) மாணிக்கவாசகர் (ஈ) திருமூலர்
6. தம்பிரான் தோழர், வன்தொண்டர் என்று அழைக்கப்படுபவர் யார்?
**(அ) சுந்தரர்** (ஆ) திருநாவுக்கரசர் (இ) மாணிக்கவாசகர் (ஈ) திருமூலர்
7. தமிழ் வேதம், சைவவேதம் என்று அழைக்கப்படும் நூல் எது?
**(அ) திருவாசகம்** (ஆ) திருக்கோவை (இ) திருப்பள்ளியெழுச்சி (ஈ) அந்தாதி
8. திருமந்திரமாலை, தமிழ்மூவாயிரம் என்று அழைக்கப்படும் நூல் எது?
(அ) திருவாசகம் **(ஆ) திருமந்திரம்** (இ) திருப்பள்ளியெழுச்சி (ஈ) அந்தாதி
9. சகமார்க்கத்தில் இறைவனை வழிபட்டவர் யார்?
**(அ) சுந்தரர்** (ஆ) திருநாவுக்கரசர் (இ) மாணிக்கவாசகர் (ஈ) திருமூலர்
10. காரைக்காலம்மையாரின் இயற்பெயர் யாது?

(அ) கோதை **(ஆ) புனிதவதி** (இ) நாச்சியார் (ஈ) அம்மை

11. சேக்கிழாரின் இயற்பெயர் யாது?

**(அ) அருள்மொழித்தேவர்** (ஆ) ஆலாலசுந்தரர் (இ) திருவாதவூரர் (ஈ) நம்பிஆரூரர்

12. நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?

**(அ) நாதமுனிகள்** (ஆ) நம்பியாண்டார் நம்பி (இ) உ.வே.சா (ஈ) சேக்கிழார்

13. ஆழ்வார்கள் எத்தனை பேர்?

(அ) பத்து (ஆ) பதினொன்று (இ) **பன்னிரண்டு** (ஈ) ஒன்பது

14. ஆழ்வார்களில் தலைமையானவர் யார்?

(அ) பெரியாழ்வார் (ஆ) பேயாழ்வார் **(இ) நம்மாழ்வார்** (ஈ) பூதத்தாழ்வார்

15. பெரியாழ்வார் ஆண்டாளுக்குச் சூட்டிய பெயர் யாது?

(அ) **கோதை** (ஆ) சீதை (இ) நாச்சியார் (ஈ) புனிதவதி

16. பக்திசாரர் என்று அழைக்கப்படுபவர் யார்?

(அ) பெரியாழ்வார் (ஆ) பேயாழ்வார் (இ) நம்மாழ்வார் (ஈ)**திருமழிசை ஆழ்வார்**

17. சேர நாட்டை ஆட்சி புரிந்த ஆழ்வார் யார்?

(அ) பெரியாழ்வார் **(ஆ) குலசேகராழ்வார்** (இ) நம்மாழ்வார் (ஈ)திருமழிசை ஆழ்வார்

18. தாடிமடம் என்று அழைக்கப்படும் மடம் எது?

(அ) வீரசைவ மடம் (ஆ) திருவாவடுதுறை மடம் **(இ)தருமபுர ஆதீனம்** (ஈ) காஞ்சி மடம்

19. மொட்டை மடம் என்று அழைக்கப்படும் மடம் எது?

(அ) வீரசைவ மடம் **(ஆ) திருவாவடுதுறை மடம்** (இ)தருமபுர ஆதீனம் (ஈ) காஞ்சி மடம்

20.பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடி?

(அ) **பெரியாழ்வார்** (ஆ) பேயாழ்வார் (இ) நம்மாழ்வார் (ஈ) மாணிக்கவாசகர்

21.தமிழில் தோன்றிய முதல் உலா நூல் எது?

(அ) மூவருலா **(ஆ) திருக்கைலாயஞானஉலா**

(இ) ஏகாம்பரநாதர் உலா (ஈ) ஆளுடைபிள்ளையார் திருவுலா

22.உழத்திப்பாட்டு என்பது எவ்வகை இலக்கியம்?

(அ) உழவர் பாட்டு (ஆ) நாட்டுப்புறம் **(இ) பள்ளு இலக்கியம்** (ஈ) சங்கஇலக்கியம்

23.கலம்பக இலக்கியங்களில் முதன்மையானது எது?

**(அ)நந்திக் கலம்பகம்** (ஆ)தில்லைக்கலம்பகம்

(இ)மதுரைக்கலம்பகம் (ஈ)திருவாமாத்தூர் கலம்பகம்

24.முதலில் தோன்றிய பரணி இலக்கியம் எது?

(அ)தக்கயாகப்பரணி (ஆ)பாசவதைப்பரணி **(இ)கலிங்கத்துப்பரணி** (ஈ)மோகவதைப்பரணி

25.பெரியபுராண நூலுக்கு சேக்கிழார் வைத்த பெயர் யாது?

அ.மாபுராணம் **ஆ.திருத்தொண்டர் புராணம்** இ.சிவபுராணம் ஈ.சைவபுராணம்

26. சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் மொத்தம் எத்தனை?

அ) 11 ஆ) 12 இ) 13 **ஈ) 14**

27. மெய்க்கண்டாரின் மாணவர் யார்?

**அ) அருணந்தி சிவாச்சாரியார்** ஆ) திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனார்

இ) திருவியலூர் உய்ய வந்த தேவர் ஈ) உமாபதி சிவாச்சாரியார்

28. 'நமசிவாய' எனும் ஐந்தெழுத்து மந்திர தத்துவப் பொருளை விளக்கும் நூல் எது?

அ) இருபா இருப.்.து **ஆ) உண்மை விளக்கம்** இ) சிவப்பிரகாசம் ஈ) திருவருட்பயன்

29. 14 சாத்திர நூல்களுள் அளவால் மிகச்சிறிய நூல் எது?

அ) நெஞ்சுவிடு தூது **ஆ) கொடிக்கவி** இ) உண்மைநெறிவிளக்கம் ஈ) சங்கற்ப நிராகரணம

**பகுதி-ஆ**

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்**

1. சைவசமயக் குரவர் நால்வர் குறித்து எழுதுக.
2. நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் குறித்து எழுதுக.
3. முதலாழ்வார் மூவர் பற்றி எழுதுக.
4. திருவாடுதுறை மடத்தின் தமிழ்ப்பணியினை விவரிக்க.
5. பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கியம் பற்றி எழுதுக.
6. பரணி சிற்றிலக்கியம் குறித்து விளக்குக.
7. உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் குறித்துக் கட்டுரை வரைக.
8. அருள்நந்தி சிவாச்சாரியார் குறித்து வரைக.
9. மெய்க்கண்டார் குறித்து வரைக.

**பகுதி-இ**

**எட்டு மதிப்பெண் வினாக்கள்**

**1.** பன்னிரு திருமறைகள் குறித்துக் கட்டுரை வரைக.
**2.** சைவமும் தமிழும் குறித்துக் கட்டுரை வரைக.
**3.** நாலாயிர திவ்யப் பிரபந்தங்களின் வழி ஆழ்வார்களின் பக்திச் சிறப்பினை விளக்குக.
**4.** பன்னிரு ஆழ்வார்கள் குறித்துக் கட்டுரை வரைக.
**5.** சைவத்திருமடங்களின் தமிழ்ப்பணி குறித்துக் கட்டுரை வரைக.
**6.** தமிழில் உள்ள சிற்றிலக்கியங்கள் குறித்து கட்டுரைக்க.
**7.** சைவ சித்தாந்த சாத்திரங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

# அலகு-5-மொழித்திறன்

## அ.தொடர்வகைகள்

**தொடர்**

- ✓ ஒன்றுக்கும் மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து பொருள் தரும் முறையில் அமைவது தொடர் ஆகும்.

**தொடர் அமைப்பு**

- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற மூன்று உறுப்புகள் இணைந்து தொடர் அமையும்
- எழுவாய் என்பது பெயர்ச்சொல். தொடரின் முதலில் பெரும்பாலும் வரும்.
- பயனிலை என்பது வினைச்சொல். தொடரின் இறுதியில் வரும்.
- எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் செயப்படுபொருள் வரும்.
- செயப்படுபொருள் இல்லாமலும் தொடர் அமையும்.

**தொடர்வகைகள்**

**1.எழுவாய்த்தொடர்**

- ✓ எழுவாயாக நிற்கும் பெயர் ஒரு பயனிலையைக் கொண்டு முடிவது.
- ✓ எழுவாய்த்தொடர் ஆறு வகைப்படும்.
- ✓ பொருண்மை சுட்டல் - (எ.டு.) கடவுள் உண்டு.
- ✓ வியங்கோள் வருதல் - வியங்கோள் வினை பயனிலை வருதல்- (எ.டு.) அரசன் வாழ்க.
- ✓ வினைநிலை உரைத்தல் - தெரிநிலை வினை, பயனிலையாக வருதல் (எ.டு.) சாத்தன் வந்தான்.
- ✓ வினாவிற்கு ஏற்றல் - வினாச்சொல் பயனிலையாக வரும் - (எ.டு) அவன் யார்?
- ✓ பண்புகொளவருதல் - பண்பு அடிப்படையாகத் தோன்றி குறிப்பு வினை பயனிலையாக வருதல் - (எ.டு) கம்பன் கொற்றன்.
- ✓ பெயர்கொள வருதல் - பெயர்ச்சொல் பயனிலையாக வரும் - (எ.டு.) சாத்தன் வணிகன்.

**2.வினைமுற்றுத் தொடர்**

- ✓ வினை முன்னும் பெயர் பின்னுமாக வந்து அமைவது வினைமுற்றுத் தொடர் – (எ.டு.) வந்தான் சாத்தன்

**3. வேற்றுமைத் தொடர்**

- ✓ வேற்றுமை உருபுகள் ஒரு சொல்லின் இறுதியில் வந்து வினைகளையோ பெயர்களையோ கொண்டு முடிவது வேற்றுமைத்தொடர் எனப்படும்.
- ✓ வேற்றுமை உருபுகள் தொக்கு (மறைந்து) நிற்பதும் உண்டு.

- ✓ வேற்றுமைத் தொடர் **ஆறு வகைப்படும்**.
- ✓ 1. இரண்டாம் வேற்றுமைத் தொடர் – மரத்தை வெட்டினான்
- ✓ 2. மூன்றாம் வேற்றுமைத் தொடர் – மண்ணால் செய்த குடம்
- ✓ 3. நான்காம் வேற்றுமைத் தொடர் – அவனுக்குக் கொடு
- ✓ 4. ஐந்தாம் வேற்றுமைத் தொடர் – காக்கையின் கரியது
- ✓ 5. ஆறாம் வேற்றுமைத் தொடர் – சாத்தனது வீடு
- ✓ 6. ஏழாம் வேற்றுமைத் தொடர் – வீட்டின்கண் இருந்தான்
- ✓ இவற்றில் மரம் வெட்டினான், மண்குடம், சாத்தன் வீடு என்பன போல வேற்றுமைத் தொகைகளாகவும் வரும்.

**4. விளித்தொடர்**

- ✓ எட்டாம் வேற்றுமை விளித்தொடர் எனப்படும். (எ.டு.) நம்பி வா, அன்னாய் கேள், மகனே யார்

**5. வினைச்சொல் தொடர்**

- ✓ ஓர் எச்சவினையும் அதுகொண்டு முடியும் வினைச்சொல்லும் சேர்ந்த தொடர் வினையெச்சத்தொடர் எனப்படும்.
- ✓ இது தெரிநிலை வினையெச்சத் தொடர், குறிப்பு வினையெச்சத் தொடர் என இரண்டு வகைப்படும்.
- ✓ இதனை வினையடை என்பர்.

**தெரிநிலை வினையெச்சத் தொடர்**

- ✓ தெரிநிலை எச்சவினை - ஒரு வினைச்சொல் கொண்டு முடியும் தொடர் தெரிநிலை வினைச்யெச்சத் தொடர் எனப்படும்.
- ✓ (எ.டு.) நன்கு பேசினான், மெல்ல வந்தான்

**பலவினையெச்சங்கள் அடுக்கிவரல்**

- ✓ வினையெச்சங்கள் ஒரு தொடரில் பலவாக அடுக்கி வரலாம்.
- ✓ (எ.டு.) உண்டு தின்று ஆடிப் பாடி மகிழ்ந்து வந்தான்.

**6. பெயரெச்சத் தொடர்**

- ✓ ஓர் எச்சவினை ஒரு பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சத் தொடர்.
- ✓ இது தெரிநிலை பெயரெச்சத்தொடர், குறிப்புப் பெயரெச்சத்தொடர் என இரு வகைப்படும்.

**தெரிநிலை பெயரெச்சத் தொடர்**

- ✓ தெரிநிலை எச்ச வினையாக ஒரு பெயர்ச்சொல் முடிவது தெரிநிலைப் பெயரெச்சத்தொடர் எனப்படும்.
- ✓ இது, இடம், செயப்படுபொருள், காலம், கருவி, வினைமுதல் (எழுவாய்), வினைப்பெயர் ஆகிய ஆறு வகையாக பெயர்களைக் கொண்டு முடியும்.
  - வாழுமிடம் - இடம்
  - கற்குநூல் - செயப்படுபொருள்
  - துயிலுங்காலம் - காலம்
  - வேட்டும்வாள் - கருவி
  - வந்த சாத்தன் -வினைமுதல்(எழுவாய்)
  - உண்ணும் ஊண் - வினை

**குறிப்புப் பெயரெச்சத்தொடர்**

- ✓ குறிப்பு எச்ச வினையானது ஒரு பெயரைக்கொண்டு முடிவது.
- ✓ இதனை பெயரடை என்பர்.
- ✓ (எ.டு) நல்ல மக்கள், இனிய மனைவி

**7. அடுக்குத் தொடர்**

- ✓ ஒரே சொல் இரண்டு முறை, மூன்று முறைகள் வந்து ஒரே பொருளைத் தருவது.
- ✓ (எ.டு.) பாம்பு பாம்பு பாம்பு, தீ தீ தீ, போ போ போ

**8. உரிச்சொல் தொடர்**

- ✓ உரிச்சொற்களை அடுத்துவரும் தொடர் உரிச்சொல் தொடர் எனப்படும்.
- ✓ உரிச்சொற்கள் - சால, தவ, நனி, கூர், மழ போன்றன.
- ✓ (எ.டு.) சாலச்சிறந்தது, நனிபெரியது

-------------------------------------

## ஆ. மரபுத்தொடர், பழமொழிகள்

**மரபுத்தொடர்**

மரபு என்றால் பழமை என்று பொருள். முன்னோர் பயன்படுத்திய சொற்றொடரை அவர்கள் வழிவந்தோரும் பயன்படுத்துவதால் மரபுத்தொடர் எனப்பெயர் பெற்றது. இது சொலவடை எனப்படும். ஆங்கிலத்தில் idioms and phrases என்பர்.

**சான்றுகள்**

- ✓ இறக்கைகட்டிப் பறக்கிறது – விரைவாகச் செய்வது அல்லது விரைவாக இயங்குவது
- ✓ கதைகட்டிவிடுதல் - தவறான விசயத்தை எல்லோரிடமும் பரப்புதல்

- ✓ வெட்டு ஒன்று துண்டு இரண்டு – மிகவும் கண்டிப்பாக இருத்தல் அல்லது சொல்லுதல்
- ✓ நாவை அடக்கு – அமைதியாக எதுவும் பேசாமல் இருத்தல்
- ✓ இறந்த மொழி – பேச்சுவழக்கில் இல்லாத மொழி
- ✓ மனபாரம் - மிகுந்த கவலை
- ✓ நெஞ்சு உடைதல் - மனம் உடைதல்
- ✓ மிதமிஞ்சிய விசனம் - கவலை அடைதல்
- ✓ மனதை உருக்கியது –அனுதாபம் கொள்ளச் சொல்லுதல்
- ✓ வாலைச் சுருட்டிக்கொண்டு போதல் - பயந்துபோய் எதுவும் சொல்லாமல் போதல்

**மரபுத்தொடர்களை வாக்கியத்தில் அமைத்தல்**

**அகலக்கால் வைத்தல்**

**பொருள்** - சக்திக்கு மீறிப்போதல்

**வாக்கியம்** - நகைத்தொழிலைச் சிறப்பாக நடத்த முடியாதபோது துணிக்கடைத் தொழிலையும் தொடங்கி அகலக்கால் வைத்ததால் இரண்டு தொழிலிலும் ந்‘டமடைந்தான்.

**அம்பலப்படுத்துதல்**

**பொருள்** - பலரும் அறியச் சொல்லுதல்

**வாக்கியம்** - அகிலனுக்கு மட்டுமே தெரிந்த கமலாவின் மதிப்பெண் செய்தியைத் தன் வகுப்பில் அனைவருக்கும் தெரியும்படி அம்பலப்படுத்தினான்.

**அமளிதுமளி**

**பொருள் -** கூச்சலோடு கூடிய குழப்பம்

**வாக்கியம்** - ஒரு இனத்தினரைப் பற்றி இழிவாகப் பேசியதால் அங்கிருந்த கூட்டத்தினரிடையே அமளிதுமளி ஆனது.

**அலைக்கழித்தல்**

**பொருள்-** அலைத்து வருத்துதல்?, இழுத்தடித்தல்

**வாக்கியம்** - வாங்கியக் கடனை இன்று தருகிறேன், நாளைக்குத் தருகிறேன் எனக் கடன்காரனை அலைக்கழித்தான்.

**ஆலாப் பறத்தல்**

**பொருள்** - தேடி அலைதல்

**வாக்கியம்** - தாய்ப்பறவை வர நெடு நேரமானதால் பறவைக் குஞ்சுகள் பசியால் உணவுக்காக ஆலாப் பறந்தன.

**ஆட்டங்காணுதல்**

**பொருள் -** வலுவற்ற ∴ உறுதியற்ற நிலை

**வாக்கியம்** - நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்போது தங்கள் சொந்தக் கட்சிக்காரர்களின் ஆதரவு இல்லாததால் அவர்தம் ஆட்சி ஆட்டம் கண்டது.

**ஆழம் பார்த்தல்**

**பொருள்** - ஒருவரின் உண்மை நிலையை அறிதல்

**வாக்கியம்** - கொலை நடந்த நேரம் நீ எங்கிருந்தாய் என்று வாதியைப் பார்த்து கேட்டு அவனுக்கும் கொலைக்கும் சம்மந்தமறிய தொடர்பு இருக்குமா? என வழக்கறிஞர் ஆழம் பார்த்தார்.

**உப்புச்சப்பின்றி**

**பொருள் -** ஆர்வமூட்டாத

**வாக்கியம்** - கவிஞர் பேசிய பேச்சு கேட்பதற்கு இனிமையில்லாமல் உப்புச்சப்பின்றி இருந்தது.

**ஈடுகொடுத்தல்**

**பொருள்** - சரிக்குச்சமம்.∴ சமாளித்தல்

**வாக்கியம்** - கோல்டன் கால்பந்து அணி வானவில் கால்பந்து அணியின் சிறப்பான ஆட்டத்திற்கு முன் ஈடுகொடுத்து விளையாட முடியாமல் திணறியது.

**ஈரமின்றி**

**பொருள்** - இரக்கமில்லாமல்

**வாக்கியம்** - தீவிரவாதிகள் குழந்தைகள் முதியவர்கள் என்றும் பாராமல் நெஞ்சில் ஈரமின்றிச் சுட்டுக்கொன்றனர்.

**உருக்குலைதல்**

**பொருள்** - வடிவம் சிதைதல் ∴ உடல் மெலிதல்

**வாக்கியம்** - தன்தாயின் பிரிவை எண்ணி எண்ணி வேதனையுற்று உருக்குலைந்து போனான்.

**ஊருக்கு உபதேசம்**

**பொருள்** - தான் கடைபிடிக்காமல் பிறருக்கு மட்டும் வழங்கும் அறிவுரை.

**வாக்கியம்** - புகைப்பிடித்தால் உடலுக்குத் தீங்கு என்று ஊருக்கு உபதேசம் செய்துவிட்டு தான் யாருக்கும் தெரியாமல் புகைப்பிடித்தல் எந்த விதத்தில் நியாயம்.

**எதிர்நீச்சல்**

**பொருள்-** எதிர்த்துப் போராடுதல் ∴ சவால்களைச் சமாளித்து முன்னேறுதல்.

**வாக்கியம்** - வாழ்க்கையில் எத்தனைத் தோல்விகள் வந்தாலும் மனந்தளராமல் எதிர்நீச்சல் போட்டு வெற்றியடைய வேண்டும்.

**கட்டுக்கோப்பு**

**பொருள்** - உறுதியான பிணைப்பு ∴ ஒன்றிணைந்து

**வாக்கியம்** - கால்பந்து அணியிலுள்ள அனைவரும் கட்டுக்கோப்புடன் விளையாடினால் உறுதியாக வெற்றி அடையலாம்.

**கடன் கழித்தல்**

**பொருள்** - வேண்டா வெறுப்பாகச் செய்தல்.

**வாக்கியம்** - பள்ளிப்பாடங்களைச் செய்யும்போது விருப்பமில்லாமல் கடமைக்காகச் செய்யக் கூடாது.

**கண்ணாயிருத்தல்**

**பொருள்** - சிதறாத கவனத்துடன் இருத்தல் ∴ குறியாக இருத்தல் ∴ முழுக்கவனத்துடன் இருத்தல்

**வாக்கியம்** - குழந்தை தூங்கும்போது, அதன் தாய் கண்ணாயிருந்து கவனமாகப் பார்த்துக்கொண்டாள்.

**குரல்கொடுத்தல்**

**பொருள்** - ஆதரவு தெரிவித்தல்.

**வாக்கியம்** - அணுஆயுத ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இந்தியாவிற்குச் சாதகமாக இனி அமெரிக்கா அனைத்துலக அரங்கில் குரல் கொடுக்கும் என நம்பலாம்.

**கைஓங்குதல்**

**பொருள்** - செல்வாக்கு மிகுதல்.

**வாக்கியம்** - முதல் பாதியில் தோல்வியை நோக்கிய அணி இரண்டாம் பாதியில் கை ஓங்கியது.

**மெய்மறத்தல்**

**பொருள் -** ஒன்றில் ஆழ்ந்து இருத்தல்.

**வாக்கியம்** - கண்ணதாசனின் பாடலைக் கேட்டு மெய்மறந்து போனேன்.

**வலைவீசுதல்**

**பொருள்** - தேடிக் கண்டுபிடிக்க முனைதல் ∴ ஒருவரை வசப்படுத்த முயலுதல்.

**வாக்கியம்** - கொலை செய்துவிட்டுத் தப்பிச்சென்ற கொலைகாரர்களைக் காவல்துறை வலைவீசி தேடியது.

**வாயடைத்துப் போதல்**

**பொருள்** - அதிர்ச்சியாக ∴ ஆச்சரியத்தால் பேச முடியாமல் போதல்.

**வாக்கியம்** - நான் திருடவில்லை என்று கூறிய திருடனிடம் அவன் திருடியபோது எடுத்த புகைப்படத்தைக் காட்டியபோது வாயடைத்துப் போனான்.

**மேலும் சில:**

- ✓ குரல்கொடுத்தல்
- ✓ கூழைக்கும்பிடு
- ✓ கைஓங்குதல்
- ✓ கைத்தூக்கிவிடுதல்
- ✓ சரிகட்டுதல்
- ✓ கைச்சுத்தம்
- ✓ சராமாரியாக
- ✓ சொந்தக்காலில் நிற்றல்
- ✓ பூசிமெழுகுதல்
- ✓ வாரி இறைத்தல்
- ✓ விடிவுக்காலம்

**மரஞ்செடிகொடிகளின் தொகுப்புப் பெயர்கள்**

- ❖ மாஞ்சோலை
- ❖ பூஞ்சோலை
- ❖ வேலங்காடு

- ❖ புளியந்தோப்பு
- ❖ தென்னந்தோப்பு
- ❖ சவுக்குத் தோப்பு
- ❖ கொய்யாத் தோப்பு
- ❖ சோளக் கொல்லை
- ❖ கம்பங்கொல்லை
- ❖ வாழைத் தோட்டம்
- ❖ தேயிலைத்தோட்டம்
- ❖ வெற்றிலைத்தோட்டம்
- ❖ மிளகாய்த் தோட்டம்
- ❖ மல்லிகைத் தோட்டம்

**மரஞ்செடி கொடிகளின் உறுப்புப்பெயர்கள்**

- ✓ மாவிலை
- ✓ தாழைமடல்
- ✓ அகத்திக்கீரை
- ✓ பனையோலை
- ✓ தினைத்தாள்
- ✓ தென்னங்கீற்று
- ✓ வேப்பந்தழை
- ✓ வெங்காயத்தாள்
- ✓ சோளத்திரட்டு
- ✓ கம்பத்தட்டு
- ✓ வாழையிலை
- ✓ தேயிலை
- ✓ வெற்றிலை
- ✓ கீரைத்தண்டு
- ✓ கறிவேப்பிலை

**பொருள்களின் தொகுப்புப் பெயர்கள்**

- ➢ ஆட்டு மந்தை
- ➢ மாட்டு மந்தை
- ➢ யானைக் கூட்டம்
- ➢ வீரர் படை
- ➢ வைக்கோல் போர்
- ➢ சாவிக்கொத்து

- திராட்சைக்குலை
- தென்னங்குரும்பை
- விறகுக்கட்டு
- கற்குவியல்
- நாற்று முடி
- நூல் உருண்டை
- நெற்குவியல்

**காய்களின் இளநிலை**

- தென்னங்குரும்பை
- மாவடு
- வாழைக்காய்
- அவரைப்பிஞ்சு

**விலங்குகளின் ஒலிக்குரிய பெயர்கள்**

- யானை பிளிறும்
- சிங்கம் முழங்கும்
- நரி ஊளையிடும்
- குதிரை கனைக்கும்
- கழுதை கத்தும்
- நாய் குரைக்கும்
- கரடி உறுமும்
- பூனை சீறும்
- மாடு கத்தும்
- எருது எக்காளமிடும்
- பன்றி உறுமும்

**பறவைகளின் ஒலிக்குரிய பெயர்கள்**

- ✓ ஆந்தை அலறும்
- ✓ மயில் அகவும்
- ✓ குயில் கூவும்
- ✓ கிளி பேசும்
- ✓ காகம் கரையும்
- ✓ கோழி கொக்கரிக்கும்
- ✓ வண்டு முரலும்
- ✓ எலி கீச்சிடும்

**விலங்குகளின் இளமைப் பெயர்கள்**

- ஆட்டுக்குட்டி
- அணிற்பிள்ளை
- குரங்குக்குட்டி
- கழுதைக் குட்டி
- குதிரைக் குட்டி
- கீரிப்பிள்ளை
- சிங்கக் குருளை
- நாய்க்குட்டி
- பன்றி பறழ்
- புலிக் குட்டி
- மான் கன்று
- யானைக் கன்று
- கோழிக் குஞ்சு
- மீன் குஞ்சு
- காக்கைக் குஞ்சு

**பொருளுக்கேற்ற வினை**

- ❖ சிற்பி செதுக்குகிறார்
- ❖ ஆசிரியர் எழுதுகிறார்
- ❖ கவிஞர் இயற்றுகிறார்
- ❖ பாடகர் பாடுகிறார்
- ❖ ஓவியர் வரைகிறார்
- ❖ ஓடு போட்டான்
- ❖ கூரை வேய்ந்தான்
- ❖ வீடு கட்டினான்
- ❖ சுவர் வைத்தான்
- ❖ பானை வனைகிறான்
- ❖ முறுக்குத் தின்கிறான்
- ❖ ஓலை முடைகிறான்
- ❖ தண்ணீர் குடிக்கிறான்
- ❖ சோறு உண்கிறான்

**விலங்குகளின் இருப்பிடப்பெயர்கள்**

- ஆட்டுப்பட்டி
- மாட்டுத்தொழுவம்
- குதிரைக்கொட்டில்
- கோழிப்பண்ணை
- வாத்துப்பண்ணை

**பெயர்க்கேற்ற வினை**

- ஆப்பம் தின்
- கஞ்சி குடி
- இலை பறி
- ஏர் உழு
- உடம்பில் குத்து
- இளநீர் குடி
- கல் உடை
- களை பறி
- கறிகாய் நறுக்கு
- குங்குமம் பூசு
- சோறு உண்
- தென்றல் வீசும்
- தாள் அடி
- நார் கிழி
- நீர் பருகு
- நூல் எழுது
- படம் வரை
- பாட்டுப் பாடு
- பால் குடி
- பழம் தின்
- பாடல் இயற்று
- மரம் வெட்டு
- விடை எழுது
- விறகு பிள

**உயிரினங்களின் ஆண்பால் பெண்பால் பெயர்கள்**

| **உயிரினம்** | **ஆண்** | **பெண்** |
|---|---|---|
| ஆடு | தகர் | மறி |
| எருமை | கடா | நாகு |
| குரங்கு | கடுவன் | மந்தி |
| நண்டு | அலவன் | பெடை |
| மாடு | ஏறு, காளை | நாகு, ஆ |
| மான் | கலை | பிணை |
| யானை | களிறு | பிடி |
| கோழி | சேவல் | பெட்டை |

**2.பழமொழி**

பழமையான மொழி என்றும் பழுத்த மொழி என்னும் அழைக்கப்படுகிறது. பழமொழிகள் ஒரு சமுதாயத்தில் நீண்ட காலமாகப் புழக்கத்தில் இருந்து வரும் அனுபவக் குறிப்புகள் என்று கூறுவர். பழமை ¸ மொழி என்றும் பழம் ¸ மொழி என்றும் பிரித்துப் பழத்தைப் போன்ற பயனை விளைவிக்கும் மொழி என்றும் கூறுவர். பழமொழிகள் மக்களின் பண்பாட்டுச் சிறப்பையும் உணர்த்தும். பழமொழிகள் அச்சமுதாயத்தினரின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக் கூர்மையையும் எடுத்து விளக்குவதாக அமைகின்றன. இவை முதுமொழிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

**பழமொழிகளை வாக்கியத்தில் அமைத்தல்**

1. **ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு ஆகுமா?** என்பது போல வாழ்க்கைக்குப் பயன்படாத கல்வியால் என்ன பயன்?.

2. தருமி கொண்டு சென்ற பாட்டில் நக்கீரர் குற்றம் கூறிப் பரிசு வழங்கியதைத் தடுத்ததால் அவன் **கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமல் ஆனது**.

3. நாம் சிறுசேமிப்பின் மூலம் சிறுகச்சிறுகச் சேமித்து வந்தால் **சிறுதுளிகள் பெருவெள்ளம்** என்பதற்கேற்ப பெருந்தொகை வந்து சேரும்.

4. கர்ணன் துரியோதனனிடம் காட்டிய நன்றி **உப்பிட்டவரை உயிருள்ளளவும் நினை** என்பதை நினைவூட்டுகிறது.

5. ஒவ்வொரு பெண்ணும் தான் உடுத்தியுள்ள ஆடையைக் காட்டிலும் பிறர் உடுத்தியுள்ள ஆடையில் **இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்பது போல** அழகு இருப்பதாகத் தெரிகிறது.

**மேலும் சில பழமொழிகள்**

- ❖ அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
- ❖ ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.
- ❖ அள்ளிக்கொடுத்தல் சும்மா. அளந்து கொடுத்தால் கடன்.
- ❖ ஆயிரம் பொய் சொல்லி ஒரு திருமணத்தை நடத்தலாம்.

- ❖ இளங்கன்று பயமறியாது.
- ❖ ஈரநாவிற்கு எலும்பில்லை.
- ❖ ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
- ❖ கொல்லன் தெருவில் ஊசி விலைபோகுமா?
- ❖ சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.
- ❖ நாய்க்கு வேலையும் இல்லை நிற்க நேரமுமில்லை.
- ❖ நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
- ❖ பட்டும் பட்டாடையும் பெட்டியிலிருக்கும் காற்காசுக் கந்தை ஓடி உலாவும்.
- ❖ பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்.
- ❖ பூ மலர்ந்து கெட்டது, வாய் விரிந்து கெட்டது.
- ❖ பொய் சொல்லி வாழ்ந்தவனுமில்லை, மெய்சொல்லி கெட்டவனும் இல்லை.
- ❖ போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
- ❖ மல்லாந்து உமிழ்ந்தால் மாரின் மீதுதான் விழும்.
- ❖ வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
- ❖ வாயுள்ள பிள்ளை பிழைக்கும்.
- ❖ விளையும் பயிர் முளையிலே தெரியும்.
- ❖ யானைக்கும் அடி சறுக்கும்.
- ❖ காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
- ❖ திக்கற்றவனுக்கு தெய்வம் தான் துணை.
- ❖ ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?
- ❖ மாமியார் உடைத்தால் மண்கலம், மருமகள் உடைத்தால் பொன்கலம்.
- ❖ ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன் ஆவான்.
- ❖ களவும் கற்று மற.
- ❖ கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு, பாத்திரம் அறிந்து பிச்சை இடு.
- ❖ நல்ல மாட்டுக்கு ஒரு சூடு.
- ❖ ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்.
- ❖ கண்டதைக் கற்க பண்டிதன் ஆவான்
- ❖ அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்.
- ❖ கப்பலே கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே.
- ❖ எறும்பு ஊற கல்லும் தேயும்.
- ❖ சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்.

---

## இ. பிறமொழிச்சொற்களுக்கான தமிழாக்கம்

### பிறமொழிச்சொற்களுக்கான தமிழாக்கம்

தமிழகத்தில் வேற்றுமொழியினரின் ஆட்சி நடைபெற்ற காரணத்தினால் தமிழ்மொழியில் வேற்றுமொழிச் சொற்கள் கலந்தன. அதுமட்டுமல்லாமல் மக்களின்

நாகரிகம், வாழ்க்கைமுறை மாற்றத்தாலும் புதிய புதிய கண்டுபிடிப்புகளினாலும் பிறமொழிச்சொற்கள் தமிழில் கலந்தன. தமிழ்ச்சொற்களிடையே ஆங்கிலம், சமஸ்கிருதம், அரபு, உருது போன்ற பிறமொழிச்சொற்கள் அதிகம் காணப்படுகின்றன. அவற்றிற்குரிய தமிழ்ச்சொற்களை அறிதல் அவசியமாகும்.

**பிறமொழிச்சொற்களுக்கான தமிழ்ச்சொற்கள்**

**சமஸ்கிருதச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| அகங்காரம் | - | ஆணவம், செருக்கு |
| அகதி | - | ஆதரவற்றவர் |
| அகிம்சை | - | ஊறு செய்யாமை |
| அக்கினி | - | நெருப்பு |
| அக்ரஹாரம் | - | பார்ப்பனர் குடியிருப்பு |
| அகிலம் | - | உலகம் |
| அங்கீகாரம் | - | ஏற்பு |
| அசம்பாவிதம் | - | எதிர்பாராதது |
| அசாத்தியம் | - | முடியாமை |
| அசூயை | - | வெறுப்பு |
| அட்டகாசம் | - | குறும்பு |
| அடம் | - | விடாப்பிடி |
| அத்தாட்சி | - | சான்று |
| அதரம் | - | உதடு |
| அதிசயம் | - | வியப்பு |
| அதிபர் | - | உரிமையாளர், தலைவர் |
| அதிர்‘டம் | - | ஆகூழ் |
| அதிருப்தி | - | மனநிறைவின்மை |
| அந்தரம் | - | வானம் |
| அந்தஸ்து | - | மதிப்பு |
| அந்நியோன்னியம் | - | நெருக்கம் |
| அபகரி | - | பறித்தல், பிடுங்கு |
| அபயம் | - | புகலிடம் |
| அபரிமிதம் | - | மிகுதி |
| அபஸ்வரம் | - | வெறுப்பிசை |
| அபாண்டம் | - | பழி |
| அபாரம் | - | பெரிய |
| அபிமானம் | - | அன்பு |
| அபி‘ேகம் | - | நீராட்டு |
| அபூர்வம் | - | அருமை |
| அமானுரீயம் | - | மீ மாந்தரியம் |
| அமோகம் | - | மிகுதி |
| அர்ச்சனை | - | வழிபாடு |

| | | |
|---|---|---|
| அராஜகம் | - | கொடுஞ்செயல் |
| அவகாசம் | - | காலக்கெடு |
| அவதூறு | - | பழி |
| அவஸ்தை | - | துன்பம் |
| அனுகிரகம் | - | அருள் |
| அனுபவம் | - | பட்டறிவு |
| அனுமானம் | - | கருதுகோள் |
| அஸ்திரம் | - | அம்பு |
| அ்'டம் | - | எட்டு |
| ஆக்கிரமிப்பு | - | ஊடுருவதல் |
| ஆகாரம் | - | உணவு |
| ஆட்சேபம் | - | எதிர்ப்பு |
| ஆதங்கம் | - | மனவருத்தம் |
| ஆதர்சனம் | - | துன்பம் |
| ஆதரவு | - | பக்கத்துணை |
| ஆராதனை | - | வழிபாடு |
| இச்சை | - | விருப்பம் |
| இத்யாதி | - | முதலிய |
| ஈனம் | - | தாழ்வு |
| உத்தேசம் | - | தோராயம் |
| உத்வேகம் | - | மனக்கிளர்ச்சி |
| உத்தமம் | - | மிகநன்று |
| உதாசினம் | - | மதியாமை |
| உப்பரிகை | - | மாடி |
| உபந்நியாசம் | - | சொற்பொழிவு |
| உபவாசம் | - | உண்ணாநோன்பு |
| உபாதை | - | வலி |
| ஊதாரி | - | செலவாளி |
| எகத்தாளம் | - | பகடி |
| ஏகோபித்த | - | ஒருமுகமான |
| கபடம் | - | வஞ்சகம் |
| கர்த்தா | - | வினைமுதல் |
| கர்மா | - | வினை |
| கரகம் | - | செம்பு |
| கருணை | - | அருள் |
| கடாட்சம் | - | அருட்கண்பார்வை |
| கல்யாணம் | - | திருமணம் |
| கன்னிகாதானம் | - | மகட்கொடை |
| கிருமி | - | நுண்ணுயிர் |

| | | |
|---|---|---|
| கிரகம் | - | வீடு |
| குந்தகம் | - | இடையூறு |
| குமாரத்தி | - | மகள் |
| கும்பாபி‘ேகம் | - | குடமுழுக்கு |
| கைங்கர்யம் | - | பணிவிடை |
| கோத்திரம் | - | குலம் |
| கோபம் | - | சினம் |
| சக்தி | - | ஆற்றல் |
| சத்யம் | - | உண்மை |
| சந்ததி | - | வாரிசு |
| சபா | - | அவை |
| சர்ப்பம் | - | பாம்பு |
| சமர்ப்பணம் | - | ஒப்படைப்பு |
| சர்வகலாசாலை | - | பல்கலைக்கழகம் |
| சலனம் | - | அசைவு |
| சபாநாயகர் | - | அவைத்தலைவர் |
| சாம்ராஜ்ஜியம் | - | பேரரசு |
| சாஸ்திரம் | - | நூல் |
| சிரு‘டி | - | படைப்பு |
| சீலம் | - | ஒழுக்கம் |
| சுகந்தம் | - | நறுமணம் |
| சுதந்திரம் | - | விடுதலை |
| சுபதினம் | - | நன்னாள் |
| சுவீகாரம் | - | தத்து |
| சொர்க்கம் | - | துறக்கம் |
| சோதனை | - | சிற்றாய்வு |
| சௌபாக்யவதி | - | திருநிறைச்செல்வி |
| ஞானம் | - | மெய்யறிவு |
| தண்டனை | - | ஒறுத்தல் |
| தயவு | - | கருணை |
| தாகம் | - | வேட்கை |
| தாது | - | துகள் |
| திடம் | - | உறுதி |
| தியானம் | - | மனவழிபாடு |
| திரு‘டி | - | கண்ணேறு |
| தீவிரவாதி | - | வன்முனைப்பர் |
| துவே‘ம் | - | வெறுப்பு |
| து‘பிரயோகம் | - | தவறாகப்பயன்படுத்துதல் |
| தேதி | - | நாள் |

| | | |
|---|---|---|
| நரகம் | - | அளறு |
| தோ‘ம் | - | குற்றம் |
| நட்சத்திரம் | - | நாள்மீன் |
| நஷ்டம் | - | இழப்பு |
| நாசி | - | மூக்கு |
| நிச்சயம் | - | உறுதி |
| நிமிஷம் | - | மணித்துளி |
| நியதி | - | முறை |
| நியாயம் | - | நடுநிலை |
| நிவாரணி | - | போக்கி |
| பக்தி | - | இறையன்பு |
| பட்சணம் | - | தின்பண்டம் |
| பத்திரம் | - | ஆவணம் |
| பத்திரிக்கை | - | இதழ் |
| பந்தா | - | பகட்டு |
| பந்தி | - | வரிசை |
| பரதேசி | - | அயல்நாட்டார் |
| பரஸ்பரம் | - | ஒருவருக்கொருவர் |
| பரிணாமம் | - | வளர்ச்சி |
| பலாத்காரம் | - | வன்முறை |
| பவித்ரம் | - | தூய்மை |
| பாசம் | - | மீ அன்பு |
| பாதகம் | - | கொடுமை |
| பாமரன் | - | கல்வியறிவிலி |
| பார்யாள் | - | மனைவி |
| பிரக்ஞை | - | தன்னினைவு |
| பிரகடனம் | - | அறிவிப்பு |
| பிரசன்னம் | - | தோன்றுதல் |
| பிரதமர் | - | தலைமை அமைச்சர் |
| பிரதட்சணம் | - | சுற்றிவரல் |
| பிரதிநிதி | - | சார்பாளர் |
| பிரயத்தனம் | - | முயற்சி |
| பிரயோகம் | - | செலுத்துதல் |
| பிராப்தம் | - | விதி |
| பிராயச்சித்தம் | - | கழுவாய் |
| பிரார்த்தனை | - | தொழுகை |
| பூர்த்தி | - | நிறைவு |
| பூஜ்யம் | - | சுழி |
| பைத்தியம் | - | பித்து |

| | | |
|---|---|---|
| போதனை | - | அறிவுறுத்தல் |
| மிருகம் | - | விலங்கு |
| மித்திரர் | - | நண்பர் |
| முகூர்த்தம் | - | நல்லநேரம் |
| மூர்ச்சை | - | மயக்கம் |
| ராட்சசி | - | அரக்கி |
| ராஜா | - | அரசன் |
| ராஜினாமா | - | பணி விலகல் |
| ரோகம் | - | நோய் |
| ரோமம் | - | மயிர் |
| ரோசம் | - | சீற்றம் |
| ரௌத்திரம் | - | சினம் |
| வயது | - | அகவை |
| விக்ரகம் | - | சிலை |
| விசேஷம் | - | சிறப்பு |
| விதவை | - | கைம்பெண் |
| விபத்து | - | தீ நேர்ச்சி |
| விமானம் | - | வான்ஊர்தி |
| வியாபாரி | - | வணிகர் |
| விஸ்வரூபம் | - | பேருரு |
| விஷம் | - | நஞ்சு |
| வேதம் | - | மறை |
| ஜோதிடம் | - | நிமித்திகம் |
| ஸ்தாபகர் | - | நிறுவனர் |
| ஸ்நானம் | - | நீராடுதல் |

**கன்னடச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள்**

அக்கறை – கவனம்

அக்கடா – வாளா

**தெலுங்குச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள்**

ஆஸ்தி – செல்வம்

ஏராளம் - மிகுதி

கேப்பை – கேழ்வரகு

சந்தடி - இரைச்சல்

சாகுபடி – பயிரிடுதல்

சொந்தம் - உரிமை

தாராளம் - மிகுதி

தாறுமாறு – ஒழுங்கின்மை

தொந்தரவு – தொல்லை

நிம்மதி – கவலையின்மை

எச்சரிக்கை – விழிப்பாக இருத்தல்

**ஆங்கிலச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| அக்கவுண்ட்ஸ் | - | வரவுசெலவுக்கணக்கு |
| ஆக்ஷன் | - | நடிப்பு |
| ஏஜெண்டு | - | முகவர் |
| ஏர்ஹோஸ்டஸ் | - | வானூர்திப்பணிப்பெண் |
| ஏர்ப்போர்ட் | - | வானூர்தியகம் |
| அபார்ட்மெண்ட் | - | குடியிருப்பு |
| ஆர்ட்டிஸ்ட் | - | கலைஞர் |
| ஆடிட் | - | தணிக்கை |
| பெட் | - | பந்தயம் |
| பூட்ஸ் | - | மூடுகாலணி |
| பாட்டில் | - | புட்டி |
| பட்ஜெட் | - | வரவு செலவு |
| காண்டீன் | - | உணவகம் |
| கிளைமாக்ஸ் | - | உச்சக்கட்டம் |
| காபி | - | குழம்பி |
| டீலர் | - | விற்பனையாளர் |
| டைவர்ஸ் | - | மணவிலக்கு |
| டிரைவர் | - | ஓட்டுநர் |
| ஃபைல் | - | கோப்பு |
| ஹீரோ | - | நிகரில் தலைவன் |
| ஜாம் | - | பழக்கூழ் |
| ஐஸ்கிரீம் | - | பனிக்கூழ் |
| மேடம் | - | மாதரீர் |
| நோட்டீஸ் | - | குறிப்பாணை |
| பௌடர் | - | நறுஞ்சுண்ணம் |
| பிராக்டிகல் | - | செயல்முறை |
| சூட்கேஸ் | - | கைப்பெட்டி |
| டைப்பிஸ்ட் | - | தட்டச்சர் |
| விசில் | - | சீழ்க்கை |

**பிறஅயல்மொழிச்சொற்களுக்கான தமிழ்ச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| அகஸ்மாத் | - | எதிர்பாராமல் |
| ஆசாமி | - | தனிமாந்தன் |
| கச்சாப்பொருள் | - | அடிப்படைப்பொருள் |
| சர்க்கார் | - | அரசு |
| சவடால் | - | வாய்ப்பேச்சு |
| சிபாரிசு | - | பரிந்துரை |
| நாஸ்தா | - | காலையுணவு |
| பங்களா | - | வளமனை |
| பஜார் | - | கடைவீதி |
| பேட்டா | - | அன்பளிப்பு |
| மகசூல் | - | விளைவு |
| மாமூல் | - | வழக்கம் |
| முகாம் | - | பாசறை |
| ரஸ்தா | - | சாலை |
| ரூபாய் | - | வெண்பொற்காசு |
| ஜவான் | - | படைவீரன் |
| ஜன்னல் | - | காலதர் |
| கிஸ்தி | - | வரி |
| சாயா | - | தேநீர் |
| திவான் | - | அமைச்சர் |

---------------------------------------------

## ஈ. வழுஉச்சொற்கள் நீக்குதல்

**வழுஉச்சொற்கள் நீக்குதல்**

இலக்கணமுறையின்றி பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.

**வகைகள்**

வழு ஏழுவகைப்படும். அவை,

1.திணைவழு

2.பால்வழு

3.இடவழு

4.காலவழு

5.வினாவழு

6.விடைவழு

7.மரபுவழு

என்பனவாகும்.

**1. திணைவழு**

உயர்திணை, அஃறிணை என்னும் இருவகைத் திணைகளும் ஒன்றோடொன்று மயங்கி (மாறி) வருவது திணைவழுவாகும்.

(எ.டு.)

**பூங்கோதை வந்தது** – உயர்திணை எழுவாய் அஃறிணை பயனிலையைக் கொண்டு வருவது. இது தவறானது. **பூங்கோதை வந்தாள்** என்பதே சரியானது.

**பசு வந்தான்** - அஃறிணை எழுவாய் உயர்திணைப் பயனிலையைக் கொண்டு வந்தது. இது தவறானது. **பசுவந்தது** என்பதே சரியானது.

**2. பால்வழு**

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐவகைப் பாலும் ஒன்றோடொன்று மயங்கி வருவது பால்வழுவாகும்.

(எ.டு.)

**மாறன் வந்தாள்** - ஆண்பால் எழுவாய் பெண்பால் பயனிலை கொண்டு முடிந்ததால் இது வழுவாயிற்று. **மாறன் வந்தான்** என்பதே சரியானது.

**தேன்மொழி வந்தான்** - பெண்பால் எழுவாய் ஆண்பால் பயனிலை கொண்டு வந்தது. இது தவறானது. **தேன்மொழி வந்தாள்** என்பதே சரியானது.

**மாணவன் தந்தார்** – ஆண்பால் எழுவாய் பலர்பால் பயனிலை கொண்டு முடிந்தது. ஆதனால் வழுவாயிற்று. **மாணவன் தந்தான்** என்பதே சரியானது.

**மாடுகள் மேய்ந்தது -** பலவின் பால் எழுவாய் ஒன்றன்பால் பயனிலை கொண்டு முடிந்ததால் வழுவாயிற்று. **மாடுகள் மேய்ந்தன** என்பதே சரியானது.

**ஆடு மேய்ந்தன** – ஒன்றன் பால் எழுவாய் பலவின் பால் பயனிலை கொண்டு முடிந்தது. **ஆடு மேய்ந்தது** என்பதே சரியானது.

**3. இடவழு**

தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகை இடமும் ஒன்றோடொன்று மயங்கி வருவது இடவழுவாகும்.

(எ.டு.)

**நான் உண்டாய்** - தன்மை ஒருமைப் பெயர் முன்னிலைப் பயனிலையைக் கொண்டு முடிந்ததால் வழுவாயிற்று. **நான் உண்டேன்** என்பதே சரியானது.

**நீங்கள் உண்டோம்** - முன்னிலை பன்மைப் பெயர் தன்மைப் பயனிலையைக் கொண்டு முடிந்ததால் வழுவாயிற்று. **நீங்கள் உண்டீர்கள்** என்பதே சரியானது.

**அவர்கள் உண்டீர்கள்** - படர்க்கை பன்மைப்பெயர் முன்னிலைப் பயனிலையைக் கொண்டு முடிந்தது வழுவாயிற்று. **அவர்கள் உண்டார்கள்** என்பதே சரியானது.

**4. காலவழு**

இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைக் காலமும் ஒன்றோடொன்று மயங்கி வருவது காலவழுவாகும்.

(எ.டு.)

**நான் நேற்று வருவேன்** - நேற்று என்பது இறந்தகாலப் பெயர்- வருவேன் என்னும் எதிர்கால வினையைக்கொண்டு முடிந்ததால் வழுவாயிற்று. **நான் நேற்று வந்தேன்** என்பதே சரியானது.

**இன்று வருவேன்** - இன்று என்னும் நிகழ்காலப்பெயர் வருவேன் என்னும் எதிர்கால வினைமுற்றைக் கொண்டு முடிந்ததால் வழுவாயிற்று. **இன்று வருகிறேன்** என்பதே சரியானது.

**நாளை வந்தேன்-** நாளை என்னும் எதிர்காலப்பெயர் வந்தேன் என்னும் எதிர்கால வினைமுற்றைக்கொண்டு முடிந்ததால் வழுவாயிற்று. **நாளை வருவேன்** என்பதே சரியானது.

**5. வினாவழு**

அறுவகை வினாக்கள் மயங்கி வருவது வினாவழுவாகும்.

(எ.டு.)

**கறக்கின்ற மாடு பசுவோ? காளையோ?**- கறக்கின்ற என்னும் குறிப்புச்சொல்லில் கறக்கின்ற மாடு பசு என்பது உறுதியாகியது. மீண்டும் காளையோ? என ஐயம் கொண்டு வினவுவது வழுவாகும். மேலும் பசுவோ காளையோ கறப்பதில்லை. எனவே ஐயவினா வினவியது வழுவாகும்.

**6. விடை வழு**

வினாவிற்குப் பொருந்தா விடை வந்தால் வினாவழு எனப்படும். இதனால் விடைவழு எனப்படும்.

(எ.டு.) **பருப்பு வாங்கி வருவாய்** என்னும் வினாவிற்கு **விலை அதிகம்** என்று விடை பகர்தல் விடைவழுவாகும்.

**7. மரபு வழு**

மரபுத்தொடர் மயங்கி வருவது மரபுவழுவாகும். (எ.டு.) **குயில் குளறும்** - **குயில் கூவும்** என்பதே சரியானது. **தென்னை இலை - தென்னை ஓலை** என்பதே சரியானது.

**அன்றாட வழக்கத்தில் இருக்கக்கூடிய வழுஉச்சொற்களும் திருத்தங்களும்**

1. அமக்களம் – அமர்க்களம்
2. ஐநூறு – ஐந்நூறு
3. கருப்பு – கறுப்பு
4. சோம்பேரி – சோம்பேறி
5. கைத்தரி – கைத்தறி
6. சதை – தசை

7. தேனீர் – தேநீர்
8. நஞ்சை – நன்செய்
9. புஞ்சை – புன்செய்
10. பனிரெண்டு – பன்னிரண்டு
11. பெரிசு – பெரிது
12. வல்லுனர் – வல்லுநர்
13. வெத்திலை – வெற்றிலை
14. காத்து – காற்று
15. பதட்டம் – பதற்றம்
16. ஈர்கோலி – ஈர்க்கொல்லி
17. உசிர் – உயிர்
18. ஒட்டரை – ஒட்டடை
19. வெட்பம் – வெப்பம்
20. வெள்ளிரி – வெள்ளரி
21. வத்தல் – வற்றல்
22. வெண்ணை – வெண்ணெய்
23. ரக்கிரி – கீரை
24. பொண்டாட்டி – பெண்டாட்டி
25. பதனி – பதநீர்
26. நந்நூல் – நன்னூல்
27. திருவாணி – திருகாணி
28. எடஞ்சல் – இடைஞ்சல்
29. அவரக்கா – அவரைக்காய்
30. ஆத்தங்கரை – ஆற்றங்கரை
31. இழனி – இளநீர்
32. கொரவளி – குரல்வளை
33. காக்கா – காக்கை
34. சோத்தை – சோற்றை
35. சீலை – சேலை
36. தவக்களை – தவளை
37. தின்னீர் – திருநீறு
38. தெம்மாங்கு – தென்பாங்கு
39. பேரன் – பெயரன்

40. புழக்கடை – புறக்கடை
41. முந்தாணி – முன்றானை
42. மனத்தக்காளி – மணித்தக்காளி
43. வண்ணாத்திப்பூச்சி – வண்ணத்துப்பூச்சி
44. சமயல் – சமையல்
45. சுவற்றில் – சுவரில்
46. வெங்கலம் – வெண்கலம்
47. வெண்ணீர் – வெந்நீர்
48. சீயக்கா – சிகைக்காய்
49. தலகாணி – தலையணை
50. புட்டு – பிட்டு
51. அருவாமனை – அரிவாள்மனை
52. அருகாமையில் – அருகில்
53. ஒம்பது – ஒன்பது
54. குடக்கூலி – குடிக்கூலி
55. புண்ணாக்கு – பிண்ணாக்கு
56. கோர்த்தல் – கோத்தல்
57. சில்லரை – சில்லறை
58. எண்ணை – எண்ணெய்
59. முன்னூறு – முந்நூறு
60. வெய்யில் – வெயில்
61. தடுமாட்டம் – தடுமாற்றம்
62. பயிறு – பயறு
63. ஒருவள் – ஒருத்தி
64. அடமழை – அடைமழை
65. கோடாலி – கோடரி
66. அறுவறுப்பு – அருவருப்பு
67. அண்ணாக்கயிறு – அரைஞாண்கயிறு
68. இடதுகை – இடக்கை
69. கருவேப்பிலை – கறிவேப்பிலை
70. சிகப்பு – சிவப்பு
71. பாவக்காய் – பாகற்காய்
72. முழுங்கு – விழுங்கு
73. கம்மாய் - கண்வாய்

74. காச்சல் - காய்ச்சல்
75. கேவுரு - கேழ்வரகு
76. தொவையல் - துவையல்

**பயிற்சி – 2**

1. விளா நோகச் சிரித்தான்.
   (விடை) விலா நோகச் சிரித்தான்.
2. கிணர்ரில் பித்தலைத் தவழை விழுந்துவிட்டது.
   (விடை) கிணற்றில் பித்தளைத் தவலை விழுந்துவிட்டது.
3. பயிரைப் பாழாக்குகின்ற புளுபூச்சிகளைக் கொள்ளும் மருந்து இது.
   (விடை) பயிரைப் பாழாக்குகின்ற புழுபூச்சிகளைக் கொல்லும் மருந்து இது.
4. மழைமீது மலை பொலிந்ததால் ஆரில் வெல்லம் பெறுக்கெடுத்தது.
   (விடை) மலைமீது மழை பொழிந்ததால் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தது.
5. கூறைமேல் ஏரிக் கோளி கூவியது.
   (விடை) கூரைமேல் ஏறிக்கோழி கூவியது.
6. யாணையைக் கன்ட சிருவன் நடுநடுங்கி கீலே விளுந்தான்.
   (விடை) யானையைக் கண்ட சிறுவன் நடுநடுங்கி கீழே விழுந்தான்.
7. காழை நேரத்தில் நீள மழர் சூடி மகில்ந்தாழ்.
   (விடை) காலை நேரத்தில் நீல மலர் சூடி மகிழ்ந்தாள்.

-----------------------------------------

## உ.இலக்கணக் குறிப்பு

**இலக்கணக் குறிப்பு**

தமிழ் மொழிசிறந்த இலக்கண அமைப்புகளையுடையது. ஒவ்வொரு சொல்லும், தொடரும் இலக்கண வரையறைக்குட்பட்டே அமைகிறது. அதற்கான சில இலக்கணக் குறிப்புகள் சிலவற்றைக் காண்போம்.

**1. வியங்கோள் வினைமுற்று**

- ✓ வாழ்த்துதல், வைதல், ஏசுதல் முதலிய பொருள்களில் வருவது வியங்கோள் வினைமுற்று எனப்படும்.
- ✓ இது பெரும்பாலும் க, இய, இயர் என்னும் விகுதிகளில் ஏதேனும் ஒன்றை இறுதியில் பெற்று முடியும்.

(எ.டு.) வாழ்க,வாழிய,வாழியர்
செய்யற்க (எதிர்மறை வியங்கோள் வினைமுற்று)

**2. வினையாலணையும் பெயர்**

- ✓ ஓர் வினைச்சொல் வினையைக் குறிக்காமல் இவ்வினையைச் செய்தவரைக் குறிப்பது வினையாலணையும் பெயர் எனப்படும்.
  (எ.டு.) ஓடியவன் நின்றான்.

- ✓ இதில் ஷஓடுதல்' என்பதுவினை. ஆனால் குறிப்பால் ஓடுதலாகிய வினையைச் செய்தவரைக் குறித்து நின்றது.

**3. தொழிற்பெயர்**

- ✓ ஆடுதல், பாடுதல், ஓடுதல், பேசுதல், நடத்தல், சிரித்தல், அழுதல் இவைகளைப்போல ஒன்றன் தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.
- ✓ இவை பெரும்பாலும் ஷதல்', ஷஅல்' என்னும் விகுதிகளை இறுதியில் பெற்று முடியும்.

**4. இரட்டைக் கிளவி**

- ✓ ஒருசொல் இரண்டு முறை அடுக்கி வரும்.
- ✓ பிரிந்தால் பொருள் தராது ஒலிக்குறிப்புகளாகவே வரும்.

(எ.டு.) சடசட என்று முறிந்தது
கலகல வெனச் சிரித்தாள்

**5. அடுக்குத் தொடர்**

- ✓ ஒருசொல் இரண்டு, மூன்று, நான்கு வரைஅடுக்கி வரும். பிரித்தால் பொருள் தரும்.
- ✓ விரைவு, அச்சம், கோபம், மகிழ்ச்சி முதலிய காரணம் பற்றிவரும்.
- ✓ இதுவே அடுக்குத் தொடர் எனப்படும்.

(எ.டு.) ஓடு ஓடு - விரைவு
பாம்பு! பாம்பு! - அச்சம்
ஒழிக! ஒழிக! - கோபம்
நன்று! நன்று! – உவகை

**6.உரிச்சொற்றொடர்**

- ✓ உரிச்சொற்களைப் பிறதொடர்வது
- ✓ (எ.டு.) நனிதின்றான், சாலச்சிறந்தது, கடிமலர், மாநகர்

**உரிச்சொல் உருபுகள்**

சால, உறு, தவ, நனி, கூர், கழி, உரு, குரு. மல்லல், ஏ, மழ, குழ. கதழ், துனை, தட, கய, நனி, வம்பு, மாதர், கலி, கழுமு, வியல், வியன், நாம, பே, வய, துய. ஐவ, எறுழ், கடி

**7.ஈறுகெட்டஎதிர்மறைப் பெயரெச்சம்**

- ✓ எதிர்மறைப் பொருளைத் தரும் பெயரெச்சத்தின் ஈற்றெழுத்து கெட்டு வருவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும்.

(எ.டு.) பாடாமனிதன்

பாடாத மனிதன் என்பது உண்மையான வடிவமாகும்.

இறுதியில் உள்ள ஷத' என்னும் எழுத்து கெட்டு நின்று அதே பொருளைத் தருகிறது.

**மேலும் சிலசான்றுகள்**

செல்லாக்கடல், பேசாமடந்தை, தேடாச் செல்வம், உண்ணாப்பசு, நில்லாமனிதன், காணாஊமை, ஓடாப் பையன், பூட்டாவீடு, செலுத்தா ஓடம்.

**8. பண்புத்தொகை**

- ❖ வண்ணம், வடிவு, சுவை. அளவு ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு பண்புக்கும் அதனால் பொருள் தழுவப்படும் பெயர்ச் சொல்லுக்கும் நடுவில் ஷஆகிய' என்னும் உருபு மறைந்து வந்தால் அது பண்புத்தொகை.
- ❖ பெரும்பாலும் ஷமை' விகுதி பெற்றே வரும்.
    - ▪ (எ.டு.) வெண்டாமரை - வெண்மை தாமரை.
  - ○ இதில் ஷவெண்மை' என்னும் பண்பின் பெயர் வந்துள்ளது.
- ❖ **மேலும் சில**:
  - ○ கருங்கடல், கடுஞ்சொல், செஞ்சரம், செந்தாமரை, வெஞ்சினம், பைங்கால், பைங்கூந்தல், கடுங்குளிர், கார்கூந்தல்.

**9. இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

- ❖ பொதுப் பெயரோடு சிறப்புப் பெயராவது, சிறப்புப் பெயரோடு பொதுப் பெயராவது என இரு பெயர்கள் இணைந்து வருவது இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாகும்.
- ❖ பொதுப் பெயருக்கும் சிறப்புப் பெயருக்கும் நடுவே ஷஆகிய' என்னும் பண்புருபு மறைந்து வரும்.

(எ.டு.) அன்னப்பறவை - அன்னமாகிய பறவை

அன்னம் - சிறப்புப்பெயர்

பறவை - பொதுப்பெயர்

ஆகிய - பண்புருபு

- ❖ **மேலும் சில**: சாரைப்பாம்பு, வாழைமரம், பலாப்பழம், பாவேந்தர் பாரதிதாசனார், முல்லைக்கொடி.

**10.வினைத்தொகை**

- ❖ காலம் காட்டும் இடைநிலை, விகுதி முதலிய வினை உருபுகள் பெயரெச்சத்தில் மறைந்து வருவது.
- ❖ நிகழ் காலம், இறந்த காலம், எதிர் காலம் ஆகிய மூன்று காலங்களையும் மறைமுகமாய் உணர்த்தும்.
- ❖ இரண்டுதொகைச் சொற்களில் முதலில் நிற்பது.

❖ வினைச் சொல்லாகவும் அடுத்து உள்ளது பெயர்ச் சொல்லாகவும் இருக்கும்.

(எ.டு.) ஊறுகாய்

ஊறு- வினைச்சொல்

காய் - பெயர்சொல்

ஊறியகாய் - இறந்தகாலம்

ஊறுகின்றகாய் - நிகழ்காலம்

ஊறும் காய் - எதிர்காலம்

**மேலும் சில :** சுடுதண்ணீர், செல்விருந்து, எழுஞாயிறு, வீழ் அருவி

**11.உம்மைத்தொகை**

❖ எண்ணல். எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் பெயர்களுடன் மற்றொருசொல் வந்து சேரும்போது அவற்றின் இடையிலும் இறுதியிலும் ஷஉம்'என்னும் இடைச்சொல் மறைந்து வருவது.

(எ.டு.) இரவுபகல் - இரவும் பகலும்

**மேலும் சில:** வெற்றிலைபாக்கு, பொறிகடலை, அவரை துவரை, நூற்று மூன்று, சேர சோழ பாண்டியர்

**12.உவமைத்தொகை**

❖ உவமச் சொல்லுடன் உமமேயச் சொல் சேர்ந்து வரும் பொழுது இடையில் 'போல' என்னும் உவம உருபு மறைந்து வருவது உவமைத்தொகை.

❖ (எ.டு.) பவளவாய்

- பவளம் போன்றவாய்

மேலும் சில: பால்நிலா, கயல்விழி, தாமரைமுகம், பொற்பாதம், ஊசியிலை, வேல்விழி, கார் கூந்தல், மையிருட்டு, மலரடி, கல்நெஞ்சம்.

**13. வேற்றுமைத்தொகை**

✓ ஆல், கு, இன்,அது,கண் ஆகிய வேற்றுமை உருபுகளில் ஒன்று மறைந்து வருவது (எ.டு.) வீடு கட்டினான்

- வீட்டைக்கட்டினான்- ஷஐ'உருபு மறைந்து வந்துள்ளது.

✓ பால்பருகினான்- பாலைப் பருகினான்- (ஐ) -இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது

✓ பொற்குடம் - பொன்னால் ஆன குடம்- (ஆல்) - 3ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது

✓ குலவேந்தன் - குலத்திற்குவேந்தன்- (கு) - 4ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது.

✓ விழிப்புனல்- விழியின் புனல் - (இன்) - 5ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது.

- ✓ மலையுச்சி ஷ மலையினதுஉச்சி’ (அது) - 6 ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது
- ✓ மாடப்புறா- ஷமாடத்தின்கண் புறா’ (கண்) - 7 ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது.

**14.பெயரெச்சம்**

- ✓ ஒரு வினைமுற்றுச்சொல் முற்றுப்பெறாமல் இன்னொரு பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது பெயரெச்சம் ஆகும்.
- ✓ (எ.கா) வந்த பறவை
  சென்ற பையன்

**15.வினையெச்சம்**

- ✓ ஒரு வினைமுற்றுச்சொல் முற்றுப்பெறாமல் எஞ்சி நின்று மற்றொரு வினைமுற்றுச்சொல்லைக் கொண்டு முடிவது வினையெச்சம் ஆகும்.
- ✓ (எ.கா) வந்து சென்றான்
  பாடி ஆடினாள்

**16. ஆகுபெயர்**

- ✓ ஆகு பெயர் எனப்படுவதுஇ ஒரு சொல் அதன் பொருளைக் குறிக்காமல் அச்சொல்லோடு தொடர்புடைய வேறு ஒரு பொருளைக் குறிப்பது.
- ✓ ஒன்றினது இயற்பெயர் அதனோடு தொடர்புடைய வேறொன்றுக்கு ஆகி வருவது.
- ✓ பெயர்ச்சொல்லின் ஒரு இயல்பாக வருவது.
- ✓ ஆகுபெயர் எல்லாமே பெயர்ச்சொல்.
- ✓ ஆனால்இ பெயர்ச்சொல் எல்லாம் ஆகுபெயராகாது.

எடுத்துக்காட்டுகள்

- ✓ நெல் அறுத்தான் - உண்மையில் அறுக்கப்பட்டது கதிர். நெல் என்பது இங்கு ஆகுபெயர் ஆனது.
- ✓ வெற்றிலை நட்டான் - நடப்பட்டது வெற்றிலைக் கொடி. இங்கு வெற்றிலைக் கொடிக்காக வெற்றிலை ஆகுபெயர் ஆனது.
- ✓ கண் என்னும் சொல் ஆகுபெயராய்க் கண்ணின் பார்வையை உணர்த்தும்.

வகைகள்

ஆகுபெயர்கள் பத்தொன்பது வகைப்படும்.

அவையாவன:

1. பொருளாகு பெயர்
2. சினையாகு பெயர்
3. காலவாகு பெயர்
4. இடவாகு பெயர்
5. பண்பாகு பெயர்
6. தொழிலாகு பெயர்
7. எண்ணலளவையாகு பெயர்
8. எடுத்தலளவையாகு பெயர்
9. முகத்தலளவையாகு பெயர்
10. நீட்டலளவையாகு பெயர்
11. சொல்லாகு பெயர்
12. காரியவாகு பெயர்
13. கருத்தாவாகு பெயர்
14. உவமையாகு பெயர்
15. அடை அடுத்த ஆகுபெயர்
16. தானியாகுபெயர்
17. இருபடியாகு பெயர்
18. மும்மடியாகு பெயர்
19. கருவியாகு பெயர்

**பொருளாகுபெயர்**

முதல் பொருளின் பெயர்இ அதனோடு தொடர்புடைய இன்னொரு பொருளுக்கு ஆகி வருதல்.

எடுத்துக்காட்டு: மல்லிகை போன்ற வெண்மை.

இங்கு மல்லிகைப் பூவுக்காக மரம் வந்தது.

இது சினைக்காகப் பொருள் ஆகியது.

சினையாகு பெயர்

ஒரு சினைப் பொருளின் பெயர் அதன் முதற்பொருளுக்கு ஆகி வருவது சினையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) தலைக்குப் பத்து ரூபாய் கொடு.

இதில் தலை என்னும் சினைப் பொருளின் பெயர்இ பத்து ரூபாய் கொடு என்னும் குறிப்பால் அந்தத் தலையை உடைய மனிதனுக்கு ஆகி வந்துள்ளது.

**காலவாகு பெயர்**

எடுத்துக்காட்டு: மாரி பொழிந்தது. - மழை பொழிந்தது.

சித்திரை வந்தாள். - சித்திரையில் பிறந்தவள் வந்தாள்.

மார்கழி சூடினாள்

**இடவாகு பெயர்**

இடத்தின் பெயர் இன்னொன்றுக்காய் ஆகி வருவது.

எடுத்துக்காட்டு:

இங்கிலாந்து வென்றது.: இங்கு இங்கிலாந்து என்பது இங்கிலாந்தைக் குறிக்காமல்இ இங்கிலாந்துக்காக விளையாடும் இங்கிலாந்து அணியைக் குறித்தது. (அணிக்கு ஆகி வந்தது) இது இடவாகுபெயர்.

உலகம் வியந்தது: இதில் உலகம் என்பது மண்ணுலகத்தைக் குறிக்காமல்இ அதில் வாழும் மக்களைக் குறித்தது. (மக்களுக்கு ஆகி வந்தது). இது இடவாகு பெயர்.

**பண்பாகு பெயர்**

பண்பின் பெயர் அப்பண்பையுடைய பொருளுக்கு பெயராக ஆகி வருவது பண்பாகுபெயர் எனப்படும்.

எடுத்துக்காட்டு:

வீட்டிற்கு வெள்ளை அடித்தான்.: “வெள்ளை“ என்னும் நிறத்தின் பெயர்இ அந்நிறத்தையுடைய சுண்ணாம்புக்கு ஆகி வந்தது. இங்கு “வெள்ளை“ என்பது ஆகு பெயர். இதனை பண்பாகுபெயர் என்பர்.

**தொழிலாகு பெயர்**

புழுங்கல் காய்ந்தது - காய்ந்தது அரிசி புழுக்கியதால்(தொழில்) புழுங்கல் என ஆகியுள்ளது.

**சொல்லாகு பெயர்**

ஏதோ ஒன்றுக்காக சொல் கருவி ஆகி வருவது.

எடுத்துக்காட்டு

இந்தப் பாட்டு என் சிந்தனையைத் தூண்டியது. இங்கே பாட்டின் பொருள்தான் சிந்தனையைத் தூண்டியது. பொருளுக்காக பாட்டு என்ற சொல் கருவி ஆகி வந்தது.

**காரியவாகு பெயர்**

எடுத்துக்காட்டு

எழுத்தாளர் தரமான இலக்கியம் படைக்க வேண்டும். இலக்கியம் என்பது காரியம். இங்கு இலக்கியம் என்பது தரமான சிறுகதைக்கு காரியமாக ஆகி வருகிறது.

**கருத்தாவாகு பெயர்**

கருத்தா - படைத்தவர் கருத்தா.

வைரமுத்துவை வாசி. இங்கு வைரமுத்து எழுதிய கவிதைக்காக வைரமுத்து என்கின்ற கருத்தா ஆகி வருகிறது.

**உவமையாகு பெயர்**

உவமேயத்துக்காக உவமானம் ஆகி வருவது. எடுத்துக்காட்டு

மயில் வந்தாள். இங்கே உண்மையில் வந்தது ஒரு பெண். பெண் என்ற உவமேயத்துக்காக மயில் என்ற உவமானம் ஆகி வருகிறது.

**தானியாகு பெயர்**

தானி என்றால் இடம்.

இடம் என்பது இங்கே ஒரு பொருள் இருக்கின்ற இடத்தைக் குறிக்கின்றது.

எடுத்துக்காட்டு

விளக்கு முறிந்தது.

விளக்கு என்பது காரணப்பெயர். விளக்கம் தரும் சுடரினால்தான் விளக்கு. சுடர் முறியாது. விளக்கம் தருகின்ற தண்டு முறிந்து விட்டது. விளக்குக்காக அந்த இடம் ஆகி வருகிறது.

பாலை இறக்கு.

இதில் பாலின் பெயர்இ பாலைக் குறிக்காமல் பாத்திரத்தைக் குறிக்கிறது. ஓர் இடத்தில் உள்ள ஒரு பொருளின் பெயர் (தானி)இ அது சார்ந்திருக்கும் இடத்திற்குப் (தானத்திற்கு) பெயராகி வருவது தானியாகு பெயர் ஆகும்

ஒன்றின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு ஒன்றிற்கு பெயராக ஆகி வருவது ஆகுபெயர் ஆகும்.

(எ.கா) ஊர் சிரித்தது
வெற்றிலை நட்டான்
புளி தின்றான்

**17.அளபெடை**

எழுத்துக்கள் தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து நீண்டு ஒலித்தலை அளபெடை என்று கூறுவர்.

**மாத்திரை**

எழுத்துக்கள் ஒலிக்கக்கூடிய கால அளவிற்கு மாத்திரை என்று பெயர்.

**மாத்திரையின் அளவு**

கண் இமைக்கின்ற பொழுது, கை நொடிக்கின்ற பொழுது

**உயிர் எழுத்துக்கள் (12)**

| | | | |
|---|---|---|---|
| குறில் | - அ,இ,உ,எ,ஒ | - | 1 மாத்திரை |
| நெடில் | - ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ | - | 2 மாத்திரை |

**மெய்யெழுத்துக்கள் (18)**

க்,ங்,ச்,ஞ்,ட்,ண்,த்,ந்,ப்,ம்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள்,ற்,ன் - ½ மாத்திரை

**அளபெடையின் வகைகள்**

அளபெடை இரண்டு வகைப்படும்.

1. உயிரளபெடை
2. ஒற்றளபெடை

**உயிரளபெடை**

- ✓ உயிர் எழுத்துக்களில் நெடில் எழுத்துக்கள் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) ஏழும் தன்னுடைய இரண்டு மாத்திரை அளவிலிருந்து நீண்டு ஒலிப்பது உயிரளபெடை எனப்படும்.
- ✓ அளபெடுத்தற்கு அடையாளமாக நெடிலை அடுத்து குறில் எழுத்துக்கள் வரிவடிவில் இடப்படும்.

(எ.கா) மரூஉ

**உயிரளபெடையின் வகைகள்**

உயிரளபெடை நான்கு வகைப்படும்.

1. இயற்கை அளபெடை
2. சொல்லிசை அளபெடை
3. இன்னிசை அளபெடை
4. செய்யுளிசை அளபெடை (அ) இசைநிறை அளபெடை

**1.இயற்கை அளபெடை**

இயற்கையாகவே அளபெடை பெற்றிருத்தல் இயற்கை அளபெடை ஆகும்.

(எ.கா) ஆடூஉ
மகடூஉ
குழூஉக்குறி
பராஅரை

**2.சொல்லிசை அளபெடை**

பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள் தருவதற்காகவோ, வேறு பொருள் மாற்றம் தருவதற்காகவோ திரிந்து வரும் அளபெடைகள் சொல்லிசை அளபெடைகள் ஆகும். 'இ' என்ற எழுத்து சொல்லிசை அளபெடையில் அளபெடை எழுத்தாக வரும்.

(எ.கா.) நசைஇ
நசை - விருப்பம் (பெயர்)
நசைஇ - விரும்பி (வினை)

**3. இன்னிசை அளபெடை**

செய்யுளில் ஓசை குறையாத போதும், இனிய ஓசை தருதற்பொருட்டுக் குறில் நெடிலாக நீண்டு அளபெடுப்பது இன்னிசை அளபெடை எனப்படும். 'உ' என்ற எழுத்து இன்னிசை அளபெடையில் அளபெடை எழுத்தாக வரும்.

(எ.கா) உண்பதூஉம், உடுப்பதூஉம்

**4. செய்யுளிசை அளபெடை**

செய்யுளில் ஓசை குறையுமிடத்து, ஓசையை நிறைவு செய்ய அளபெடுப்பது செய்யுளிசை அளபெடை ஆகும். அ, எ, ஒ என்பன செய்யுளிசை அளபெடையில் வரும் எழுத்துகள் ஆகும். ஓரசைச்சீர் ஈரசை ஆவதற்கு 'உ' என்ற எழுத்தும் செய்யுளிசை அளபெடையில் வரும்.

(எ.கா.) படாஅப் பறை, அழூஉம், ஓஒதல்

**ஒற்றளபெடை**

ஒற்றெழுத்துக்கள் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து நீண்டு ஒலிப்பது ஒற்றளபெடை ஆகும். அளபெடுத்தற்கு அடையாளமாக அதே ஒற்றெழுத்து அதன் அருகில் மீண்டும் எழுதப்படும்.

(எ.கா.) இலங்ங்கு வெண்பிறை சூடி

**18.போலி**

ஒரு சொல்லில் எழுத்து மாறி வந்தும் பொருள் மாறாதிருப்பின் அது போலி எனப்படும்.

இது,

1.முதற்போலி
2.இடைப்போலி
3.கடைப்போலி
4.முற்றுப்போலி
5.ஒப்பில்போலி

என ஐந்துவகைப்படும்.

**1. முதற்போலி**

சொல்லின் முதலெழுத்து மாறி வருவது முதற்போலி ஆகும்.

(எ.கா) மைஞ்சு – மஞ்சு

ஞாண் – நாண்

**2. இடைப்போலி**

ஒரு சொல்லின் இடையிலுள்ள எழுத்து மாறி வருவது இடைப்போலி எனப்படும்.

(எ.கா) அரையன் - அரசன்

மன்னியர் - மன்னர்

**3. கடைப்போலி**

ஒரு சொல்லின் இறுதியிலுள்ள எழுத்து மாறி வருவது கடைப்போலி ஆகும்.

(எ.கா) குடர் - குடல்

நிலன் - நிலம்

பந்தர் - பந்தல்

**4. முற்றுப்போலி**

ஒரு சொல்லின் அனைத்து எழுத்துக்களும் மாறி வருவது முற்றுப்போலி ஆகும்.

(எ.கா) அஞ்சு - ஐந்து

**5. ஒப்பில் போலி**

போல, போலும் என்னும் சொற்கள் உவமைப் பொருளில் வராமல், ஐயப்பொருளில் வந்தால் அவை ஒப்பில் போலி ஆகும்.

(எ.கா) வருவர் போலும்

வருவார் போல இருக்கிறது.

**19.வழக்கு**

எதனை எவ்வாறு முன்னோர் வழங்கினார்களோ அதனை அவ்வாறு வழங்குதல் வழக்கு எனப்படும்.

இது,

இயல்பு வழக்கு

தகுதி வழக்கு

என இரண்டு வகைப்படும்.

**இயல்பு வழக்கின் வகைகள்**

இலக்கணமுடையது

இலக்கணப்போலி

மரூஉ மொழி

**தகுதி வழக்கின் வகைகள்**

இடக்கரடக்கல்

மங்கலம்

குழூஉக்குறி

**இயல்பு வழக்கின் வகைகள்**

**1.இலக்கணமுடையது**

இலக்கணத்தோடு பொருந்திய இயல்பான சொற்கள் இலக்கணமுடையது ஆகும்.

(எ.கா) மரம், கல், சென்றான், உண்டான்

**2.இலக்கணப்போலி**

இலக்கணத்தோடு பொருந்தாத சொற்கள் இலக்கணமுடையன போலத் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வந்தால் அவை இலக்கணப் போலி ஆகும். அவை இருவகைப்படும்.

1.எழுத்துத் திரிந்து வருவன

(எ.கா) கோயில் (கோவில்)

2. எழுத்தோ, சொல்லோ முன் பின்னாக மாறி வருவன

(எ.கா) புறநகர் (நகர்ப்புறம்)

**3.மரூஉ மொழி**

காலப் போக்கில் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் சிதைந்து வரும் சொற்கள் மரூஉ மொழி எனப்படும்.

(எ.கா) ஆனை-யானை

வாசல் - வாயில்

**தகுதி வழக்கின் வகைகள்**

**1.இடக்கரடக்கல்**

நல்லோர் அவையில் சொல்லத் தகாத சொல்லை மறைத்து அடக்கி, நாகரிகமான சொல்லால் அப்பொருளைச் சுட்டுதல் இடக்கரடக்கல் எனப்படும்.

(எ.கா) காலைக்கடன் முடித்தான்

கால் கழுவி வந்தான்

**2.மங்கலம்**

மங்கலம் இல்லாததை மங்கலமாகக் கூறுதல் மங்கலம் ஆகும்.

(எ.கா) செத்தாரைத் துஞ்சினார் என்று கூறுவதும்

சுடுகாட்டை நன்காடு என்று கூறுவதும்

**3.குழூஉக்குறி**

ஒரு கூட்டத்தார் ஏதாவது ஒரு காரணம் பற்றி ஒரு பொருளுக்குரிய வழக்கமான சொல்லை மாற்றிப் பிறர் அறியாதபடி தம் கூட்டாத்தாருக்கு மட்டுமே பொருள் விளங்குமாறு அடையாளச் சொல்லால் வழங்குவது குழூஉக்குறி எனப்படும். இவை காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டே இருக்கும்.

(எ.கா)

பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்பர்

யானைப்பாகர் ஆடையைக் 'காரை' என்பர்.

**20.வேற்றுமை**

பெயர்ச்சொற்கள் உருபு ஏற்று வேறுபட்ட பொருளைத் தருவது வேற்றுமை எனப்படும். வேற்றுமை உருபுகள் பெயரைச் சார்ந்தே வரும் இடைச்சொற்கள் ஆகும். அவை தனித்து வருவதில்லை.

(எ.கா) அவன் வந்தான்

அவனால் வந்தான்

**வேற்றுமை மொத்தம் எட்டு வகைப்படும்.**

| | |
|---|---|
| முதல் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை) | - உருபு இல்லை. |
| இரண்டாம் வேற்றுமை | - ஐ |
| மூன்றாம் வேற்றுமை | - ஆல், ஆன், ஒடு, ஓடு |
| நான்காம் வேற்றுமை | - கு |
| ஐந்தாம் வேற்றுமை | - இன் |
| ஆறாம் வேற்றுமை | - அது, ஆது, அ |
| ஏழாம் வேற்றுமை | - கண், இல், இடம் |
| எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை) | - உருபு இல்லை. |

## 21.தொகாநிலைத்தொடர்கள்

உருபு முதலியன மறையாமல் வரும் தொடர் தொகாநிலைத் தொடர் ஆகும்.

**1.எழுவாய்த்தொடர்**

முதல் வேற்றுமைப் பெயரைப் (எழுவாயைப்) பிற சொற்கள் தொடர்ந்து வருவது எழுவாய்த்தொடர் எனப்படும்.

(எ.கா) புலி பாய்ந்தது

**2.வினைமுற்றுத் தொடர்**

ஒரு தொடரில் வினைமுற்றைத் தொடர்ந்து பிற சொற்கள் வருவது

(எ.கா) ஓடின நாய்கள்

**3. பெயரெச்சத் தொடர்**

பெயரெச்சத்தைப் பெயர் தொடர்வது

(எ.கா) தேடிய கண்கள்

வருகின்ற மங்கை

**4.வினையெச்சத் தொடர்**

வினையெச்சத்தை வினை தொடர்வது.

(எ.கா) வரக் கண்டான்

**5.வேற்றுமைத் தொடர்**

ஐ, ஆல், கு, இன், அது. கண் என்னும் வேற்றுமை உருபுகளொடு கூடிய பெயரைப் பிற தொடர்வது ஆகும்.

(எ.கா) அவளைக் கண்டான்

**6.விளித்தொடர்**

விளியேற்ற பெயரைப் பிற தொடர்வது. விளியேற்ற பெயராவது, பிறரை அழைக்க வருவது ஆகும்.

(எ.கா) கண்ணே பார்

குழந்தாய் வா

**7.இடைத்தொடர் அல்லது இடைச்சொற்றொடர்**

இடைச்சொற்களைப் பிற தொடர்வது

(எ.கா) மற்று ஒன்று

இனி வாராதீர்

**8.உரித்தொடர் அல்லது உரிச்சொற்றொடர்**

உரிச்சொற்களைப் பிற தொடர்வது

(எ.கா) நனி தின்றான்

சாலச் சிறந்தது

**9.அடுக்குத்தொடர்**

விரைவு, வெகுளி, உவகை, அச்சம் முதலிய காரணத்தால் ஒரே சொல்லை ஒன்றுக்கு மேற்பட்ட பல முறை அடுக்கிக் கூறுவதே அடுக்குத்தொடர் ஆகும். பிரிந்தால் பொருள் தரும்.

(எ.கா) போ போ

வருக வருக

## 22.தொகைநிலைத்தொடர்கள்

தொகை என்றால் ‘தொக்கி வருதல்’ என்று பொருள். அதாவது ‘மறைந்து வருவது’. தொகைநிலைத் தொடர்கள் என்பது உருபுகளும், பிறவும் மறைந்து வருவது ஆகும். தொகைநிலைத்தொடர்கள் அறுவகைப்படும்.

1.வேற்றுமைத்தொகை
2.வினைத்தொகை
3.பண்புத்தொகை
4.உவமைத்தொகை
5.உம்மைத்தொகை
6.அன்மொழித்தொகை

**1. வேற்றுமைத்தொகை**

வேற்றுமை உருபு (ஐ, ஆல், கு, இன், அது, கண்) மறைந்து வருவது ஆகும்.

(எ.கா) மரம் வெட்டினான் (மரத்தை வெட்டினான்) – இரண்டாம் வேற்றுமைத்தொகை

இதில் இரண்டாம் வேற்றுமை உருபான ‘ஐ’ என்பது மறைந்து வந்துள்ளது.

**வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை**

வேற்றுமை உருபோடு உடைய, ஆகிய போன்ற சொற்களும் சேர்ந்து மறைந்தால் அதனை உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்று கூறுவர். ஆறாம் வேற்றுமையில் மட்டும் உருபும் பயனும் சேர்ந்து மறைவதில்லை.

(எ.கா) படநாகம் - படத்தை உடைய நாகம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் (ஐ, உடைய) உடன்தொக்கதொகை

**2. வினைத்தொகை**

காலம் காட்டும் இடைநிலை, விகுதி முதலிய வினை உருபுகள் பெயரெச்சத்தில் மறைந்து வருவது வினைத்தொகையாகும். இது நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களையும் மறைமுகமாய் உணர்த்தும். இதனைக் காலம் கரந்த பெயரெச்சம் என்பர்.

(எ.கா) வளர்பிறை - வளர்ந்த பிறை
வளர்கின்ற பிறை
வளரும் பிறை

(ஊறுகாய், சுடுசோறு, அலைகடல்)

**3. பண்புத்தொகை**

‘ஆகிய’ என்னும் பண்புருபு மறைய வருவது பண்புத்தொகை ஆகும். பண்புப்பெயரை வேறொரு பெயர் தொடர்ந்து வரும்.

(எ.கா) பைந்தமிழ் (பசுமை + தமிழ்)
மெல்லிலை (மென்மை + இலை)
வட்டக்கல் (வட்டம் + கல்)

**இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

பொதுப்பெயரால் சிறப்புப்பெயரும் சிறப்புப்பெயரால் பொதுப்பெயரும் விளக்குவதற்காக இரண்டும் ஒட்டி வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆகும்.

(எ.கா) சாரைப்பாம்பு

தைத்திங்கள்

**4. உவமைத்தொகை**

போன்ற, போல முதலிய உவம உருபுகள் மறைந்து வருவது உவமைத்தொகை ஆகும்.

(எ.கா) மதிமுகம் - மதி போன்ற முகம்

முத்துப்பல் - முத்துப் போன்ற பல்

**5. உம்மைத்தொகை**

'உம்' என்ற இடைச்சொல் மறைந்து வந்தால் உம்மைத்தொகை ஆகும்.

(எ.கா) இரவு பகல் - இரவும் பகலும்

அவன் அவள் - அவனும் அவளும்

**6. அன்மொழித்தொகை**

வேற்றுமைத்தொகை, பண்புத்தொகை, வினைத்தொகை, உம்மைத்தொகை, உவமைத்தொகை ஆகிய ஐந்து தொகைகளின் இறுதியில் வேறு பிற சொற்களும் மறைந்து வருவது அன்மொழித்தொகை ஆகும்.

(எ.கா) கொடியிடை வந்தாள்

இதில் கொடியிடை என்பது 'கொடி போன்ற இடையை உடையவள்' என்று வருகிறது. இதில் போன்ற என்ற ஒரு சொல்லும், 'இடையை' அடுத்து அதற்கு மேல் ஐ, உடையவள் என்ற இரு சொற்களும் மறைந்து வந்துள்ளன.

**பன்மொழித்தொகை**

இரண்டு சொற்களுக்குமேல் தொகைச் சொற்கள் ஒட்டி வந்தால் அது பன்மொழித்தொகை எனப்படும்.

(எ.கா) கொவ்வைச் செங்கனிவாய்

(கொவ்வை போன்ற செம்மையாகிய கனியைப் போன்ற வாய்)

## 23.உருவகம்

உவமிக்கப்படும் பொருளையும் உவமையையும் ஒன்றே போலக் கருதுமாறு பிணைத்துக் கூறுவது உருவகம் ஆகும். உருவகத்தில் உவமைத்தொகைச் சொற்கள் முன் பின்னாக மாறி அமைந்திருக்கும்.

(எ.கா) முகமதி - முகமாகிய மதி

வாய்ப்பவளம் - வாயாகிய பவளம்

**தொகுப்புரை**

அலகு ஐந்தில் மாணவர்களின் அடிப்படைத் திறன்களை மேம்படுத்தும் விதமாகத் தொடர் வகைகளைப் பற்றி அறியவும், மரபுத் தொடர்கள், பழமொழிகள் பற்றிய பொருள் புரிதலை ஏற்படுத்திடவும் பயன்பாட்டில் இருக்கக்கூடிய பிறமொழிச் சொற்களை அடையாளம் கண்டு களையும் விதமாகவும் தமிழாக்கம் செய்து பயன்படுத்திடவும் வழூஉச் சொற்களை இனங்கண்டு மொழிநடையில் அன்றாடம் பயன்படுத்தும் விதமாகவும், இலக்கணக் குறிப்புகளை அறிந்து மொழித்தவறுகளைச் செய்யாமல் திருத்தமான நடைகளை உரைநடையிலும் பேச்சிலும் பயன்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

## பயிற்சி வினாக்கள்

## பகுதி – அ

**ஒருமதிப்பெண் வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. கண்ணன் வந்தான் - எவ்வகைத்தொடர்?

**(அ) எழுவாய்த்தொடர்** (ஆ)வேற்றுமைத்தொடர்

(இ)வினைமுற்றுத்தொடர் (ஈ)பெயரெச்சத்தொடர்

2.வந்தான் சாத்தன் - எவ்வகைத் தொடர்?

(அ)எழுவாய்த்தொடர் **(ஆ)வினைமுற்றுத்தொடர்**

(இ)வினையெச்சத்தொடர் (ஈ)விளித்தொடர்

3. கரும்பிற்கு வேலி – எவ்வகைத்தொடர்?

(அ)வேற்றுமைத்தொடர் (ஆ)இரண்டாம் வேற்றுமைத்தொடர்

**(இ)நான்காம் வேற்றுமைத்தொடர்** (ஈ)வினைமுற்றுத்தொடா

4. அன்னாய் கேள் - எவ்வகைத் தொடர்?

(அ)எழுவாய்த்தொடர் **(ஆ)விளித்தொடர்** (இ)பெயரெச்சத்தொடர்

(ஈ)வினையெச்சத்தொடர்

5.கீழ்க்கண்டவற்றுள் சரியான மரபுச் சொல் எது?

(அ)சோறு தின்னவா **(ஆ)சோறு உண்ண வா** (இ)சோறு சாப்பிட வா (ஈ)சோறு திங்க வா

6. எது சரியான மரபுச் சொல்?

(அ)யானைக்குட்டி **(ஆ)யானைக் கன்று** (இ)யானைக்குருளை (ஈ)யானைமறி

7. எது தவறான மரபுச்சொல்?

(அ)மாவிலை (ஆ)வாழைத்தோட்டம் (இ)கற்குவியல் **(ஈ)யானைக் குட்டி**

8. எது தவறான மரபுச்சொல்?

(அ)யானை பிளிறும் (ஆ)குதிரை கனைக்கும்

**(இ)கழுதை எக்காளமிடும்** (ஈ)நரி ஊளையிடும்

9. ஆடு இருக்கும் இடம் எந்த பெயரால் குறிக்கப்படுகின்றது?

**(அ) பட்டி** (ஆ) தொழுவம் (இ) கொட்டில் (ஈ) பண்ணை

10. பழமொழியை தொல்காப்பியர் என்னவென்று கூறுகிறார்?

**(அ) முதுசொல்** (ஆ) பழைய சொல் (இ) தமிழ்ச்சொல் (ஈ) பழுத்தமொழி

11. கும்பாபிேஷகம் என்பதன் தமிழ்ச்சொல் எது?

அ) பூசை ஆ) நீராட்டு **இ) குடமுழுக்கு** ஈ) திருவிழா

12. ஹோட்டல் - தமிழ்ச்சொல் எது?

(அ) ஓட்டல் **(ஆ) உணவகம்** (இ) மெஸ் (ஈ) விடுதி

13. புஷ்பம் - தமிழ்ச்சொல் எது?

(அ) புட்பம் **(ஆ) மலர்** (இ) அரும்பு (ஈ) புஸ்பம்

14. டீஸ்டால் - தமிழ்ச்சொல் கூறுக?

அ) டீ கடை **ஆ) தேநீர் அங்காடி** இ) டீ நிலையம் (ஈ) தேனீர்கடை

15.அக்கறை – என்பதன் தமிழ்ச்சொல் எது?

(அ) அக்கரை **(ஆ) கவனம்** (இ) பொறுப்பு (ஈ) மிசை

16. கீழ்க்கண்டவற்றுள் எது சரியான தொடர்?

**(அ) என் மகன் சென்றான்** (ஆ) என் மகன் சென்றார்கள்

(இ) எனது மகன் சென்றான் (ஈ)எனது மகன் சென்றார்கள்

17. சரியானத் தொடரை தேர்ந்தெடுக்க?

அ) மாடு மேய்ந்தன **ஆ) மாடு மேய்ந்தது**

இ) மாடு மேய்ந்திற்று ஈ) மாடுகள் மேய்ந்தது

18. பிழை நீக்கி எழுதுக – கருவேப்பிலை

(அ) கருவேயிலை (ஆ) கறுவெஇலை (இ) கரிவேப்பிலை **(ஈ) கறிவேப்பிலை**

19. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க

**(அ) நாயும் நம்பியும் வந்தனர்** (ஆ) நாயும் நம்பியும் வந்தன

(இ) நாயும் நம்பியும் வந்தது (ஈ) நாயும் நம்பியும் வந்தார்கள்

20 சீயக்காய் என்ற சொல்லில் திருந்திய சொல் எது?

**(அ) சிகைக்காய்** (ஆ) சீவக்காய் (இ) அரப்புக்காய் (ஈ) சீக்காய்

21. பிழை திருத்தி எழுதுக – முழுங்கு

(அ) முலுங்கு (ஆ) முளுங்கு **(இ) விழுங்கு** (ஈ) விலூங்கு

22. பிழை திருத்தி எழுதுக – வெத்திலை

(அ) வெத்தலை **(ஆ) வெற்றிலை** (இ) வெறிலை (ஈ) வெற்றலை

23.பிழை திருத்தி எழுதுக – தேனீர்

(அ) தேன்நீர் (ஆ) தெந்நீர் (இ) தேன்னீர் **(ஈ) தேநீர்**

24. பிழை திருத்தி எழுதுக - தலகாணி

(அ)தலவாணி (ஆ)தளவாணி **(இ) தலையணை** (ஈ) தளையணை

25. மாடுகள் மேய்ந்தது - என்ன வழு?

**(அ) பால்வழு** (ஆ) இடவழு (இ) திணை வழு (ஈ) காலவழு

26. குயில் குழறும் - என்ன வழு?

(அ) விடைவழு (ஆ) வினாவழு **(இ) மரபு வழு** (ஈ) திணை வழு

27. நனிதின்றான் - இலக்கணக் குறிப்புத் தருக

(அ) வினைத்தொகை (ஆ) பண்புத்தொகை **(இ) உரிச்சொற்றொடர்** (இ) பெயரெச்சம்

28. ஓடாப் பையன் - இலக்கணக் குறிப்புத் தருக
(அ) பண்புத் தொகை (ஆ) வேற்றுமைத்தொகை
**(இ) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்** (ஈ) பெயரெச்சம்

29. கருங்கல் - இலக்கணக் குறிப்புத் தருக
(அ) இரண்டாம் வேற்றுமைத்தொகை **(ஆ) பண்புத்தொகை**
(இ) வினைத்தொகை (ஈ) அன்மொழித்தொகை

30. பவளவாய் - இலக்கணக் குறிப்புத் தருக
(அ) உம்மைத்தொகை **(ஆ) உவமைத்தொகை** (இ)அன்மொழித்தொகை (ஈ) பெயரெச்சம்

31. ஓடியவன் நின்றான் - இலக்கணக்குறிப்புத் தருக.
(அ) வினைத்தொகை (ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
**(இ) வினையாலணையும் பெயர்** (ஈ) பண்புத்தொகை

32 இரவுபகல் - இலக்கணக்குறிப்புத் தருக.
**(அ) உம்மைத்தொகை** (ஆ) நான்காம் வேற்றுமைத்தொகை
(இ) பண்புத்தொகை (ஈ) உவமைத்தொகை

33. சேர சோழர் என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?
(அ)வினைத்தொகை (ஆ)வேற்றுமைத்தொகை **(இ)உம்மைத்தொகை** (ஈ) பண்புத்தொகை

34. பெயரெச்சம் எதிர்மறையில் வருவது எது?
(அ) பெயரெச்சம் (ஆ) வினையெச்சம்
**(இ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்** (ஈ) வியங்கோள் வினைமுற்று

35. வாழ்க - என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?
(அ) பெயரெச்சம் (ஆ) வினையெச்சம்
(இ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் **(ஈ) வியங்கோள் வினைமுற்று**

36. பிறமொழிக்கான தமிழ்ச்சொல் தருக – ஜோதிடம்
(அ). ஜோ'யம் (ஆ. ஜாதகம் **(இ). நிமித்திகம்** (ஈ). கணிதம்

37. பிறமொழிக்கான தமிழ்ச்சொல் தருக – திரு'டி
**(அ). கண்ணேறு** (ஆ). கழித்தல் (இ). கண்ணடு (ஈ). கண்ணடி

38. பிறமொழிக்கான தமிழ்ச்சொல் தருக – பிரதட்சணம்
(அ). பிரதானம் **(ஆ). சுற்றிவரல்** (இ). பிரசாதம்
(ஈ).பிரதோ'ம்

39. பிறமொழிக்கான தமிழ்ச்சொல் தருக – நாஸ்தா
**(அ).காலையுணவு** (ஆ).மதிய உணவு (இ).மாலையுணவு (ஈ).இரவு உணவு

40. பிறமொழிக்கான தமிழ்ச்சொல் தருக – ரக்கிரி
(அ). காய் (ஆ). பழம் **(இ). கீரை** (ஈ). கறி

## பகுதி – ஆ

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்**

1. கீழ்க்கண்ட சொற்களை எழுத்துப்பிழை நீக்கம் செய்து எழுதுக.

1. குடக்கூலி 2. வெண்ணீர் 3. அருவாமனை 4. நஞ்சை 5. உசிர்

2.எழுவாய்த்தொடர், வினைத்தொடர் குறித்து எழுதுக.

3.வேற்றுமைத் தொடர் குறித்து எழுதுக.

4. அலைக்கழித்தல், அமளிதுமளி ஆகியவற்றை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

5. மரபுத்தொடர் குறித்து எழுதுக.

6. இரண்டு பழமொழிகளை பொருளுடன் எழுதுக.

7. கீழ்க்கண்ட சொற்களுக்கான தமிழ்ச்செற்களை எழுதுக.

(அ) அங்கீகாரம் (ஆ) அபயம் (இ) ஏராளம் (ஈ) பட்ஸெட் (உ) பேட்டா

8. கீழ்க்கண்ட சொற்களைத் திருத்தி எழுதுக

(அ) வத்தல் (ஆ) திருவானி (இ) இழனி (ஈ) அருகாமையில் (உ) காத்து

9. பிழையைத் திருத்தி எழுதுக.

(அ) விளா நோகச் சிரித்தாள்

(ஆ) பயிரைப் பாழாக்குகின்ற புளுபூச்சிகளைக் கொள்ளும் மருந்து இது

(இ) இடதுகையில் எடு

(ஈ) பாவக்காய் வாங்கிட்டு வா

(உ) காழை நேரத்தில் நீள மழர்சூடி மகிழ்ந்தார்

10. கீழ்க்கண்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்புத் தருக

(அ) வாழ்க (ஆ) பாடுதல் (இ) வெண்டாமரை (ஈ) அன்னப்பறவை (உ) மலரடி.

11.உம்மைத்தொகை, வேற்றுமைத்தொகைளை விளக்குக

12. தொடர்வகைகள் குறித்து எழுதுக

**பகுதி - இ**

**எட்டு மதிப்பெண் வினாக்கள்**

1. தொடர் வகைளை எடுத்துக் காட்டுடன் எழுதுக.

2. மரபுத்தொடர், பழமொழிகள் பற்றி எழுதுக.

3 இலக்கணக் குறிப்பு கண்டுபிடித்தல் எவ்வாறு என்பது குறித்து எழுதுக.

4. வழூஉச்சொற்கள் நீக்குதல் குறித்துக் கட்டுரை வரைக.

5.வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை ஆகியவற்றை விளக்கி எழுதுக.

6. பிறமொழிசொற்களுக்கான தமிழாக்கம் குறித்து கட்டுரை வரைக.

**முடிவுரை**

பக்தி இலக்கியங்ளைக் கற்பதன் மூலம் பக்தி நெறியினையும், சமய நல்லிணக்கத்தையும் தெரிந்து பின்பற்ற ஏதுவாக முதல் அலகு வடிவமைக்கப்பட்டுள்ளது. சிற்றிலக்கியங்களின்வழி இலக்கியச் சுவையினையும் பண்பாட்டு அறிவினையும் பெறும் விதமாக அலகு இரண்டு அமைந்துள்ளது. மூன்றாம் அலகு பட்டப்படிப்பினைப் படிக்கும்போதே பெரும்பான்மையான தமிழ் இலக்கியங்கள் குறித்த அறிவினைப் பெற்று அதனைப் பற்றிய ஆழ்ந்தறிய உதவுகிறது. தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வரலாற்றினை இலக்கியங்கள் வாயிலாக அறிய அலகு நான்கு பயன்படுகிறது. போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்குத் தமிழ்ப் பாடத்தினைப் பயன்கொள்ளும் வகையில் உரிய

பயிற்சிகளையும் பயன்பாட்டு தொடர் முறைகளையும் அந்நிய மொழி கலப்பினைத் தடுக்கும் வகையிலும் ஐந்தாம் அலகு அமையப்பெற்றுள்ளது.

**<u>பார்வை நூல்கள்:</u>**


1. அடிப்படைத் தமிழ் இலக்கணம் - எம். ஏ. நு.ஃ.மான், வாசகர் சங்கம் வெளியீடு, 1999
2. நல்ல தமிழ் எழுத வேண்டுமா? அ.கி. பரந்தாமனார், பாரி நலையம், 1988, சென்னை
3. பிழை இல்லாமல் எழுதுவோம், இரா. இளங்குமரன், மாணவர் பதிப்பகம், சென்னை – 2004.
4. தமிழ் இலக்கிய வரலாறு – சிற்பி பாலசுப்பிரமணியன், கவிதா பதிப்பகம், சென்னை. 2004
5. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு – தமிழண்ணல் - சாகித்ய அகாதெமி, சென்னை. 1972
6. வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு – பாக்யமேரி, பூவேந்தன் பதிப்பகம், சென்னை. 2022
7. புதிய தமிழ் இலக்கிய வரலாறு – சிற்பி பாலசுப்பிரமணியன், நீல. பத்மநாபன், சாகித்ய அகாதெமி, சென்னை. 2013
8. தமிழ்விடு தூது – பதிப்பும் உரையும் டாக்டர் ப. சரவணன், சந்தியா பதிப்பகம், சென்னை. 2018.
9. தமிழ்ச்சிற்றிலக்கியங்கள் - முனைவர் இரா. சந்திரசேகரன், 2021, சாரதா பதிப்பகம், சென்னை. 2019.
10. நாலாயிரத் திவ்ய பிரபந்தம் மூலமும் உரையும் ( 2 பாகங்கள்) - தங்கத்தாமரை பதிப்பகம், சென்னை. 2016.


**இணைய இணைப்புகள்** www.https//ta.m.wiki.pedia.org,
https://nearchanthi.wordpress.com,
www.tamilvu.org,
www.Tamilvirtualuniversity **or** www.Tamilvirtualacademy